# REVENUE DEPARTMENT

## Departmental Tests

Test Code No: 136

Name of the Test:- REVENUE TEST - PART - III

## Brief Notes On Revenue Subjects

**K.P. PUGALENTHI., M.A., B.Ed.,**
**Tahsildar (Rtd).,**
101, Govindammal Nagar,
Seelanaickenpatti
Salem - 636201.
**Cell: 98654-22161.**

# REVENUE TESTS


| Test Code No: 136 - The Revenue Test- Part-III | | Page |
|---|---|---|
| | Syllabus | |
| 1 | Standing Orders of Board of Revenue – Volume – III & IV | 1 |
| 2 | Tamil Nadu Land reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 | 41 |
| 3 | Tamil Nadu Land Reforms of Reduction of Ceiling on Land 17/1970 (Amended Act) | – |
| 4 | The Tamil Nadu Cultivation Tenants Protection Act 25 of 1955 | 73 |
| 5 | The Tamil Nadu Cultivation Tenants (Payment of fair Rent ) Act o 1956 | 77 |
| 6 | The Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands)ACT 57/1961 | 81 |
| 7 | The Tamil Nadu Agricultural Lands (Record of Tenancy Rights) Act 10/1969 | 87 |
| 8 | The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership Act, 40/1971 | 89 |
| 9 | The Tamil Nadu Rural Artisans (Conferment of ownership of Kudiyiruppu) Act,1976(TamilNadu Act 38/1976) | 91 |
| 10 | The Tamil Nadu Agricultural Labourers Fair wages Act, 1969 | – |
| 11 | Minimum Wages Act, 1948 | 95 |
| 12 | Tamil Nadu BhoodanYagna Act, 1958 | 97 |
| 13 | Tamil Nadu Act VIII of Survey & Boundaries Act | 105 |
| 14 | Chain Survey Manual | 107 |
| 15 | Survey & Lands Records Manual | – |
| 16 | Regulation Act of VII of 1817 – Charitable Endowments Act | 119 |
| 17 | Right to Education Act, 2009 | 121 |
| 18 | Tamil Nadu Minor Mineral concessions Rules, 1959 | 141 |
| | | |
| | Previous Years- Questions & Answers (Solved Papers | |
| | | |
| i | Objective Type- Without Books | 157 |
| ii. | Descriptive Type -With Books. | 161 |

| வருவாய் நிலை ஆணை – தொகுதி III (R.S.O Vol III) | | | |
|---|---|---|---|
| | | | |
| R.S.O | நிலை ஆணை | | |
| 92 | வழக்கு முன்னறிவிப்பு | | |
| 93 | வழக்குகளில் எதிர்வாதம் செய்தல் | | |
| 94 | அரசு சார்பில் வழக்குகள் தொடர்தல் | | |
| 98 | அரசு வழக்கறிஞர்கள் கடமைகளும் ஊதியங்களும் | | |
| 100 | கால்நடை நோய் | | |
| 101 | பிறப்பு–இறப்பு–பதிவு செய்தல் | | |
| 102 | கொள்ளை நோய் தடுப்பு நடவடிக்கைகள் | | |
| 115 | கலெக்டர்–கடமைகள் | | |
| 116 | கோட்டாட்சியர்–கடமைகள் | | |
| 137 | அலுவலக மேலாளர் H.S. (Gl) | | |
| 138 | தாசில்தார்கள் மற்றும் துணை தாசில்தார்கள் | | |
| 141 | வருவாய் ஆய்வாளர்கள் | | |

| வருவாய் நிலை ஆணை – தொகுதி IV (R.S.O Vol IV) | | | |
|---|---|---|---|
| | | | |
| R.S.O | நிலை ஆணை | | |
| 173 | சான்றிட்ட நகல் வழங்குதல் | | |
| 189 | பணம் திருப்பிக் கொடுத்தல் | | |
| 190 | சில்லறைச் செலவினம் | | |
| 191 | பலவகை செலவுகள் | | |
| 192 | எழுதுபொருள் முதலியனவும், படிவங்களும் | | |
| 197 | வாரிசு அற்று அரசினரைச் சேரும் சொத்தும் உரிமை கோரப்படாத சொத்தும். | | |
| 200 | நிறைவேற்றுக் கட்டளைகளை சேர்ப்பித்தல். | | |
| 201 | கிராமங்கள், தாலுகாக்கள், மாவட்டங்கள் இவற்றின் எல்லைகள் மாறுதல். | | |
| 202 | பெரியகோண அளவை நிலையங்களையும் நில அளவை மாவட்டக் குறிகளையும் பாதுகாத்தல். | | |
| 205 | கால்நடைப் பட்டியில் அடைக்கப்பட்ட கால்நடைகள் | | |
| 211 | மீன்பாசிக் குத்தகை | | |
| 213 | பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும்<br>Agricultural Pests and Diseases. | | |

## R.S.O. 92. வழக்கு முன்னறிவிப்பு

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றங்களில் அசல் வழக்குகளைத் தொடுப்பவர்கள் 1908-ம் வருட சிவில் நடைமுறை விதித் தொகுப்பின் 80 ஆவது பிரிவின் கீழ், அரசுக்கு ஒரு வழக்கு முன்னறிவிப்பு (suit notice) கொடுக்க வேண்டும். வழக்கு முன்னறிவிப்பிற்கான 60 நாட்கள் கால அவகாசம் முடிந்த பின், வழக்காட நினைப்பவர், அரசுக்கு எதிராக வழக்கு தொடுக்கலாம்.

கலெக்டரின் கட்டுப்பாட்டிற்குட்படாத துறைகளைச் சார்ந்த வழக்குகளுக்கான முன்னறிவிப்பினை சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்கு அனுப்பிவிட்டு, வேறெந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை.

கலெக்டரின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட துறையின் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய வழக்குகளின் அறிவிப்பைப் பெற்று, அந்த அறிவிப்பின் நகலொன்றை அவர் சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கைக்கு அனுப்ப வேண்டும். குறை கூறப்பட்ட நடவடிக்கைகளின் தகுதி வாய்ந்தவை இருப்பின் உடனே விசாரணை அளிக்க வேண்டும். வழக்கு முன்னறிவிப்பு வரப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பதில் தெரிவிக்க வேண்டும்.

## R.S.O. 93 வழக்குகளில் எதிர்வாதம் செய்தல் :-

கலெக்டரின் கட்டுப்பாட்டிலுள்ள துறை சம்பந்தப்பட்ட வழக்குகளில், சம்பந்தப்பட்ட துறை அலுவலருக்கு பிராதின் நகலை அனுப்பி, தாக்கல் செய்யக் கூடும் 'வரைவு எழுத்து வாக்குமூலத்தை (Draft written Statement) அரசு வழக்கறிஞரை கலந்து தயார் செய்யப் பெற்று, பின் வழக்கினை எதிர்த்து வாதாடுவதற்குரிய ஒப்புதலை வழங்க R.S.O. 93(2)-படி கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் அரசு சார்பிலான எதிர் வழக்குரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் வேண்டும். தவறினால், நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு நாளில் தாக்கல் செய்யலாம். எதிர் வழக்குரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தயார் செய்ய வேண்டும். அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்துரை அதற்கு முன்னதாகப் பெறுதல் அவசியம்.

## R.S.O.97 அரசு வழக்கறிஞர்களின் கடமைகள்:-

மாவட்ட நடுவர் (கலெக்டர்) மற்றும் மாவட்ட நீதிபதி ஆலோசனை அடிப்படையில் அரசு வழக்கறிஞர் 3 ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்படுகிறார்; 60 வயது எய்திய உடன் அவர் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

அரசு அலுவலர்க்கு சட்டரீதியான பல்வேறு வகையான ஆலோசனைகள் வழங்குதல் அரசு வழக்கறிஞரின் கடமை ஆகும். மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைகளின் அடிப்படையில் அனைத்து சிவில் வழக்குகளையும் அரசு சார்பில் நீதிமன்றத்தில் நடத்துகிறார். சிவில் வழக்குகளில் அரசு நலன், அரசு சொத்து காப்பதில் முக்கிய பங்காற்றுகிறார். நீதிமன்ற தீர்ப்பு பகரப்பட்டவுடன் தாமதமின்றி தீர்ப்பு நகல்களைப் பெற்று கலெக்டருக்கு அனுப்புகிறார். கோர்ட்டில் அரசுக்கு பாதகமாக பார்க்கப்பட்ட தீர்ப்புகளில், அரசு நலன் காத்தல் குறித்து தனது சட்டக் கருத்துக்களை (Legal Opinion) வழங்குவதோடு, உரிய காலத்திற்குள் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் அரசு சார்பில் மேல்முறையீடு செய்தல் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அவரது மிக முக்கியமான கடமை.

R. SO 100

## 3. கால்நடை நோய்கள் — கிராம நிர்வாக அலுவலர்களுடைய பணிகள்

கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் சாதாரணமாக கால்நடைகளை தாக்கக்கூடிய நோய்களும் கொள்ளை நோய்களும் பரவாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதுபோன்ற நேர்வுகளில் தடுப்பூசி முறை அல்லது நோய் தடுப்பதை பற்றி சிகிச்சை செய்து கொள்வது பற்றி கால்நடை உரிமையாளருக்கு அறிவுரைகளை கிராம நிர்வாக அலுவலர்கள் வழங்கவேண்டும். மேலும், கால்நடைகளுக்கு நோய் கண்டவுடன் உடனடியாக கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பி ஒரு நகல் கால்நடை பராமரிப்பு அலுவலர்களுக்கும் அனுப்பவேண்டும். அவ்வலுவலர் கிராமத்துக்கு வந்து உரிய நோய் தனிய உரிய நடவடிக்கை எடுப்பார். இதனை கிராம நிர்வாக அலுவலர் கண்காணித்து இதற்கான அறிக்கையை வட்டாட்சியருக்கும், கால்நடை பராமரிப்பு அலுவலர்களுக்கும் வாரத்திற்கு இருமுறை அனுப்பவேண்டும். மேலும், தொற்றக் கூடிய அல்லது பரவக் கூடிய நோய்களால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை இதர கால்நடைகளில் இருந்து விலக்கி வைக்கவேண்டும் என்றும், தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும், கால்நடை உரிமையாளருக்கு அறிவுரைகள் வழங்கவேண்டும்.

பொதுவாக இம்மாநிலத்தில் கால்நடைகளுக்கு வெகு சாதாரணமாக தோன்றக் கூடிய வியாதிகள்:

(1) வெக்கை :

வெக்கை அல்லது கால்நடை பிளேக் என்பது மரணம் ஏற்படுத்தக்கூடிய ஒரு கொடிய நோய் ஆகும். இது எளிதில் மற்ற கால்நடைகளுக்கு பரவக்கூடிய நோய் ஆகும். இந்த வியாதிக்கு காரணம் பாதிக்கப்பட்ட கால்நடையின் ரத்தத்தில் உள்ள விஷ நீர் வாய், மூக்கு, கண்கள், மலம் ஆகியவைகளிலிருந்து வெளிப்படுவது ஆகும். அவ்வாறு வெளிப்படும் விஷநீரின் கிரிமிகள் மூலம் இந்த நோய் பரவுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட கால்நடையை நல்ல முறையில் உள்ள கால்நடையுடன் சேர்க்காமல் பிரித்து வைக்கும்படி கிராமத்தில் எல்லோருக்கும் தண்டோரா மூலம் தெரிவிக்க வேண்டும்.

(2) அடைப்பான் :

அடைப்பான் என்னும் வியாதி ஆனது அனைத்து வகைகளை சேர்ந்த பிராணிகளையும் மனிதர்களையும் பாதித்து மரணம் ஏற்படுத்தக்கூடிய வியாதி ஆகும். ஒரு விதமான கிருமி ரத்தத்திற்குள் புகுவதால் இந்த வியாதி உண்டாகிறது. நோய்வாய்ப்பட்ட பிராணிகள் இறைச்சியை சாப்பிடுவதாலும் அல்லது அடைப்பான் தாக்கி இறந்துபோன பிராணிகளின் சடலங்களை கையாளுவதாலும் மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது. எனவே, சடலத்தை மிகவும் கவனமாக முடிவு செய்வது அவசியம். நோய்கண்டவுடன் கால்நடை அலுவலர்களுக்கு தகவல் கொடுத்து தகுதியான ''வாக்ஸின்'', என்ற மருந்தை ஊசியின் மூலம் செலுத்தி பாதுகாக்கவேண்டும்.

(3) சப்பை நோய் :

சப்பை நோய் மாடுகளுக்கு குறுகிய காலத்தில் தாக்கி உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் கொடிய நோய் ஆகும். இந்த சப்பை நோய் தோள், கழுத்து மற்றும் பக்கங்களில் வலியுடன் கூடிய வீக்கம்தான் இந்த நோய்க்குரிய அறிகுறிகள். பொதுவாக வறண்டு போன பகுதிகளில் மட்டுமே இந்த நோய் காணப்படும். டெல்டா பகுதிகளில் இந்த நோயின் தாக்கம் அவ்வளவு அதிகம் இருக்காது. குச்சி வடிவம் உள்ள ஒரு சிறு நுண்ணுயிர்தான் இந்த நோயை விளைவிக்கிறது. உணவு மூலமாக இரைப்பைக்குள் செல்வதாலோ அல்லது ஒரு காயத்துடன் சம்பந்தப்படுவதனாலோ பிராணிக்கு தொற்றிக்கொள்ளும். இந்தநோய் கண்டவுடன்

அந்தப் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை உதவி மருத்துவருக்கு தெரிவித்து பாதுகாப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

**(4) தொண்டை அடைப்பான் நோய்:**

பசு மாடுகளையும், எருமை மாடுகளையும் தாக்கக்கூடிய கொடிய நோயாகும். இந்த நோய்க் கிருமிகள் குளங்களுக்கு அருகிலுள்ள ஈரமான சதுப்பு நிலங்களிலும், தண்ணீர் சரியாக வடிக்காத நிலங்களிலும் வாழ்கிறது. எருமைகள் மண்ணிலாவது தண்ணீரிலாவது புரளும் வழக்கமானதால் இவைகளுக்கு எளிதாக தொற்றிக்கொள்கிறது. வாய்,தொண்டை, இரப்பை, குடல் அல்லது உடலின் புண் மூலம் இந்த வியாதி தொற்றிக் கொள்ளும். நோய்க்கண்ட உடன் மருத்துவர் மூலம் தடுப்பு ஊசி போடுவது நல்லது.

**(5) ஆட்டம்மை:**

ஆட்டம்மை என்பது மனிதர்களுக்கு காணும் பெரியம்மை போல் ஒரு வியாதி ஆகும். தொண்டையின் உட்புறத்திலும் செம்மறி ஆட்டின் மடியின் மேலும், வாய், முகம், உதடு ஆகிய பாகங்கள் மீதும் அம்மை போன்ற கொப்புளங்கள் ஏற்படும். இந்த நோய் முதலில் காய்ச்சல் உண்டாகி எளிதில் தொற்றிக் கொள்ளக் கூடியதாகும். Sheep Pox Vaccine மூலம் நோய் வராமல் தடுக்கலாம்.

**(6) ராபீஸ் (RABIES):**

ராபீஸ் என்னும் நோய் நாய்களுக்கு ஏற்படும் நோயாகும். இதர பிராணிகளுக்கும் வரும். இது மரணத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வெறிநோயாகும். பிராணிகளின் பழக்கங்களில் குறிப்பிட்ட மாறுதல், மந்தம், அசாதாரணமாக அன்பு காட்டுதல், அமைதியின்மை, பயத்துடன் ஒளிந்துக் கொள்ளுதல், கடுமையான பசி, வைக்கோல் (ம) துணி ஆகியவை சாப்பிடுதல் போன்றவை இந்த நோய்க்குண்டான அறிகுறியாகும். இது மாதிரி அறிகுறிகள் தோன்றிய உடனே நாயை பிடித்து சங்கிலியால் கட்டிவைத்து கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் வெறித்தன்மையான குறிகள் தோன்ற ஆரம்பித்தவுடன் எது அகப்பட்டாலும் அதனை கடிக்க முயலும். மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் வெறி நாய் இறந்துவிடும்.

எவ்வித தூண்டுதலின்றி ஒரு நாய் ஒருவரை கடித்துவிட்டால் கடிபட்ட நபர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறவேண்டும். கடித்த நாயை பிடித்து மருத்துவ மனைக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கவேண்டும். உடனடியாக பாதிக்கப்பட்ட இடத்தினை சோப்புக் கரைசல் அல்லது சுத்தம் செய்யக்கூடிய இதரப் பொருட்களை கொண்டு கழுவி விட வேண்டும். அடிப்பட்ட இடத்தில் தையல் போடக்கூடாது. கடித்த நாய் 10 தினங்களுக்குள் இறந்து விட்டால் கடிப்பட்ட நபரை உடனடியாக வெறிநோய் மருத்துவ சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தவேண்டும்.

R.S.O.101



# ஸ்ரீ பிறப்பு இறப்பு பதிவு செய்தல்

(1. பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம், 1969

2. தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகள், 2000)

## பதிவாளர்கள்

| | | |
|---|---|---|
| கிராமப்பஞ்சாயத்து | – | (VAO) வருவாய்த்துறை |
| சிறப்பு ஊராட்சி | – | சிறப்பு ஊராட்சித் துறை |
| நகராட்சி | – | நகராட்சி நிர்வாகத் துறை |
| மாநகராட்சி | – | மாநகராட்சி நிர்வாகத் துறை |

## செயல்படுத்தும் துறைகள்

**நாட்டளவில் :** இந்தியத் தலைமைப் பதிவாளர்

**மாநில அளவில் :**

மாநில முதன்மைப் பதிவாளர் (பொது சுகாதாரம் மற்றும் காப்பு மருந்து இயக்குநர்)

**மாவட்ட அளவில் :**

1. மாவட்டப் பதிவாளர் (மாவட்ட வருவாய் அலுவலர்) பதிவு அலுவலகங்களை ஆய்வு செய்தல், பயிற்சி வகுப்புகள் அமைத்துக் கொடுத்தல், தகவல் அளிக்க மறுப்பது தவறான தகவல் அளிப்பது, பெயர் எழுத மறுப்பது, போன்ற நடவடிக்கைகளுக்கு தண்டனை விதித்தல்.
2. கூடுதல் மாவட்டப் பதிவாளர் (துணை இயக்குநர் சுதாதாரப் பணிகள்)
3. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகள் (சம்பந்தப்பட்ட ஆணையர்கள்)

## பிறப்பு இறப்பு தகவலாளர்கள் (பி :8)

எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ தகவல் தரலாம்.

## நிகழ்வுகள் இடம் : தகவல் தர வேண்டியவர்

| | | |
|---|---|---|
| 1. வீடு | – | குடும்பத் தலைவர் |
| 2. மருத்துவமனை | – | மருத்துவ அலுவலர் |
| 3. சிறைச்சாலை | – | சிறை அலுவலர் |
| 4. சத்திரம், விடுதி | – | விடுதி பொறுப்பாளர் |
| 5. பொது இடத்தில் கைவிடப்பட்டு காணப்படும் பிறந்த/ இறந்த குழந்தை | – | V.A.O., காவல் அலுவலர் |

**பதிவு செய்தல் :**

பிறப்பு இறப்பு குறித்து, நிகழ்வு நடந்ததிலிருந்து 21 தினங்களுக்குள், பதிவு செய்தல் வேண்டும் ( விதி 5(3), தவறினால், நிகழ்ச்சி நடந்ததிலிருந்து 30 நாட்களுக்களுக்குள், ரூ ~~2/-~~ தாமதக் கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம் (விதி : 9:1). 30 நாட்களுக்கு மேல் 1 வருடத்திற்குள் ரூ. ~~5/-~~ தாமதக் கட்டணம் செலுத்தி (விதி : 9-2) ~~ஒரு சான்றுறுதி அலுவலர் (Notary Public) முன்னிலையில் செய்யப்பட்ட ஒரு உறுதிமொழிப் பத்திரத்தை அளித்து, பின் ஊராட்சித் தலைவரின் எழுத்து மூல அனுமதியுடன்~~ பதிவு செய்து கொள்ளலாம். மேற்கண்ட அனுமதி மறுக்கப்பட்டால், ஊராட்சித் தலைவரின் ஆணையை எதிர்த்து, R.D.O - விடம் 30 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் (விதி -9(4) R.D.O ஆணைக்கு எதிராக கலெக்டரிடம் மேல் முறையீடு செய்யலாம், இவ்வாறு 1 ஆண்டிற்குள் செய்யத் தவறினால், அரசாணை (Ms. 293 Health & Family Welfare Dept. (AB2) நாள் : 2.12.2016 படி RDO ஆணை பெறப்பட வேண்டும். பின் அவ் ஆணையின் நகலுடன் ரூ. ~~10/-~~ காலதாமதக் கட்டணம் செலுத்தி (விதி :9(3) பிறப்பு இறப்பு பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**பதிவு தொடர்பான எடுபகுதியை அளித்தல் : (பி : 12)**

பிறப்பு இறப்பு தகவல் கொடுத்தவருக்கு உடனடியாக பிறப்பு சான்றினை படிவம் 5-லும், இறப்பு சான்றினை படிவம் 6-லும், கட்டணமின்றி தரவேண்டும். 30 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள வில்லையென்றால், அடுத்த 15 தினங்களுக்குள் அஞ்சல் மூலம் அனுப்பபடும். கூடுதல் பிரதிகள் பெற குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி (வி: 13 (5)-17(1)(பி) பெற்றுக் கொள்ளலாம்.

**குழந்தையின் பெயரை பதிவு செய்தல் (வி.10, பி 14)**

குழந்தையின் பெயர் குறிப்பிடப்படாமல், பதிவு செய்யப்பட்டிருந்தால், 12 மாதங்களுக்குள், பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம். தவறினால் 15 ஆண்டுகளுக்குள் ரூ.5/- காலதாமதக்கட்டணம் செலுத்தி (பதிவேடுயாரிடம் உள்ளதோ அந்த அலுவலரிடம்) பதிவு செய்து கொள்ளலாம்.

**15 ஆண்டுகளுக்கான கால வரம்பு :**

1. 1.1.2000 -ற்குப் பிறகு நிகழ்ந்த பிறப்புக்கு, பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகள் .
2. 1.1.2000-ற்கு முன்பு நிகழ்ந்த பிறப்புக்கு, 1.1.2000 - முதல் 15 ஆண்டுகள்.

ஒரு முறை பெயர் பதிவு செய்யப்பட்ட பின்பு, மீண்டும் மாற்றலாகாது. ஆனால் எழுத்துக் பிழைகளை அனுமதிக்கலாம். சாதிப்பெயர், குடும்ப

பெயர். (OR) வேறு அடையாளங்களை பெயரை மாற்றாமல், பெற்றோர் (OR) காப்பாளரின் உறுதிமொழி அடிப்படையில் செய்யலாம்.

**மொழி பெயர்ப்பு பதிவு நகல்கள் :**

பிற மொழியில் பதிவு நகல்கள் கோரப்பட்டால் வழங்கலாம்; இந்த தகவல்களின் மேல் பகுதியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட பதிப்பு என (Translated Version) குறிக்கப்பட வேண்டும். (முதன்மைப் பதிவாளர் கடித எண் 147138/வி.எஸ்/ஏ/99 நாள் : 18.9.1999

**பதிவு மற்றும் சான்றுகள் :**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் தேதி முதல் டிசம்பர் மாதம் 31- ஆம் தேதி வரை தொடர்ச்சியாக பதிவு எண்கள் கொடுக்கப்படுகின்றன. முந்தய ஆண்டு நிகழ்வின் தகவல்களை, நடப்பு ஆண்டில் தெரிவித்தால், நடப்பு ஆண்டுப் பதிவேட்டில் பதிதல் வேண்டும். பிறப்புச் சான்று, படிவம் 5-லும் இறப்புச் சான்று படிவம் 6-லும், வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட எந்த ஒரு பிறப்பு (OR) இறப்பு நிகழ்வு பதியப்படாமல் இருந்தால், பதிவாளர் படிவம். 11-ல் கிடைக்கப் பெறாமைச் சான்றிதழ் (Non Availability Certificate) வழங்க வேண்டும். (விதி -13(3) ) இம்மாதிரியான நகல்கள் கேட்பவரிடம் வழங்கலாம் (OR) தபால் கட்டணம் செலுத்தினால் தபால் மூலம் அனுப்பலாம்.

பதிவேடுகளை V.A.O (பதிவாளர்) தொடர்புடைய ஆண்டு முடிவடைந்த நாளிலிருந்து 12 மாதங்கள் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும். அதற்குப்பின் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் அவை, பதிவு ஆண்டு முடிவிலிருந்து 2 ஆண்டுகள் வைத்திருக்கப்படும். பின் அவை சார்பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பிழை திருத்தம் :**

பிறப்பு இறப்புப் பதிவேட்டில் எழுத்துப்பிழை, மரபுப்பிழை, வடிவமைப்பில் பிழை, (or) மோசடியாக முறையற்ற பதிவுகள் செய்வது, உதாரணமாக பெயரில்; எழுத்துப்பிழை (ராமு என்பதிற்குப் பதிலாக ராணி ) பாலின மாற்றம் செய்தல். (ஆண் என்பதற்குப் பதிலாகப் பெண்) பேறுகால மருத்துவ உதவியாளர் தந்தை (OR) தாயார் பெயரை மாற்றம் செய்தல், சுருக்கப் பெயர் குறிப்பிடுதல் (செல்வராணி என்பதை செல்வி என்று சுருக்கமாகப் பதிவு செய்தல்) பிறந்த இடம் (OR) இறந்த இடம் தவறாக இருப்பது, மோசடி/தவறான பதிவு மேற்கொள்ளுதல் (இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரு பிறப்புச் சான்று வழங்குதல்)

இச்சட்டத்தின் கீழ், ஒரு நிகழ்வு குறித்த திருத்தம் நீக்கத்திற்கு கட்டணம் ஏதும் வசூலித்தல் கூடாது. திருத்தங்கள் மேற்கொள்ள அதிகாரம் படைத்த அலுவலர்கள்

| | |
|---|---|
| 1. எழுத்துப்பிழை (OR) வடிவமைப்பில் பிழை என்ற நேர்வில் :- | பிழை பதிவு செய்யப்பட்ட ஓராண்டுக்குள் பதிவுகுறித்து பதிவாளர் தெளிவு பெற்ற பின், இரு நபர்கள் இந்நேர்வு குறித்த உண்மை நிலை அறிந்துள்ளதாக உறுதிமொழி அளித்ததன் அடிப்படையில், அவர் திருத்தம் செய்து, செய்யப்பட்டுள்ள மாற்றத்தை மாவட்டப் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஓராண்டுக்குப்பின்னர் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் அதைத் திருத்தத் கலெக்டரின் அனுமதிபெற வேண்டும். [R.S.O. 101 - 7 (i)] |
| 2. மோசடி/தவறான பதிவு என்ற நேர்வில் :- | அதை திருத்துவதற்கு நீதித்துறை நடுவரின் ஆணையை பெற வேண்டும். [R.S.O. 101 - 7 (ii)] |

(2012 வருட இந்திய குடிமுறைப்பதிவு பணியாற்றுனர்களுக்கான பயிற்சி நடைமுறை நூல் – அத்தியாயாம் 3.அ(11))

எவரேனும் ஒருவர் பிறப்பு, இறப்பு பதிவேட்டில் அமைந்ததொரு பதிவானது அடிப்படையிலேயே தவறானது என உறுதியாகக் கூறினால், அவர் பிழையின் தன்மையையும், சரியான விவரங்களையும் கொண்டதோர் உறுதிமொழியினை, அது பற்றி அறிந்தவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் உள்ள இருவரிடமிருந்து அவர் பெற்று அளிப்பதனையடுத்து, பதிவாளர் பிரிவு 15-ல் குறிப்பிட்டுள்ள முறையில் இப்பகுதியைத் திருத்தலாம். (விதி 11 (4)) பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ள பின் கண்ட ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வாரிசுகள் மனு செய்து கொள்ளலாம்.

1. பிறப்பு/இறப்பு சான்று
2. நம்பத் தகுந்த/அரசு அலுவலர் சான்று
3. வாக்காளர் அடையாள அட்டை
4. குடும்ப அட்டை
5. கடவுட் சீட்டு
6. கல்வி நிலைய சான்று மற்றும்
7. பணிப்பதிவேடு சான்று.

(உ) *"உயிரற்ற பிறப்பு"* *(Still Birth)* என்பது கருவில் உண்டாவது. குறைந்தபட்சமாக வகுத்துரைக்கப்பட்டுள்ள கர்ப்ப கால அளவை நிறைவேற்றியுள்ளவிடத்து கர்ப்ப முதிர்கரு இறப்பு "உயிரற்ற பிறப்பு" என்று பொருள்படும். கர்ப்பகால அளவு 28 வாரங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. *(விதி–3).(பிரிவு–2)*

**(4) *பதிவாளர்கள்* (பிரிவு –3, 6, 7) :**

நாட்டளவில்

(அ) இந்திய தலைமைப் பதிவாளர் – இந்திய தலைமைப் பதிவாளர் மத்திய அரசால் நியமனம் செய்யப்படுகிறார்.

மாநில அளவில்

(ஆ) மாநில முதன்மைப் பதிவாளர் – மாநிலத்திற்கு ஒரு முதன்மை பதிவாளரை மாநில அரசு நியமனம் செய்கிறது. தமிழகத்தில் பொது சுகாதாரம் மற்றும் காப்பு மருந்து இயக்குனர் முதன்மை பதிவாளர் ஆவார். இணை இயக்குநர் *(State Bureau of Health Intelligence)* பிறப்புகள் மற்றும் இறப்புகள் துணை முதன்மைப் பதிவாளராக உள்ளார்.

மாவட்ட அளவில்

(இ) மாவட்ட பதிவாளர் – ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட வருவாய் அலுவலர் மாவட்டப் பதிவாளராகவும் சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் கூடுதல் மாவட்ட பதிவாளராகவும் நியமிக்கப்படுள்ளனர்.

(ஈ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள்.

**(5) படிவங்கள் :**

| | |
|---|---|
| படிவம் – 1 | பிறப்பு அறிக்கை செய்யும் படிவங்கள் Birth Reporting Forms |
| படிவம் – 2 | இறப்பு அறிக்கை செய்யும் படிவங்கள் Death Reporting Forms |
| படிவம் – 3 | உயிரற்ற பிறப்பு அறிக்கை செய்யும் படிவங்கள் Still Birth Reporting Forms |
| படிவம் – 4 | மருத்துவமனையில் நேரிட்ட இறப்புக்கான காரணத்திற்குரிய மருத்துவச் சான்று Medical certification of cause of death for institutions. |
| படிவம் – 4A | வீட்டில் நேரிட்ட இறப்புக்கான காரணத்திற்குரிய மருத்துவச் சான்று Medical certification of cause of death for domiciliary events |
| படிவம் – 5 | பிறப்புச் சான்று Birth Certificate |
| படிவம் – 6 | இறப்புச் சான்று Death Certificate |
| படிவம் – 7 | பிறப்புப் பதிவேடு Birth Register |
| படிவம் – 8 | இறப்புப் பதிவேடு Death Register |
| படிவம் – 9 | உயிரற்ற இறப்புப் பதிவேடு Still Birth Register |
| படிவம் – 10 | கிடைக்கப்பெறாமை சான்று Non-availability Certificate |

| | | |
|---|---|---|
| படிவம் – 11 | பிறப்புகள் மாதாந்திர அறிக்கை சுருக்கம் | Summary monthly report on births |
| படிவம் – 12 | இறப்புகள் மாதாந்திர அறிக்கை சுருக்கம் | Summary monthly report on deaths |
| படிவம் – 13 | உயிரற்ற பிறப்புகள் மாதாந்திர அறிக்கை சுருக்கம் | Summary monthly report on still births |
| படிவம் – 14A | அறிக்கைகள் பெறும் கட்டுப்பாடு பதிவேடு | Control Register for receipts |
| படிவம் – 14B | ஆண்டு புள்ளி விபர அறிக்கை | Statistical Report for the year |

**(6) பதிவாளர் அலகுகள் *(Units):***

கிராம நிர்வாக அலுவலர்கள், கிராமப் பஞ்சாயத்திற்கான பதிவாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களின் அலுவலகத்தின் முன்பாக "பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவாளர்" என்ற வாசகங்களடங்கிய வழிகாட்டிப் பலகையை வைக்க வேண்டும். இந்தப் பலகையில் கிராம நிர்வாக அலுவலர் பெயர் மற்றும் அலுவலக நேரம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

தகவலாளர் தரவேண்டிய விபரங்களடங்கிய படிவங்கள். *(விதி–5)*

| | | |
|---|---|---|
| படிவம் – 1 | : | பிறப்பு பதிவிற்கான படிவம். |
| படிவம் – 2 | : | இறப்பு பதிவிற்கான படிவம். |
| படிவம் – 3 | : | உயிரற்ற பிறப்பிற்கான படிவம். |

**(7) தகவலாளர்கள் (பிரிவு–8) :**

பிறப்பு அல்லது இறப்பு பதிவுக்காக பதிவாளரிடம் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தகவல்கள் தருவதற்குரிய தகவலாளர்கள் பற்றிய முறைகள் பிரிவு–8-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

- வீடு ஒன்றில் நிகழும் பிறப்பு அல்லது இறப்பு பொறுத்தவரை, வீட்டின் தலைவர், கூட்டுக் குடும்பமாக இருந்தால், கூட்டுக் குடும்பத்தின் தலைவர், நிகழ்வு நடைபெற்றபோது அவர் வீட்டில் இல்லாமலிருந்தால், வீட்டுத் தலைவரின் நெருங்கிய உறவினர், அத்தகைய ஆள் எவரும் இல்லாதிருந்தால் வீட்டில் இருக்கும் மூத்த வயது வந்த ஆள்.
- மருத்துவமனை, நல்வாழ்வு மையம், மகப்பேறு அல்லது மருத்துவ இல்லம் பொறுத்தவரை மருத்துவ அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்.
- சிறைச் சாலைகளில் ஏற்படும் நிகழ்வுகள் பொறுத்தவரை பொறுப்புடைய சிறை அலுவலர்.
- வழித்தங்கல் மனை, சத்திரம், விடுதி, அறச்சாலை, உணவு விடுதி, தங்கும் விடுதி, அருந்தகம், பொதுமக்கள் புழங்கும் இடம் இவற்றில் ஏற்படும் பிறப்பு அல்லது இறப்பு நிகழ்வுகளைப் பொறுத்தவரை அதன் பொறுப்புடையவர்.
- பொதுவிடம் ஒன்றில் கைவிடப்பட்டு காணப்படும் பிறந்த குழந்தை அல்லது இறந்த குழந்தை உடல் பொறுத்தவரை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் அல்லது அவரையொத்த பிற அலுவலர் அல்லது காவல் நிலைய பொறுப்புடைய அலுவலர்.

R.S.O: 102

# கொள்ளை நோய்கள் மற்றும் இதர தொற்று நோய்கள்

1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட நோய்கள் அறிவிக்கப்பட்ட நோய்கள் ஆகும்.

(1) மூளை போர்வ்வ (ஜன்னி)

(2) சின்ன அம்மை

(3) பெரிய அம்மை

(4) காலரா

(5) தொண்டைக்கட்டு நோய்

(6) தொழு நோய்

(7) தட்டம்மை

(8) வெறி நாய்க்கடி

(9) பிளேக்கு நோய்

(10) செந்நச்சுக் காய்ச்சல் (இந்தியாவில் இல்லை)

(11) குடற் புண் காய்ச்சல் (டைபாய்டு)

(12) மஞ்சள் காமாலை

(13) கக்குவான் இருமல்

(14) மூளைக் காய்ச்சல்

(15) காசநோய்

(16) குருதிக் காய்ச்சல்

(17) குளிர்க் காய்ச்சல் (மலேரியா)

(18) இசிவு நோய்

(19) இளம்பிள்ளை வாதம்

அறிவிக்கப்பட்டுள்ள இந்த நோய்கள் ஏதாவது யாருக்காவது கண்டிருந்தால் அது குறித்து கிராமத்தில் உள்ள சுகாதாரப் பணியாளர் அல்லது அப்பகுதி சுகாதார ஆய்வாளருக்கு கிராம நிர்வாக அலுவலர் உடனடியாக தெரிவிக்க வேண்டும். இதனுடைய நகல் ஒன்றினை வருவாய் ஆய்வாளருக்கும் வட்டாட்சியருக்கும் அனுப்ப வேண்டும். மேலும் இது தவிர கிராமத்தில் வேறு ஒரு அசாதாரண நோய்கள் கண்டிருந்தாலும் கிராம நிர்வாக அலுவலர் அது குறித்து ஒரு அறிக்கையை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

மேற்படி அறிவிக்கப்பட்டுள்ள நோய்களில் சில தொற்று நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றது :

நோய் கிருமிகள் உடலைத் தாக்குவதால் நோய்கள் உண்டாகிறது. தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருடைய உடலிலிருந்து இக்கிருமிகள் பல வழிகளில் வெளியேறுகின்றது.

(அ) காலரா, டைபாய்டு, சீதபேதி முதலான நோய் கிருமிகள் உணவு மற்றும் குடிக்கும் தண்ணீர் மூலம் வருகிறது.

(ஆ) சளி பிடித்தல், தொண்டைப்புண், காச நோய், புட்டாலம்மை, நிமோனியா காய்ச்சல், தட்டம்மை, கக்குவான் இருமல், சளிக்காய்ச்சல், மூளை முதுகு தண்டுக் காய்ச்சல் ஆகிய நோய்கள் மூச்சு காற்றினை உட்செல்லல் அல்லது சுவாசித்தல் மூலம் வருகிறது.

(இ) வயிற்று போக்கு, சீதபேதி ஆகிய நோய்கள் பூச்சிகள் மற்றும் வீட்டு ஈக்கள் தொற்று அழுக்கு பொருட்களிலிருந்து உணவு மற்றும் குடிக்கும் பொருட்களுக்கு மாற்றப்படுவது மூலம் நோய்கள் வருகிறது.

(ஈ) குளிர்க்காய்ச்சல் (மலேரியா), யானைக்கால் நோய், மஞ்சள் காய்ச்சல், டிங்கு எனும் மூளைக்காய்ச்சல் கொசுக்கள் மூலமாக பரவுகிறது.

(உ) எலி, தொள்ளுப் பூச்சி மூலம் பிளேக்கு நோய் பரவுகிறது.

**விலங்குகளிலிருந்து வரும் நோய்கள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | கால்நடைகள் | — | அடைப்பான் நோய் |
| (2) | நாய்கள் | — | வெறிநோய் |
| (3) | இறைச்சி | — | நாடாப்புழு நோய் |

சில முக்கியமான நோய்கள் கிராமத்தில் கண்டிருந்தால் கிராம நிர்வாக அலுவலர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

**(1) காலரா நோய் :**

காலரா நோய் அக்கம் பக்கத்தில் கண்டிருக்கும் போது ஒவ்வொரு வீட்டிலும் அசுத்தத் தண்ணீர் மற்றும் எந்த வித அசுத்தப் பொருட்களை அப்புறப்படுத்தவும், முற்றிலும் சுத்தம் செய்யவும், வீட்டு கழிப்பிடங்களை தினமும் இரண்டு முறை சுத்தம் செய்யவும், சாக்கடைகளில் உள்ளவற்றை தினமும் எடுத்துவிட்டு சுத்தம் செய்ய வேண்டும் என்று மக்களை பணிக்க வேண்டும். ஊராட்சி அமைப்புகளையும் அப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து கீழ்கண்ட பழக்கங்களை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று மக்களுக்கு தண்டோரா / துண்டுப் பிரசுரங்கள் மூலம் உணர்த்த வேண்டும்.

(1) அதிகமாகக் கனிந்த பழுங்களை உட்கொள்ளக் கூடாது.

(2) உப்பை தாராளமாக உபயோகிக்க வேண்டும்

(3) குடி தண்ணீர் மற்றும் பால் முதலியவற்றை கொதிக்க வைத்து பின் அருந்த வேண்டும்.

(4) பேதி மருந்துகளை உட்கொள்ளக் கூடாது

(5) வயிற்றுபோக்கு கண்டால் அதனை உடனே தடுக்க போதிய மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்.

(6) உணவின் மீது ஈக்கள் உட்காராதவாறு அதனை மூடி வைக்க வேண்டும்.

(7) சமைத்த சூடான உணவையே உட்கொள்ள வேண்டும்.

மேலும் இந்த நோய் பரவுவதற்கு தண்ணீர் மிகவும் முக்கியமான ஒரு சாதனமாகும். எனவே சுகாதார பணியாளர்கள் ஊராட்சி அமைப்புகளின் மூலம் குடி தண்ணீரை சுத்தப்படுத்த உடனடியாக குளோரின் மருந்துக் கலக்கப்பட வேண்டும். கிராமத்தில் தடுப்பு ஊசி போட ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆரம்ப சுகாதார மருத்துவரிடமிருந்து நோய் கண்டவருக்கு வாய்வழி சிகிச்சைக்கு உடலுக்கு ஈரத்தன்மையூட்டும் உப்பு சிறிதளவு பெற்று வைத்துக் கொண்டு ஒரு பொட்ல உப்பை ஒரு லிட்டர் பருகும் நீரில் கரைத்து 24 மணி நேரத்திற்குள் பருகுமாறு நோயாளிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். இந்த முதலுதவி முறை கையாண்டால் உயிர்களை காப்பாற்றலாம்.

## (2) பிளேக்கு நோய் :

இது ஒரு கொடூரமான நோயாகும். இது வெகு விரைவில் மனிதர்களுக்கு பரவக் கூடியதாகும். அதிக இறப்புகளை உண்டாக்கும். தொடர்ந்து இருக்கும் கடுங்காய்ச்சல், மிகுந்த சோர்வு, கழுத்தில் மிருதுவான விக்கங்கள் ஆகிய முக்கியமான அறிகுறிகள்.

*பிளேக்கு நோய் தடுப்பு முறை*

(அ) பிளேக்கு நோய் கண்டிருக்கும் கிராமத்திலிருந்து உணவு தானியங்கள், பருப்பு வகைகள் வெளியில் செல்லுவதற்கு அனுமதிக்கக் கூடாது. அதே போல் நோய் தாக்கம் இல்லாத கிராமங்களுக்கு இப்பொருட்கள் வருவதற்கு அனுமதிக்கக் கூடாது.

(ஆ) எந்த ஒரு கிராமத்தில் பிளேக்கு நோய் கண்டிருந்தால் வட்டாட்சியர், சுகாதார ஆய்வாளர் ஆகியோருக்கு அறிக்கை உடன் அனுப்ப வேண்டும். தொற்று நோய் கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்கு பரவும் அபாயம் இருந்தால் முன்னெச்சரிக்கையாக எலிகளை ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(இ) பிளேக்கு நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பூசி போடுதல் பிளேக்கு நோய் கண்டிருக்கும் நோயாளிகளை தனிமைப்படுத்தி வைத்தல், எலிகளை ஒழித்து தொற்று தன்மையை நீக்குதல் ஆகிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) வீடுகளை சுத்தம் செய்து சுற்றுபுறத்தை குப்பை கூளங்கள் இல்லாமல் இருக்க செய்ய வேண்டும். புதிதாக எலி வலைகள் ஏதும் தோண்டப்பட்டிருந்தால் அதற்கு பக்கத்தில் உள்ள பொருட்களை இடமாற்றம் செய்ய வேண்டும்.

(உ) இறுதியாக பிளேக்கு நோய் எளிதில் தடுக்கப் படக்கூடிய ஒரு நோய் என்பதை மறத்தல் ஆகாது. அது எங்கே பரவினாலும் எலிகள் செத்து விழுவதை பற்றியும் பிளேக்கு நோய் கண்டவர்கள் பற்றியும் உடனுக்குடன் தகவல் அனுப்ப வேண்டும்.

## (3) மூளைக் காய்ச்சல் :

இது முக்கியமாக குழந்தைகளுக்கும் மற்றும் பெரியவர்களுக்கும் வருகின்ற உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் நோயாகும். இந்நோய் பன்றிகள் மூலம் ஒரு வகை கொசுவினால் பரப்பப்படுகிறது. கடுமையான காய்ச்சல், கழுத்து பிடிப்பு, நடுக்கும் குளிர் ஆகியவை அறிகுறிகளாகும். இந்நோய் அக்கிராம பகுதியில் அறிந்தவுடன் ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க அறிக்கை அனுப்ப வேண்டும்.

## (4) மலேரியா காய்ச்சல் :

ஒரு கிராமத்தில் மலேரியா காய்ச்சலோ அல்லது சாதாரண காய்ச்சலோ கண்டு இருந்தால் ஒரு வாரத்தில் கிராமத்தில் காணப்படும் காய்ச்சலானது மக்கள் தொகையில் மூன்று விழுக்காட்டிற்கு மேற்படும்

போதெல்லாம் புள்ளி விவரங்களுடன் சுகாதார அலுவலருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். இந்த மலேரியா காய்ச்சல் கிருமிகளை கொல்வதற்கு "குளோரோகுவின்" மாத்திரை மிகவும் பயனுடைதாக இருக்கிறது. இந்த வியாதியை அடியோடு ஒழித்து விடவேண்டுமானால் காய்ச்சல் கண்டிருக்கும் நபரை பரிசோதித்த பிறகு அவரை ஒரு வேளைக்கு 600 மில்லி கிராம் மருந்தினை உட்கொள்ள வேண்டும்.

**(5) குடற்புண் காய்ச்சல் (டைபாய்டு) :**

டைபாய்டு என்ற குடற்புண் காய்ச்சல் மூன்று முதல் நான்கு வாரங்கள் காய்ச்சல் இருந்து கொண்டே இருக்கும். நோயாளி மிகவும் பலவீனமாகி படுக்கையில் கிடப்பார். வயிற்றுப் போக்கும் இருக்கும். இந்த நோய் அசுத்தமான குடி தண்ணீர் மூலம் பரவுகிறது. எனவே கிராமத்தில் இந்நோய் கண்டு இருந்தால் குடி தண்ணீரை கொதிக்க வைத்து அது குளிர்ந்த பின்பு வடிகட்டி உபயோகிப்பது நல்லது. டைபாய்டு தடுப்பூசி போட்டுக் கொள்வதால் பாதுகாப்பு ஏற்படுகிறது. நோய் பரப்பக்கூடியவர்களை உணவு பொருட்களை தயாரிக்கவோ அல்லது கையாளுவதையோ அனுமதிக்கக் கூடாது.

கிராமத்தில் பொது சுகாதாரத்தைப் பேணுவதில் கிராம நிர்வாக அலுவலரின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். எனவே விழிப்புடன் செயல்பட்டு தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நோய் தாக்கியபின் உடனடியாக நோயை குணப்படுத்த தேவையான நடவடிக்கைகளை சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து மேற்கொள்வதும் மிகவும் முக்கியம் ஆகும். கிராமத்திலுள்ள பொது சுகாதார நிலையத்திற்கும் வருவாய் ஆய்வர் மூலம் வட்டாட்சியருக்கு அவ்வப்பொழுதும் அவசியமான சமயங்களில் உடனுக்குடனும் தெரிவிக்க கிராம நிர்வாக அலுவலர் கடமைப் பட்டவர் ஆவார்.

## 45. கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகள் மற்றும் கடமைகள் :- (GOMs.No. 581 வருவாய்த்துறை 3.4.1987)

1. கிராமக் கணக்குகள் பராமரிப்பு மற்றும் 100 % பயிராய்வுப்பணி
2. நிலவரி, கடன் மற்றும் இதர அரசுக்கடன் பாக்கிகள் வசூல் செய்தல்.
3. சாதி சான்று, வருமானச் சான்று, வசிப்பிட சான்று, சொத்து மதிப்பு சான்று போன்ற சான்றுகள் வழங்குவதற்கான அறிக்கை அனுப்புதல்.
4. சிட்டா, அடங்கல் முதலிய கிராமக்கணக்கு நகல்கள் வழங்குதல்.
5. பிறப்பு இறப்பு பதிவேடுகள் பராமரிப்புப் பணி.
6. புயல் வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களுக்கு தகவல் அளித்தல், வருவாய், ஆய்வாளர்களுக்கு தேவையான உதவிகள் அளித்தல் போன்றவை.
7. கிராமத்தில் நிகழும் கொலை, தற்கொலை மற்றும் இயற்கைக்கு மாறான மரணங்கள் போன்றவை குறித்து காவல் துறைக்கு தகவல் அளித்தல் மற்றும் காவல் துறையினர் விசாரணைக்கு ஒத்துழைப்பு நல்குதல்.
8. காலரா, பிளேக், கால்நடை நோய் போன்றவை குறித்து தகவல் அளித்தல்.
9. ரயில்வே லைன் பெட்ரோல் பணி பார்த்தல்.
10. கால்நடைப்பட்டி, சாவடி பராமரிப்புப் பணி.
11. அரசு கட்டிடங்கள், மரங்கள் மற்றும் அரசு புறம்போக்குகள் பாதுகாத்தல்.
12. புதையல் குறித்து உயர் அலுவலர்க்கு தகவல் அளித்தல்.
13. பொதுச் சொத்து பதிவேடு பராமரித்தல்.
14. மு.உ.தொ, நலிந்தோர் நலத்திட்டம் போன்ற நலப்பணிகள் குறித்த பதிவேடுகள் பராமரிப்பு.
15. பல்வேறு துறைகளுடன் இணைந்து வளர்ச்சித் திட்டப்பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்படி துறைகளுக்கு தேவையான விவரங்கள் அளித்தல்.

## 46. வருவாய் ஆய்வாளர்கள் பணிகள் மற்றும் கடமைகள் (அரசு ஆணை நிலை எண். 581 வ.து. நாள் 03.04.87)

1. பயிராய்வு
2. கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் பணி மேற்பார்வையிடுதல்
3. நிலவரி, வாரகம் மற்றும் இதர பாக்கிகள் வசூல் செய்தல். பிற துறை பாக்கிகளை கேட்புகள் பெறப்படும் போது வசூல் செய்தல்.
4. கிராம கணக்குகளை ஆய்வு செய்தல்
5. A மெமோ மற்றும் B மெமோ தணிக்கை செய்தல்
6. 2சி பட்டா மரங்கள தவிர புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் மகசூலை ஏலம் விட நடவடிக்கை எடுத்தல்.
7. வட்டாட்சியரால் வழங்கப்பட்ட ஆக்ரமணம் அகற்றல் ஆணைகளை செயல்படுத்துல்.
8. இயற்கை இடர்பாடுகள் நேரிடும் போது பாதிக்கப்பட்ட வீடுகளையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டு உடனடி உணவு தங்குமிடம் ஏற்பாடு செய்தல், நிவாரணம் வழங்க அறிக்கை அனுப்புதல்.
9. முதியோர் ஒய்வூதிய பயனாளிகளை நேரடி பார்வையிடுதல்.
10. பட்டா பாஸ் புத்தகங்களை விநியோகம் செய்தல் மற்றும் சரிபார்த்தல்.
11. நீர்பாசன நிலைகளை பார்வையிடுதல்.
12. கிராமங்களில் நடைபெறும் மனு நீதி நாள் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ளுதல்.
13. கனிம வளங்களை பார்வையிட்டு கள்ளத் தனமாக மணல் எடுப்பது மற்றும் கல் உடைப்பதை தடுப்பது.
14. கிஸ்தி பருவத்தில் கிராம கணக்குகளை பார்வையிடுதல்.
15. ஆண்டு வருவாய் தீர்வாயத்தின் போது கிராம அலுவலர்களால் தயாரிக்கப்படும் கணக்குகளை கூர்ந்து ஆய்வு செய்தல்.

16. பதிவு மாற்றங்களை சரிபார்ப்பது.

17. பிறப்பு இறப்பு பதிவேடுகளை தணிக்கை செய்தல்.

18. நிபந்தனை ஒப்படைகளை சரிபார்ப்பது.

19. குத்தகை சாகுபடி பதிவுகளை தணிக்கை செய்தல்.

20. எல்லா நிலக் கொடைகளை தணிக்கை செய்தல்.

21. அனுபோக கேஸ்களை சரிபார்ப்பது.

22. வனக் குற்றங்களை கண்டுபிடிப்பது.

23. முக்கிய பிரமுகர்களை வரவேற்றல்.

24. தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி, வஜா இனங்கள், மர பட்டாக்கள், அரசு மற்றும் கவுல் தோப்புகள் தணிக்கை செய்தல்.

25. கிராமத்தில் உள்ள நில அளவு கல் டிப்போ தணிக்கை செய்தல்.

26. இதர விதமான களப்பணிகள்

அ) மரங்களை பார்வையிடுதல்

ஆ) நில ஒப்படை மற்றும் கடன்கள் வழங்க நிலங்களை பார்வையிடுதல்

இ) கடன் பெற்று தோண்டிய கிணறுகளை பார்வையிடுதல்.

ஈ) கால்நடைபட்டி மற்றும் கணக்குகளை தணிக்கை செய்தல்

உ) நிலத்தை ஏலம் விடுவது

எ) உள்ளூர் தணிக்கை தேவைப்படும் இதர இனங்களை பார்வையிடுவது.

ஏ) சாகுபடி கணக்குகளை தயார் செய்வது. அறிக்கைகளை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்புதல்.

ஐ) கிராம சுகாதாரம். கால் நடை சுகாதாரம், குடித் தண்ணீர் நிலைமை – மழை அளவு பயிர்களின் நிலைமை – கண்காணித்தல்.

ஒ) கிராம சாவடிகளை பார்வையிடுதல்.

## 47. மண்டல துணை வட்டாட்சியர்களின் பணிகள் மற்றும் கடமைகள் (அ.ப.சு. ஆணை நிலை எண்.921 வ.து. நாள் 15.06.91)

1. வருவாய் ஆய்வாளர்கள் - பராமரிப்பு நில அளவர்கள் - கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் பணிகளை மேற்பார்வையிடுதல்.
2. நிலவரி, வாரகம் வசூல் வேலைகளை ஆய்வு செய்தல் மற்ற துறை பாக்கிகள் அவ்வப்போது வரும் கேட்பின்படி வசூல் செய்தல்.
3. கிராம கணக்குகளை ஆய்வு செய்தல்.
4. A மெமோ மற்றும் B மெமோ கேஸ்கள் தணிக்கை செய்தல் மற்றும் ஆக்ரமனங்கள் அகற்ற உத்தரவிடுதல்.
5. அரசு நிலங்களில் உள்ள மரங்களை பார்வையிடுதல் (2சி பட்டா மரங்கள் தவிர) மற்றும் அதன் மகசூல் ஏலம் விடுதல்.
6. முதியோர் ஒய்வூதிய கேஸ்கள் பார்வையிடுதல்.
7. பட்டா பாஸ்புத்தகங்களை வழங்குதல், பார்வையிடுதல்.
8. நீர்பாசன நிலைகளை பார்வையிடுதல்.
9. கிராமத்தில் நடத்தப்படும் மனு நீதி திட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல்
10. கள்ளத்தனமாக எடுக்கப்படும், மணல், கல் மண் ஆகிய வளங்களை தணிக்கை செய்வது மற்றும் அதனை தடுப்பது.
11. கிஸ்தி பருவத்தில் வசூல் கணக்குகளை தணிக்கை செய்தல்.
12. ஆண்டு வருவாய் தீர்வாயத்தின் போது கிராம நிர்வாக அலுவலர்களால் தயாரிக்கப்படும். கணக்குகளை கூர்ந்து ஆய்வு செய்தல்.
13. பிறப்பு இறப்பு பதிவேடுகளை கூர்ந்து ஆய்வு செய்தல்.
14. நிபந்தனை ஒப்படைகளை பார்வையிடுதல்.
15. குத்தகை பதிவு இனங்களை ஆய்வு செய்தல்.
16. நில கொடை இனங்களை ஆய்வு செய்தல்.
17. வன குற்றங்கள் கண்டுபிடித்தல்.
18. மேலோட்ட பயிராய்வு.

19. தீர்வை ஜாஸ்தி, பசிலி ஜாஸ்தி, வஜா இனங்கள், மரபட்டாக்கள், அரசு மற்றும் கவுல் தோப்புகள் தணிக்கை செய்தல்.
20. வருமானச் சான்று வழங்குதல்.
21. சாதிச்சான்று வழங்குதல் (அட்டவணை வகுப்பினருக்கு தவிர)
22. நகல்கள் வழங்குதல்.
23. பதிவு மாற்றங்கள் தவறுகளை சரி செய்வது.
24. பதிவு மாற்றங்கள் மீது ஆணை வழங்குதல் (உட்பிரிவு இனங்கள் தவிர)
25. கிராமச் சாவடிகள், கால்நடைபட்டி தணிக்கை செய்தல்
26. மழைமானி தணிக்கை செய்தல்.
27. நில அளவு கற்கள் மற்றும் நில அளவு கற்கள் இருப்பு வைத்துள்ள இடங்களை தணிக்கை செய்தல்.
28. அரசு நிலங்களை பார்வையிட்டு அதில் ஏற்படும் ஆக்ரமணங்களை தடுத்தல்.

(25)



## 48. வட்டாட்சியர்களின் பணிகள் மற்றும் கடமைகள் (அ.ஆ.நிலை எண்.921 வ.து. நாள் 15.06.1991)

1. வட்ட அளவில் துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஏனைய வருவாய்த் தறை பணியாளர்களின் பணிகளைச் சீரமைப்பதுடன் தனி வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் ஆய்வர்களின் நாட்குறிப்பேடுகளை மாதமிருமுறை பெற்று ஆய்வு செய்தல்.

2. வட்ட நடுவராக பணியாற்றல்

3. சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிக்கும் பணிகளில் ஈடுபடல்

4. அவசர நிலைக் காலங்களில் இருப்புப் பாதைகளை பாதுகாக்க ரோந்துப் பணிக்கு ஏற்பாடு செய்தல்.

5. முன்னரே நிகழ்ச்சி நிரல் தயாரித்து கிராமத்தில் மனுநீதித் திட்ட நிகழ்ச்சியை நடத்துதல்.

6. மேல் பயிராய்வு செய்தல், மற்றும் நில அளவைக் குறிகளை பார்வையிடல்

7. 3 எக்கர் புஞ்சை அல்லது 1-0.5 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு மிகாமலும் ரூ.30,000/- வரை நில மதிப்புள்ளதுமாகிய நிலங்களைப் பயிரிட ஒப்படை செய்ய ஆணை பிறப்பித்தல்.

8. மதிப்பிட முடியாத வீட்டு மனைப்பட்டா கோரியுள்ள விண்ணப்பங்களுக்கு ஆணை பிறப்பித்தல்.

9. தீ விபத்து, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடல் மற்றும் நிவாரண நடவடிக்கை எடுக்க ஆவண செய்தல் நிவாரணம் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் கடன் தொகைகள் வழங்குதல்.

10. 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நில ஆக்கிரமிப்பு உள்ள இடங்களில், ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற ஆணையிடல்.

11. நில ஆக்கிரமிப்புக்காக பி.நமூனா வழங்கப்பட்ட நேர்வுகளில் உரிய வரி விதிப்போ அல்லது அபராதமோ விதித்து ஆணையிடல்.

12. கிராமப்பட்டி - சாவடி / கல் கிடங்கு - 2சி பட்டா மரங்கள், அரசு நிலங்களின் மாற்றம் நில ஒப்படை - நில குத்தகை தண்ணீர் தீர்வை, இனங்கள், நில, ஆக்கிரமிப்பு நேர்வுகள், அரசு புறம்போக்கு நிலங்கள் தீர்வையிடப்பட்ட அரசு தரிசு நிலங்கள், தீர்வையிடப்படாத அரசு தரிசு நிலங்கள் ஆகியவற்றை பார்வையிடல்.

13. முதியோர் உதவித் தொகை ஆவணங்களைப் பராமரித்தல்.

14. பதிவு மாற்றம் இனங்களில் மீது ஆணை பிறப்பித்தல்.

15. நில மதிப்பு ரூ.2,50,000/- க்கு மிகாத கையகப்படுத்த நிலங்களுக்கான ஈட்டுத் தொகை அளித்தல்.

16. நில ஒப்படை அல்லது நில மாற்றம் செய்த நேர்வுகளில் நிபந்தனைகள் மீறப்பட்டதாக தகவல் வந்தால் அது தொடர்பாக அறிக்கை அனுப்புதல்.

17. நீர்ப்பாசன ஆதாரங்கள், மழைமானிகளைப் பார்வையிடுதல் மற்றும் நீர்பாசன தகராறுகளை சுமூகமாக தீர்த்து வைத்தல்.

18. வருவாய் நிலை ஆணையின் கீழ் வேளாண்மை மற்றும் தொழில் காரியங்களக்காக நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து நீர் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்குதல்.

19. பல நீர்ப்பாசன சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை செயல்படுத்துதல்.

20. தேர்தல் காலங்களில் உதவி தேர்தல் அலுவலராகவும் மற்றும் தேர்தல் உதவி பதிவு அலுவலராகவும் பணியாற்றுதல்.

21. வட்டத்தில் மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவை தேர்தல் நடைபெறத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

22. அரசுக்கு மற்றும் அரசு நிறுவனங்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை வருவாய் வசூல் சட்டத்தினை செயல்படுத்தி வசூல் செய்ய வேண்டிய பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும்.

23. காலமுறை வரி மையங்களை நடத்தி, நிலவரி, கடன்கள், நில அளவைச் செலவு, நகர்ப்புற நிலவரி, நீதிமன்ற கட்டணம் வறியர் வழக்கு கட்டணம் மற்றும் ஏனைய பொது கேட்புகள் ஆகியவைகளை, வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூல் செய்வதை விரைவுபடுத்துதல்.

24. கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்கும் பண கணக்குகளைத் தணிக்கை செய்தல்.

25. ஆண்டு ஜமாபந்திக்காக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களால் தயாரிக்கப்படும் கணக்குகளைச் சரிப்பார்த்து ஏற்றுக் கொள்ளுதல்.

26. வேளாண்மை நிலங்களுக்காக நியாய குத்தகையை நிர்ணயித்து ஆணை பிறப்பித்தல்.

27. பாதை வரியை விதித்தல்.

28. குற்றவியல் ஒழுங்குமுறை சட்டப்பிரிவு 144 – இன் கீழ் ஆணை பிறப்பித்தல்.

29. தண்ணீர்த் தீர்வை நேர்வுகளில் ஆணை பிறப்பித்தல்.

30. குத்தகை பதிவு நேர்வுகளில் ஆணை பிறப்பித்தல்.

31. கிராம பணியாளர்களை பணியமர்த்தம் செய்ய ஆணை பிறப்பித்தல்

32. கிராம அலுவலர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளின் மீது ஆணையிடுதல்.

33. கிராம நிர்வாகத்தை பராமரித்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.

34. கிராமப் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் மீது ஆணை பிறப்பித்தல்.

35. கிராம நிர்வாக அலுவலர்களின் விடுப்பு விண்ணப்பங்களின் மீது ஆணை பிறப்பித்தல்.

36. 2–சி பட்டா மனுக்களின் மீது ஆணை பிறப்பித்தில்.

37. புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்களை மேற்பார்வையிடுவதுடன் கள்ளத்தனமாக வெட்டுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

38. அனைத்து கனிம வளங்களை பார்வையிடுவதுடன், கள்ளத்தனமாக எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

39. வருவாய் நிலை ஆணைகளின் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்துதல்.

40. எஸ்டேட் ஒழிப்பு சட்டத்தின் வெளியே கோரப்படும் பட்டா வழங்க விசாரணை செய்தல் (Out side the scope of estate abolition Act).

41. உப்பளங்களை குத்தகைக்கு விடுவதுடன், அவைகளுக்கான குத்தகைகளை வசூலித்தல்.

42. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தைச் செயல்படுத்துதல்.

43. பொதுச் சுகாதாரம், கால்நடைகளால் பரவும் நோய்கள், காலரா முதலிய தொற்று நோய்கள் பரவும் நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்தல், பிறப்பு இறப்புகளை பதிவு செய்தல்.

44. சாதிச் சான்று மற்றும் சொத்து மதிப்புச் சான்றிதழ் வழங்குதல்.

45. வாரிசுச் சான்றிதழ் வழங்குதல்.

46. முக்கிய பிரமுகர்களை வரவேற்றல்.

47. வட்ட நடைமுறை கணக்கு நூலில் குறிப்பிட்டுள்ளபடி கணக்குகளைச் பராமரித்தல்.

48. குடிமைப் பொருள் வழங்குதல் பணியை மேற்கொள்ளுதல்.

49. நியாய விலைக் கடைகள், அரிசி ஆலைகள் வெடிமருந்து கிடங்குகள் பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல்.

50. காவல் துறையினரால் அளிக்கப்படும் உரிமை கோரப்படாத சொத்துக்கள் மீது ஆணை பிறப்பித்தல்.

51. காவல் துறையின் வேண்டுகோளின்படி புதைத்த பிணங்களைத் தோண்டி எடுத்தல்.

52. ரயத்துவாரி நிலங்களில் உட்பிரிவு ஆவணங்களை ஒப்புதல் அளித்தல்.

53. பாட்டின் நிலங்களை தீர்வு செய்தல் (Bought in Lands)

54. அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் எல்லா சட்டம், விதிகள் நடைமுறை நூல்களை வட்ட அளவில் செயல்படுத்த வலியுறுத்தல்.

55. கடன் நிவாரணச் சட்டங்களின் கீழ் அளிக்கப்படும் விண்ணப்பங்களைப் பைசல் செய்தல்.

56. அடகுதாரர் சட்டம் (ம) கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் உரிமைகள் அளித்தல்.

29



## 49. வருவாய் கோட்டாட்சியர்களின் பணிகள்
## (GOMs.581 வருவாய்த்துறை 3.4.1987)

1. வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் இதர அலுவலர்களின் பணி மேற்பார்வை மற்றும் அலுவலகங்கள் தணிக்கை. கோட்ட அலுவலர்களின் மாதாந்திர அரைத்திங்கள் நாட்குறிப்புகள் ஆய்வு.

2. கிஸ்தி ஆய்வு மையங்கள் நடத்துதல் மற்றும் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூல் செய்யப்பட வேண்டிய அரசுக்குச் சேர வேண்டிய நிலவரி, நகர்ப்புற நிலவரி போன்றவை குறித்த வசூல் ஆய்வு மையங்கள் நடத்துதல் மற்றும் வசூல் பணியை துரிதப்படுத்துதல்.

3. வட்ட அலுவலகத்தில் மூன்று திங்களுக்கு ஒரு முறை மு.உ.தொ. மற்றும் இதர நலத்திட்ட உதவிகள் வழங்கும் பிரிவினை தணிக்கை செய்தல்.

4. மனுநீதித்திட்டம், மக்கள் குறைகேள் தினம் போன்றவை நடத்துதல் மற்றும் கண்காணித்தல்.

5. இலங்கை அகதிகள் மறுவாழ்வுத் திட்டப் பணிகளை மேற்பார்வை இடல்.

6. தீ விபத்து , புயல், வெள்ள நிவாரணம் மேற்பார்வை மற்றும் தணிக்கை செய்தல்.

7. தீ விபத்து சம்பவங்களை நேரில் ஆய்வு செய்தல்

8. முதல் வகுப்பு நிர்வாக நடுவருக்குள்ள பணிகள் மற்றும் கோட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுதல்.

9. குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவுகள் 107-110-ன் கீழான விசாரணை மேற்கொள்ளுதல் மற்றும் இப்பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க நீதித்துறை மாவட்ட நடுவர்களுக்களிடம் அனுப்பி வைத்தல்.

10. குற்றவியல் சட்டம் பிரிவு 133 மற்றும் 145 -ன் கீழ் ஆணை பிறப்பித்தல்.

11. P.S.O 145 -ன் கீழான இனங்களில் விசாரணை மேற்கொள்ளுதல்

12. ஒப்படை மற்றும் நில உரிமை மாற்றம் போன்ற இனங்களில் தணிக்கை மேற்கொள்ளுதல்.

13. ஆக்கிரமிப்பு இனங்கள் தணிக்கை, ஆக்கிரமிப்பு வெளியேற்ற மேல் முறையீட்டு விசாரணைகள் மற்றும் பொது வளாகங்கள் (அனுமதியற்ற ஆக்கிரமிப்பு வெளியேற்றம்) சட்டம் 1975 -ன் கீழான ஆணைகள் பிறப்பித்தல்.

14. நிலமாற்றக் கருத்துருக்களின் பேரில் இடப்பார்வை மேற்கொள்ளுதல்.

15. ஆதின ஒழிப்புச் சட்டத்திற்குப் புறம்பாக பட்டா வழங்குதல்.

16. நில உபயோக ஆணையை நடைமுறைப்படுத்துதல்.

17. பல்வேறு நிலசீர் திருத்தச்சட்டங்கள் மற்றும் குடிவாரச் சட்டங்களின் கீழ், கோட்டாட்சியருக்கு ஒதுக்கப்பட்ட பணிகள்.

18. இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் கோட்டாட்சியருக்கு உரித்தாக்கப்பட்ட பணிகள்.

19. சிறுபாசனத் திட்டங்கள், தண்ணீர் வரிவிதித்தல் மற்றும் நிர்வாகம் குறித்த கோட்டாட்சியருக்கு ஒதுக்கப்பட்ட பணிகள்.

20. பாசன மேம்பாட்டு மேல் முறையீடுகள்

அரசாணை எண் 546 வருவாய்த்துறை

நாள் : 20.10.2010 - படி நீக்கம் செய்யப்பட்டது.

21. குறைந்த பட்சக் கூலிச் சட்டம் - மேல்முறையீடுகள்.

22. கோட்ட அளவில் நில எடுப்பு அலுவலராக பணியாற்றுதல்.

23. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை இனங்களில் முடிவு செய்தல் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் பணி சம்பந்தமான வட்டாட்சியர்களின் ஒழுங்கு நடவடிக்கை ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீட்டு விசாரணை மேற்கொள்ளுதல்.

24. நியாய விலை அங்காடிகள்தணிக்கை மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் தொடர்பான இதரப் பணிகள்.

25. அரசு சேமிப்புக் கிட்டங்கிகளில் அவ்வப்பொழுது இருப்பு தணிக்கை செய்தல்.

26. ஆதி திராவிடர் காலனிகள் மற்றும் இதர தொடர்புடைய நலத்திட்டப் பணிகள் ஆய்வு.
27. பிற்பட்டோர் நலத்துறை பணிகள் ஆய்வு.
28. குறிப்பிட்ட பகுதிகளில் Accomodation Controller ஆக பணிபார்த்தல்.
29. பருவ காலத்திற்கு ஏற்றவாறு R.S.O-13 ன் படி தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல்.
30. 1963 ம் வருட தமிழ்நாடு கடன்கள் (நியாயவார நிர்ணயம்) குறித்த மேல்முறையீடுகள்.
31. திரையரங்குகள் தணிக்கை.
32. சாவடிகள் தணிக்கை.
33. கால்நடைப்பட்டிகள் தணிக்கை.
34. மழை மானிகள் (Rain Guages) தணிக்கை.
35. நில அளவைக் கற்கள் மற்றும் கல்டெப்போ தணிக்கை.
36. பிறப்பு இறப்பு பதிவேடுகள் தணிக்கை.
37. கிராமக் கணக்குகள் தணிக்கை மற்றும் மேற்பயிராய்வு குறிப்பாக வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல் மற்றும் தண்ணீர் தீர்வை மேல்முறையீடு.
38. வருவாய்த் தீர்வாயம் நடத்துதல் மற்றும் கிராமக் கணக்குகள் தணிக்கை.
39. வெடிபொருள் சட்டம், துப்பாக்கி உரிமச்சட்டம் மற்றும் பெட்ரோலியம் சட்டம் மற்றும் பெட்ரோலியம் சட்டம் தொடர்பான பணிகள்.
40. அரசு அலுவலர் பிறந்ததேதி மாற்றம் குறித்த விசாரணைகள்
41. 1969-ம் வருட வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுறுச்சட்டம் தொடர்பான மேல்முறையீடு விசாரணைகள்.
42. இலவசப் பட்டா குறித்த மேல்முறையீட்டு விசாரணைகள் மற்றும் ஆணைகள் பிறப்பித்தல்.
43. மொலாசஸ் உரிமக் கணக்குகள் மற்றும் இருப்பு ஆய்வு செய்தல்.

44. அடகுச் கடைச் சட்டம் நடைமுறைப் படுத்துதல் தொடர்பான பணிகள்.

45. முக்கியஸ்தர்கள் (V.I.P.S) வருகை குறித்த ஏற்பாட்டுப் பணிகள்.

46. வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள்.

47. வருவாய் நிலை ஆணைகளின் கீழ் R.D.O – விற்கு வகுக்கப்பட்ட பணிகள்.

48. காப்பீட்டுத் திட்டப் பணிகள்.

49. வாகன விபத்து நிவாரணம் வழங்குதல்.

50. குத்தகைக்கு விடப்பட்ட அரசு நிலங்கள் தணிக்கை.

51. தண்ணீர் தீர்வை இனங்கள் கருத்துருக்கள் தயார் செய்தல்.

52. விற்பனை வரி ஆலோசனைக் குழு கூட்டங்கள் நடத்துதல்.

## 33. நகல் மனு Copy Application

அரசு அலுவலக ஆவணங்களின் நகல்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த ஆவணம் எந்த அலுவலகம் சார்ந்ததோ, அந்த அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளப்பட வேண்டும்.

கோரப்படும் ஆவணம் மந்தனம் சம்பந்தப்பட்டது (Confidential Nature) என்றால், அதன் நகல் வழங்குவது கூடாது. இருப்பினும் நீதிமன்றத்திலிருந்து கோரப்பட்டால் நீதிமன்றப் பார்வைக்கு அனுப்பி வைக்கலாம்.

**தேடு கூலிக் கட்டணம் பின்வருமாறு வசூலிக்கப்படுகின்றது :**

ஒவ்வொரு பதிவுக்கும்/ஆவணத்திற்கும் முதல் வருடத்திற்கு ரூ. 10

ஒவ்வொரு பதிவுக்கும்/ஆவணத்திற்கும் அடுத்தடுத்த ஒவ்வொரு வருடத்திற்கும் (For Every other year) ரூ. 5

(G.o. 7540 C.T+R.E/Dept 29.1.1996)

**பணம் செலுத்த வேண்டிய தலைப்பு : -**

(Head of Account)

0070 Other Administration Service - 60 other Services 800 other receipt - DD - Collection of user Charges on land Records.

(DP Code 0070 60 800 DD 0001)

நகல் மனு, ஒருவரால் தயார் செய்யப்பட வேண்டும், மற்றொருவரால் ஒப்பிடப்பட (Examined) வேண்டும். வட்ட அலுவலகத்தில் தலைமை இடத்து துணை வட்டாட்சியராலும், வருவாய் கோட்ட அலுவலகத்தில் P.A. to. R.D.O அவர்களாலும் உண்மை நகல்கள் சான்றொப்பமிடப்பட (attested) வேண்டும். மாவட்ட ஆட்சியரகத்தில், கலெக்டரால் இதற்கென நியமனம் செய்யப்பட்ட தலைமை உதவியாளர் (OR) நேர்முக உதவியாளரால் சான்றொப்பமிடப்பட வேண்டும். விண்ணப்பதாரருக்கு ஆவண நகல்கள் (Service unpaid தபாலில் அனுப்பப்பட வேண்டும். அலுவலர்களுக்கிடையே சான்றிட்ட நகல் வழங்கும் அதிகாரம் பின் வருமாறு :-

**வட்டாட்சியர் :-**

1. வட்டாட்சியரால் முடிவு செய்யப்பட்ட பட்டா மாறுதல் மற்றும் அடமானங்கள் (Dharkast) ஆவண நகல்கள்.
2. உரிமை விடல் ஆணை ஆவண நகல்கள்
3. புலப்படப் புத்தக நகல்கள்

4. வட்டாட்சியரின் அதிகார எல்லைக்குள் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணை நகல்கள்

5. வருவாய்த் தீர்வாயத்தில் பிறபிக்கப்பட்ட கலெக்டர்/கோட்ட அலுவலர் ஆணை நகல்கள்

6. வட்ட மற்றும் கிராமக் கணக்குகளின் நகல்கள். (R.S.O. 173)

**வருவாய் கோட்ட அலுவலர் :**

வருவாய் கோட்ட அலுவலர், தங்கள் அலுவலகம் மற்றும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள சார்நிலை அலுவலகங்களில் பிறப்பிக்கப்பட்ட ஆணை நகல்கள்.

**கலெக்டர் :**

கலெக்டர், அவரது மாவட்ட ஆவண நகல்களை வழங்கலாம். பொதுமக்கள் நலன் (OR) இரகசியத்தைப் பாதிக்காத வகையில் ஆவண நக்ல்களை வழங்குதல் குறித்து அவர் தீர்மானிக்கலாம்.

R.S.0197

## உரிமை கொண்டாடப்படாத சொத்துக்கள்

வருவாய் நிலை ஆணை எண் 197–ல் உரிமை கொண்டாடப்படாத சொத்துக்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. சட்ட முறையில் உரிமையாளரற்ற சொத்துக்கள் அசைவன, அசையாதவன எல்லாம் அரசாங்கத்திற்கே சேரும்.

2.வாரிசு இல்லாத மற்றும் கேட்பாரற்ற அசையும் சொத்துக்கள் இரண்டு வகைப்படும்

1. வாரிசு அற்றவர்கள் உயில் எழுதாமல் மரணம் எய்தினாரெனில் அவருடைய அசையும் பொருட்கள் (சொத்துக்கள்)
2. சாலைகள், வீதிகள் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட உரிமை கொண்டாடப்படாத சொத்துக்கள்

3(அ) கிராமத்திலுள்ள ஒருவர் வாரிசு இல்லாத நிலையிலும், உறவினர்களுக்கோ அல்லது வேறு விருப்பத்துடன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கோ உயில் எழுதி வைக்காமல் அசையும் சொத்து விட்டுச்சென்றால் அப்படிப்பட்ட சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் காவல்துறை மூலம் குற்றவியல் நீதிபதிக்கு அறிக்கை செய்ய வேண்டும். அசையா சொத்து இருந்தால் வட்டாட்சியரிடம் உடன் அறிக்கை செய்தல் வேண்டும்.

(ஆ) சாலைகள் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட உரிமை கொண்டாடப்படாத எந்தப் பொருள்களின் உரிமையாளர்கள் எவர் என்று தெரியவில்லையோ அப்பொருள்களை காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படை செய்வார். குற்றவியல் நீதிபதிக்கு உடனே காவல்துறையினர் தெரிவிக்க வேண்டும். அச்சொத்துக்களுக்கு உரிமை பாராட்டுபவர் மூன்று மாத காலத்திற்குள் தங்களது உரிமைகளைப் பற்றி தெரிவித்துக்கொள்ளுமாறு ஒரு அறிவிப்பு மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும். எத்தகைய உரிமைகளும் தாக்கல் செய்யப்படாவிடில் அதனின் உச்ச மதிப்பு நிர்ணயம் செய்து, பொது ஏலத்தில் விட்டு ஏலத்தின் வாயிலாக பெறக்கூடிய பணத்தை அரசு கணக்கில் கொண்டு வர வேண்டும்.

உதாரணமாக ஒரு சாலையோரத்தில் இரண்டு சக்கர மோட்டார் வாகனம் கண்டெடுக்கப்பட்டு உரிமை கொண்டாட எவரும் இல்லையெனில், வரையறுக்கப்பட்ட மூன்று மாதத்திற்குப் பின் வட்டாட்சியர் காவல்துறை அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்து கண்டெடுக்கப்பட்ட வாகனத்தின் உச்ச மதிப்பு என்ன என்பதை நிர்ணயித்து மற்ற பொருட்களை ஏலம் விடுவது போன்று மதிப்பு வரையறைக்குட்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் பொது ஏலத்தில் விட்டு அதன் வாயிலாக கிடைக்கும் பணத்தை அரசு கணக்கில் செலுத்தி வாகனத்தை ஏலம் எடுத்தவரிடம் கொடுத்து முடிவக்கு கொண்டுவந்து குற்றவியல் நீதிபதிக்கு காவல்துறை தெரிவித்து அவ்வழக்கு முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது.

# புதையல் (R.S.O.197)

புதையல் என்றால் என்ன? புதையல் பொருட்களை எவ்வாறு கையாண்டு நடவடிக்கை மேற்கொள்வது? இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் நடவடிக்கைகள் முறை இவைகள் பற்றி 1878–ம் இந்திய புதைபொருள் சட்டம் (Indian Treasure Trove Act 1878) மற்றும் இந்திய புதைபொருள் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக 20.08.1907 தேதியன்று மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ள புதைபொருள் விதிகளிலும் காணலாம். மேலும் வருவாய் நிலை ஆணை எண் 197 (Revenue Standing Order, 197)–ன் கீழும் வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

2) புதையல் என்றால் என்ன ? புதையல் என்பது பூமியில் மறைந்திருக்கும் பொருள் (S.3 defines Teasure means anything of any value hidden in the Soil ) புதைபொருள் சட்டம் பிரிவு 4(1)–ன்படி எப்போதெல்லாம் புதையல் ஒன்று பணமாக ரூபாய் பத்துக்கும் அல்லது அதனின் மதிப்பு ரூபாய் பத்துக்கும் மேலாக கண்டெடுக்கப்பட்டால் அதனை கண்டெடுத்தவர் (Finder) உடனடியாக எழுத்து மூலமான தகவலை மாவட்ட ஆட்சியருக்கு கீழ்க்கண்ட விபரங்களுடன் சேர்ப்பிக்க வேண்டும்.

அ. புதையலின் தன்மை மற்றும் பணம் அல்லது அதனின் பணமதிப்பு எவ்வளவு என்பதை ஏறத்தாள மதிப்பிட்டும்,

ஆ. புதையல் எந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டது மற்றும்

இ. புதையல் கண்டெடுக்கப்பட்ட நாள்

புதையல் பொருளை பத்திரமாக பாதுகாக்க வட்டாட்சியரிடம் தெரிவித்து அவர் வாயிலாக அவற்றை கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும். பூமியில் புதைந்தில்லாத பொருள் புதையல் அல்ல. பூமியில் பொருள் புதைந்திருந்திருந்து கண்டெடுத்தல் மற்றும் புதையல் பொருளின் உரிமையாளர் பற்றிய விவரங்கள் இல்லாதது ஆகிய இரண்டும் புதையல் என்பதற்குரிய அவசியமான அம்சங்களாகும். புதையல் பற்றிய தகவல் பெறப்படவில்லை என்று வட்டாட்சியருக்கு தெரியவந்தால், புதையலை கைப்பற்றி, கருவூலகத்தில் வைக்க வேண்டும்.

3) புதையல் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் உரிமைதாரர் (Owner) புதையலை கண்டெடுத்தவரல்லாதவராகவோ மற்றும் அவ்விடத்தில் இல்லாதிருந்தவராகவோ (Occupier) கண்டெடுத்தவருமல்ல அல்ல உரிமைதாரருமல்ல இதில் எவ்வாறிருப்பினும் அவர் புதையல் பற்றி தெரிய வரும்போது, புதையல் பற்றி தெரியவந்த நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பத்தி2–ல் (அ) முதல் (இ) வரை தேவைப்படும் விவரங்களுடன் எழுத்து மூலமான தகவல்களை மாவட்ட ஆட்சியருக்குத் தெரியப்படுத்த வேண்டும். (பிரிவு 4(2)

4) பிரிவு 4–ன்படி அல்லது வேறு வகையில் புதையல் பற்றிய தகவல்களைப் பெற்றவுடன் மாவட்ட ஆட்சியர் அவரால் சரி என்று கருதப்பட்டு அரசிதழில் புதையல் கண்டெடுக்கப்பட்ட விவரங்கள் மற்றும் இதர விவரங்களை (கிராமம், புல எண், புதையல் தன்மை, கண்டெடுக்கப்பட்ட நாள், தகவல் பெற்ற நாள், தகவலாளர் பெயர் மற்றும் முகவரி ஆகிய தேவையான விவரங்களுடன் விளம்பரப்படுத்துவார். தொடர்ச்சியாக நான்கு விளம்பரங்கள் உள்ளூர் புழக்கத்திலுள்ள மொழியில் (District language) மாவட்ட இதழில் விளம்பரப்படுத்துவார். இதன் வாயிலாக கண்டெடுக்கப்பட்ட புதையல் மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ உரிமை கோரும் அனைவரும் மாவட்ட ஆட்சியரின் முன்பாக நேரடி விசாரணைக்கு தானோ அல்லது தன்னால் முறைப்படி நியமிக்கின்ற பிரதிநிதி மூலமாகவோ ஆஜராகி உரிமை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. (பிரிவு 5(A) கண்டெடுத்தவரல்லாத பிறரிடம் கண்டெடுக்கப்பட்ட நாளில் புதையல் அவர்தம் பொறுப்பில் இருந்திருந்தால் அவருக்கும் விசாரணைக்கு நேரில் வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும். (பிரிவு 5(b) விசாரணைக்கு ஆஜராகாதவர் தனது உரிமை கோரும் நிலையை இழந்து விடுகிறார். இந்திய புதைபொருள் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்களும்(பொது) அரசாணை (நிலை எண் 1887 வருவாய் நாள் 26.10.1967) எந்தெந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்கள் உள்ளனரோ அவர்களும் (அரசாணை (நிலை) எண் 2492 வருவாய் நாள் 27.10.1969 செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ஆவார்கள்.

கண்டெடுக்கப்பட்ட புதையல் அருங்காட்சியகத்திற்கு அல்லது தொல்பொருள் ஆராய்ச்சி துறைக்கு தேவைப்படுகிறதா என்பதற்கான ஆலோசனை பெற கடிதம் இரு நகல்களுடன் மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்படும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கண்டெடுக்கப்படும் புதையல்கள் விபரங்களை தஞ்சாவூரிலுள்ள கலைக்கூடத்தின் செயலாளருக்கு அறிவுரை பெறும் பொருட்டு அனுப்பப்பட வேண்டும்.

6) புதைபொருள் சட்டம் பிரிவு 9–ன்படி மறைந்திருந்த புதையல் கண்டெடுக்கப்பட்டதற்கு நம்பத்தகுந்த காரணங்கள் ஏதுமில்லையெனில் அல்லது பிரிவு 8ன் படி வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் புதையல்பால் உரிமை கொண்டாடி உரிமையியல் வழக்கு ஏதும் நீதிமன்றத்தால் தொடராமல் இருப்பின் மற்றும் கோரப்பட்ட உரிமை நிராகரிக்கப்பட்டிருப்பின், கோரிக்கையை நிராகரித்து பிரிவு 9 ன் கீழ் மாவட்ட ஆட்சியர் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் உரிமையற்றது (Owner less) என்று முடிவு செய்து ஆணையை விளம்பரப்படுத்த வேண்டும்.

7) மேல்முறையீடு விளம்பரப்படுத்தப்பட்ட ஆணைக்கு எதிராக வருவாய் நிர்வாக ஆணையருக்கு பிரிவு 9–ன்கீழ் ஆணையிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

8) புதையலுக்கு உரிமைதாரர் இல்லை என மாவட்ட ஆட்சியர் கருதினால், அரசு அருங்காட்சியகத்தில் நிலக்கிரையமின்றி புதையலை வைக்க அனுமதிக்கலாம். பிறகு உரிமைதாரர் குறித்து முடிவு செய்யப்பட்டால் அதற்குரிய செலவீனத்தை மாவட்ட ஆட்சியரிடம் செலுத்த வேண்டும். அருங்காட்சியகத்திற்கு புதையல், தேவைப்படவில்லையெனில் என்றால், அதனை பொது ஏலத்தில் விட வேண்டும். நிலத்திற்கு உரிமைதாரரும் கோரவில்லை என்றால் புதையல் கண்டு எடுத்தவருக்கு கொடுக்கப்பட வேண்டும். மேற்படி சட்டம் பிரிவு 11–ன்படி மாவட்ட ஆட்சியர் புதையலைக் கண்டு எடுத்தவருக்கு கொடுக்க வேண்டும். பிரிவு 12–ன்படி ஒருவருக்கு மேல் உரிமை கோரினால், மாவட்ட ஆட்சியர் புதையலைக் கண்டு எடுத்தவருக்கு ¾ பாகமும் மீதமுள்ள பாகத்தை உரிமை கோருபவர்களுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் விரும்பினால், புதையலை முழுவதுமாக ஒருவருக்கோ அல்லது கூடுதலான விகிதாச்சாரத்தில் பங்கீட்டு வழங்கலாம் அல்லது மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யும் தொகையினை அல்லது கூடுதலாக தொகையினை செலுத்தலாம் அல்லது புதையலை முழுவதுமாக அல்லது பகுதியினை ஏலத்தில் இருவருக்கு பகிர்ந்து அளிக்கலாம். புதையல் கண்டு எடுத்த நிலத்தின் உரிமையாளர் அல்லது புதையல் உரிமை குறித்து தகராறு ஏற்படுமாயின், சிவில் கோர்ட் விசாரணை செய்து நிர்ணயம் செய்யும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் செயல்முறையினை நிறுத்தி வைக்கலாம். உரிமை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, பிரிவு 12–ன் படி மாவட்ட ஆட்சியர் புதையலை பகிர்ந்து அளிக்கலாம். (பிரிவுகள் 11 முதல் 15 வரை) புதையலை அரசுக்கு கையகப்படுத்துவது தொடர்பாக பிரிவு 16–ல் கண்டுள்ளபடி மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9) தண்டனைகள் – புதையலைக் கண்டெடுத்தவர் உரிய அலுவலரிடம் தகவல் தெரிவிக்கத் தவறினாலோ மற்றும் புதையல் பொருளைக் கருவூலத்தில் ஒப்படைக்கத் தவறினாலோ, புதையல் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் உரிமையாளர் (Owner) மற்றும் இடத்தில் இருப்பவர் (Occupier) புதையல் பற்றி தெரிந்தவுடன் இரண்டு மாதங்களுக்குள் உரிய அலுவலரிடம் தகவல் தெரிவிக்கத் தவறினாலோ குற்றவியல் குற்றமாகக் கருதப்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால், பிரிவுகள் 20 முதல் 22 வரை வரையறுக்கப்பட்டுள்ள தண்டனைக்குள்ளாவர். பிரிவு 20–ன்படி ஓராண்டு காலம், பிரிவுகள் 21 மற்றும் 22–ன்படி ஆறுமாத காலம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து நீதிமன்றம் தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

10) புதையல் கண்டெடுப்பு தொடர்பாக, கிராம நிர்வாக அலுவலர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

புதையல் கண்டெடுப்பு தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

- புதையல் கண்டெடுக்கப்பட்டது தெரிந்தவுடன் கண்டெடுக்கப்பட்ட புதையலைக் கைப்பற்றி வட்டாட்சியருக்கு உடனடி அறிக்கை செய்தும், கைப்பற்றப்பட்ட புதையலையும் ஒப்படைக்க வேண்டும்.
- கண்டெடுத்தவர் அல்லது கூட்டாக புதையலைக் கண்டெடுத்தவர்கள் புதையலை மறைத்தல் அல்லது அதனின் தன்மையை மாற்றும் நோக்கத்துடன் நடவடிக்கை

மேற்கொள்ளும்போது (உதாரணமாக தங்கச்சிலைகள், கவசங்கள், பொற்காசுகள், வெள்ளி பொருட்கள் இவற்றை பொன்வேலை செய்வோர், வெள்ளி வேலை செய்வோரிடம் அளித்தும் அல்லது வேறு விதமாகவும் உருக்கி அதனின் உண்மைத்தன்மையை மாற்றி சுய லாபத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் போது) இத்தகவல்கள் தெரியவந்தால் உடனடியாக கிராம நிர்வாக அலுவலர்கள் காவல்துறையினரிடம் புகார் மனு செய்து காவல்துறை அலுவலர்களின் கூட்டு முயற்சியுடன் கண்டெடுக்கப்பட்டு மறைக்கப்பட்டு அல்லது மாற்ற எடுக்கப்படும் முயற்சிகளை தடுத்து புதையல் பொருட்களை மீட்டு கைப்பற்ற உதவிட வேண்டும். இது பற்றி வட்டாட்சியருக்கு உடனடியாக அறிக்கை ஒன்றை அனுப்பிடல் வேண்டும்.

- புதையல் என்பது பட்டா நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள் அல்லது பொது இடங்களில் கண்டெடுக்கப்படலாம். அவற்றைப் பற்றிய விபரங்கள் அடங்கிய தகவல்களை உடன் வட்டாட்சியருக்கு கீழ்க்கண்டவாறு அனுப்புதல் வேண்டும்.

(அ) புதையல் கண்டெடுத்தவர் பெயர் மற்றும் முகவரி

(அ) கண்டெடுத்த நாள், நேரம் மற்றும் எம்முறையில் புதையல் கண்டெடுக்கப்பட்டது

(இ) புதையல் கண்டெடுக்கப்பட்ட கிராமம், புல எண், புதையல் கண்டெடுக்கப்பட்ட போது உடனிருந்த நபர்கள் விவரங்கள்

ஈ) புதையலின் தன்மை

→ தங்கம்,

→ வெள்ளி

→ உலோகம்

→ ஐம்பொன்

› நாணயம் – அதனின் எடை மற்றும் மதிப்பு

→ வரலாற்றுச் சின்னங்கள்

→ சிலைகள் – பூசைக்குரிய சிலைகள் அல்லது பூசைக்கு ஒவ்வாத சிலைகள்

→ தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சிக்குரிய கட்டமைப்பு, குகைகள், கல்வெட்டுகள், கலைநுட்பம் வாய்ந்த பொருட்கள்

- ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்படும் பூசைக்குரிய அல்லது பூசைக்கு தேவையில்லாத சிலைகள், பூசைப்பொருட்கள் கையகப்படுத்தும்போது மிகவும் கவனத்துடன் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு உடன் வட்டாட்சியருக்குத் தகவல் அளிக்க வேண்டும்.

- புதையல் வகைப்பாடு – புதையல்கள் கீழ்க்கண்டவாறு ஆய்வுக்கும், பராமரிப்புக்கும் பயன்படுகின்றன.

→ அருங்காட்சியகம் புதையல்கள்

→ தொல்பொருள் ஆராய்ச்சிக்கான புதையல்கள்

→ கல்வெட்டு ஆராய்ச்சிக்கான புதையல்கள்

→ அகழ்வாய்வு ஆராய்ச்சிக்கான புதையல்கள்

## 11. புதைபொருள் அலுவலர்கள்

புதைபொருள் அலுவலர் (Treasury Trove Officer) அருங்காட்சியகத்தின் இயக்குநர் (Director of Museums) புதைபொருள் இணை அலுவலராக (Associate Treasure trove Officer) கண்காணிப்பு தொல்பொருள் அறிஞர் (Superintendenting Archaeologist).

12. தெய்வ நம்பிக்கையுள்ள முக்கியத்துவம் பெற்ற புதையல்கள் இந்து அறநிலையத்துறை அருங்காட்சியகத்தில் வைக்கப்படுகின்றன. சோழ மன்னர்கள் கால கலைநயமுடைய புதையல்கள் , தஞ்சையிலுள்ள கலைக்கூடத்தில் வைக்கப்படுகின்றன. வருவாய் நிலை ஆணை எண் 197, பத்தி 4(2)ன்படி வரலாற்று மற்றும் தொல்பொருள் தொடர்புடைய புதையல்கள், அருங்காட்சியக இயக்குநருக்கு தேவையில்லை எனக் கருதுகின்ற போது, மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகத்திற்கு பயன்படுமா என அறிய அனைத்து பல்கலைக்கழகங்களையும் மாவட்ட ஆட்சியர் கலந்தாலோசித்து முடிவு செய்வார்.

13. தங்களது கிராமங்களில் கண்டெடுக்கப்படும் புதையல்கள் பலவித கோணங்களில் தேச, சமய சமூக வரலாற்று மிக்க முக்கியத்துவம் கொண்டுள்ளதாக இருக்கலாம். எனவே கிராம நிர்வாக அலுவலர்கள் புதையல் பற்றி செய்தி தெரிந்தவுடன் இடத்தை பார்வையிட்டு உடனடியாக வட்டாட்சியருக்கும் மற்றும் உயர் அலுவலர்களுக்கும் அறிக்கை அனுப்ப வேண்டும் என்பது கிராம நிர்வாக அலுவலர்களின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

# 2. தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டம், 1961

# Tamilnadu Land Reforms (Fixation of Ceiling on land) Act, 1961

## சட்டத்தின் நோக்கம்

மாநிலத்தில் வேளாண் நிலங்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. எனவே விவசாய நில உடமைகளில் ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், குறிப்பிட்ட சிலரிடம் நிலங்கள் குவிவதைத் தடுக்கவும், நில உடமைமீது உச்சவரம்பு விதிக்கவும், உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்ளைக் கையகப்படுத்தவும், அவற்றை நிலமற்ற ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கவும் அதன் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குதலையும் மேலும் பொருளாதார மற்றும் சமுதாய நீதியை நிலைநாட்டவும் நோக்கமாகக் கொண்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

1961–ம் வருட முதன்மைச் சட்டம் (Principal Act) செயல்பாட்டிற்கு வந்த நாள் : 6.4.1960

1970–ம் வருட திருத்தப்பட்ட சட்டம் (Amendment Act) செயல்பாட்டிற்கு வந்த நாள் 15.2.1970, அறிவிக்கைச் செய்யப்பட்ட நாள் 2.10.1970.

**பிரிவு 2(1):**

முதன்மைச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்த நாளில் இருந்ததாக மெய்ப்பிக்கப்படும் சமய அமைப்புகள் மற்றும் பொது இயல்பு கொண்ட சமய பொறுப்புரிமை அமைப்புகள் கொண்டிருக்கும் நிலங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது பொதுத்தன்மை கொண்ட சமய பொறுப்புரிமைக்கான அமைப்பின் சொத்தானது சமயப் பயன்களுக்காக அர்ப்பணிக்கப்படுதல் வேண்டும். சொத்திலிருந்து கிடைக்கும் வருவாயானது சமய நடைமுறை செயல்களுக்கோ அல்லது சமயப் பயன்களுக்காகவோ பயன்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் இச்சட்டத்திலிருந்து முழு விலக்கு பெற இயலும்.

2(2): சட்டம் அமுலுக்கு வந்த நாளுக்குப் பிறகு, இதுபோன்ற சமய

மற்றும் பொறுப்புரிமை அமைப்புகளின் நிலங்களுக்கு விலக்களிக்கப்படவில்லை.

2(3): பொறுப்புரிமை அமைப்புகளிலிருந்து (Public Trust) கிடைக்கும் வருமானத்தில் சமய நிறுவனங்களின் பொது நோக்கங்களுக்குப் (Religious Institutions of public nature) பயன்படுத்தப்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** சமய நிறுவனங்களின் பொது நோக்கம் என்பது, கோவில்களில் வேதங்கள், ஆகம அறிவுரைகள் வழங்கல், மண்டகப்படிகள் நடத்துதல், விழாக்கள் நடத்துதல், ஏழைகளுக்கு உணவு வழங்கல் (Poor feeding) அதே போன்று இசுலாமிய சமயத்தில் முஸ்லீம் சிறார்க்கு குரான் அறிவுரை வழங்கல், அராபிய மொழியில் கல்வி போதனை போன்றவை ஆகும்.

3(1). **விவசாய நிலம் (Agriculture):** விளைநிலம் உட்பட தோட்ட சாகுபடி நிலம், மேய்ச்சல் நிலம், உரப்பயிர் நிலம், பால் பண்ணை, கோழிப்பண்ணை, கால்நடைப் பண்ணை, மரம் வளர்ப்பு முதலியவை வேளாண்மை பணி தொடர்புடைய நிலங்களாகும்.

3(5). **அதிகாரம் பெற்ற அலுவலர் (Authorised Officer):** அரசாணை (Ms) W.34 வருவாய் LR I (2) துறை நாள்: 14.1.2015–படி வருவாய் கோட்டாட்சியர் இச்சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3(10). **பயிரிடும் குத்தகைதாரர்:** மற்றொருவருக்குச் சொந்தமான நிலத்தை குத்தகை ஒப்பந்த (Tenancy Agreement) அடிப்படையில் உழுபவர்.

3(11). **சட்டம் துவங்கிய நாள்:** 15.2.1970

3(14). **குடும்பம் என்பது:** கணவர், மனைவி, மைனர் மகன், மணமாகா மகள், மைனர் பேரன், மணமாகா பேத்திகள் (ஆண் வழியில் வந்தவர்) இவர்களை உள்ளடக்கி இருக்கும்.

3(22). **நிலம் என்பது:** விவசாய நிலம், வனநிலம், மேய்ச்சல் நிலம்,

தோட்டம் மற்றும் தோப்பு முதலியவை அடங்கும். வீட்டு மனையும், விவசாய நோக்கமல்லாத காரியத்திற்குப் பயன்படுபவையும் இதில் அடங்காது.

3(26). **நிலத்தீர்ப்பாயம் (Land Tribunal) என்பது:** மாவட்ட வருவாய் அலுவலர் ஆவார்.

3(22). **பழத்தோட்டம்:** வரப்பு ஓரம், வேலி ஓரம் வளர்ந்தவை, பழத்தோட்டம் என்ற வகைக்கு உள்ளடங்காது. மேலும் வாழைமரம் இதில் வராது.

3(35). **தோட்ட நிலம்:** ஏலக்காய், சின்கோனா, காபி, ரப்பர் அல்லது தேயிலை விளையும் நிலம்.

3(36-B). **சமய நிறுவனம்:** கோவில், மடம், பள்ளி வாசல், சர்ச் போன்றவை.

3(40). **தர ஏக்கர் என்பது:**

தர ஏக்கராக மாற்றுவதற்கான அட்டவணை:

| ஏக்கருக்கு தீர்வை | சாதாரண ஏக்கர் | தர ஏக்கர் | தர ஏக்கராக மாற்றும் விகிதம் |
|---|---|---|---|
| **புஞ்சை நிலத்திற்கு**<br>ரூ. 1.25ற்குக் கீழ் | 4 | 1 | பரப்பு x 1/4 |
| ரூ. 1.25 – 2.00 | 3 | 1 | பரப்பு x 1/3 |
| ரூ. 2.00 க்கு மேல் | 2.5 | 1 | பரப்பு x 2/5 |
| **நஞ்சை நிலத்திற்கு**<br>ரூ. 4க்கு கீழ் | 2 | 1 | பரப்பு x 1/2 |
| ரூ. 4.00 – 6.00 | 1.75 | 1 | பரப்பு x 4/7 |
| ரூ. 6.00 – 8.00 | 1.60 | 1 | பரப்பு x 5/8 |
| ரூ. 8.00 – 10.00 | 1.20 | 1 | பரப்பு x 5/6 |
| ரூ. 10.00 – 15.00 | 1 | 1 | சாதாரண ஏக்கருக்கு சமமான பரப்பு |
| ரூ. 15.00க்கு மேல் | 0.80 | 1 | பரப்பு x 5/4 |

3(42). **சீதன நிலம்:** சட்ட துவக்க நாளில் (15.2.1970–ல்) குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர் பெயரில் உள்ள நிலமாகும்.

3(47). **தோப்பு:** பனை மரங்கள் உட்பட பழ மரங்கள் அடங்கும்.

3(49). **டிரஸ்ட் (நம்பகம்) என்பது:** சமய மற்றும் அறப்பண்பு கொண்ட ஒரு பொறுப்புரிமை அமைப்பு ஆகும்.

**பிரிவு 5. நில உச்ச வரம்பு (தர ஏக்கரில்):**

(1) (a) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு 15 ஏக்கர்.

(1) (b) குடும்பத்தில் ஒவ்வொரு கூடுதல் உறுப்பினரும் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு – 5 தர ஏக்கர். பிரிவு 5(5)–படி ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக்கூடிய மொத்த நில உச்சவரம்பு அளவு 30 தர ஏக்கர்.

(1) (c) சட்ட துவக்க நாளில் (15.2.1970–ல்) நிறுவனங்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அதிபட்ச நில உச்சவரம்பு அளவு அட்டவணை:

| வ. எண். | நிறுவனம் | தர ஏக்கர் |
|---|---|---|
| 1. | பல்கலைக்கழகத்தால் ஏற்கப்பட்ட அல்லது இணைந்த கல்லூரிகள் | 40 தர ஏக்கர் |
| 2. | அரசினரால் அல்லது பல்கலைக்கழகத்தால் ஏற்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் | 20 தர ஏக்கர் |
| 3. | துவக்கப்பள்ளி அல்லது உயர் துவக்கப்பள்ளி | 10 தர ஏக்கர் |
| 4. | மாணவர் விடுதி | 25 தர ஏக்கர் |
| 5. | பாலிடெக்னிக் | 25 தர ஏக்கர் |
| 6. | வேளாண் பள்ளி | 25 தர ஏக்கர் |
| 7. | கைவிடப்பட்டோர் காப்பகம் | 25 தர ஏக்கர் |

5(1)(d). **அறப்பண்பு கொண்ட ஒரு பொறுப்புரிமை அமைப்பு** (Public Trust of a Charitable nature) கொண்டிருக்க அனுமதிக்கப்பட்ட உச்ச அளவானது சட்டம் அமுலுக்கு வந்த நாளில் 5 தர ஏக்கராகும்

5(3)(c). சட்டம் துவக்க நாளுக்குப் பிறகு உருவான ஒரு பொறுப்புரிமை அமைப்பு சொந்தமாக நிலம் வைத்திருக்கக்கூடாது.

5(4)(a). ஒரு குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர் சீதன சொத்தாக 10 தர ஏக்கர் வரை சொந்தமாக வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு குடும்பம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட 15 தர ஏக்கரில், பெண் கொண்டுள்ள முழு சீதன சொத்தும் சேர்க்கப்பட்டால் அவர் சீதன சொத்தாக தனியே எந்த நிலத்தையும் வைத்துக்கொள்ள முடியாது.

## எடுத்துக்காட்டுகள்

(i) ஒரு குடும்பம் கணவரையும் அவரது மனைவியையும் கொண்டுள்ளது. பிரிவினையாகாத இந்துக் குடும்பத்தில் கணவரின் பங்கு 10 தர ஏக்கர் ஆகும். மனைவி 10 தர ஏக்கர் சீதன நிலம் கொண்டுள்ளார். அனுமதிக்கும் 15 தர ஏக்கரில், மனைவியின் சீதனமாக 10 ஏக்கரையும் சேர்த்தால் பிறகு கணவரின் பங்கில் 5 தர ஏக்கர் அளவு சேர்த்து 15 தர ஏக்கர் நிலம் ஆக்கலாம். 5 தர ஏக்கர் நிலம் மிகுதி (surplus) எனக் கொள்ளப்படும். மனைவி கூடுதல் அளவு சீதன நிலத்தை கொண்டிருக்க உரிமையில்லை. (பிரிவு–5(4))

மாற்றாக பிரிவு 5(1)–படி அனுமதிக்கப்படும் 15 தர ஏக்கரில் கணவரின் பங்கான 10 தர ஏக்கரைச் சேர்த்தால், மனைவியின் 5 தர ஏக்கர் அளவு சீதன நிலத்தையும் சேர்த்து 15 தர ஏக்கராக ஆக்கலாம். மனைவி 5 தர ஏக்கர் சீதன நிலத்தை வைத்திருக்கலாம். இதில் மிகுதி நிலம் இல்லை (பிரிவு 5(4).

(ii) ஒரு முஸ்லீம் குடும்பமானது, கணவன், அவரது மனைவி மற்றும் இரண்டு மைனர் மகன்களைக் கொண்டுள்ளது. மனைவி 15 தர ஏக்கர் சீதன சொத்து கொண்டுள்ளார். மைனர் மகன்கள் பெயரில் சொத்து ஏதும் இல்லை. கணவர் 25 தர ஏக்கர் நிலம் கொண்டுள்ளார். குடும்பம் கொண்டிருக்கும் உரிமையுள்ள நிலத்தில் கணவரது நிலத்தை மட்டும் உள்ளடக்கினால் மனைவி கூடுதலாக 10 தர ஏக்கர் நிலம் கொண்டிருக்கலாம். மீதமுள்ள 15 தர ஏக்கர் நிலம் உபரி (surplus) எனக் கருதப்படும்.

(iii) ஒரு கிறித்துவ குடும்பம் கணவர் அவரது மனைவி அவரது இரண்டு மைனர் மகன்களைக் கொண்டிருக்கிறது. கணவருக்கும் மைனர் மகன்களுக்கும் சொத்து ஏதும் இல்லை. மனைவி 20 தர ஏக்கர் நிலம் கொண்டுள்ளார். குடும்பம் 15 தர ஏக்கர் நிலம் கொண்டிருக்கலாம். மீதமுள்ள 5 தர ஏக்கர் நிலம் மிகுதி (Surplus) எனக் கொள்ளப்படும். மனைவி கூடுதலாக சீதன நிலம் கொண்டிருக்க உரிமையில்லை.

**பிரிவு 6:**

தனியாரால் ஒரு பொறுப்புரிமை அமைப்பு (Public Trust) உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் ஒரு பங்கினை அவர் எடுத்துக் கொண்டாலும், சொத்து அவருக்கு மட்டும் உரிமையானதாக இருக்கும் நிலையிலும் அந்த அமைப்பிற்கு இச்சட்டப்படியான விலக்கு அளிக்க முடியாது.

**பிரிவு 7:**

உச்ச வரம்பை கணக்கீடு செய்கையில், நஞ்சை நிலத்தைப் பொருத்த வரையில் ½ சாதாரண ஏக்கரும், புஞ்சை நிலத்தைப் பொருத்து 1 சாதாரண ஏக்கர் வரையிலும் விலக்களிக்கலாம்.

**பிரிவு 8:**

சட்டம் துவங்கிய நாளிலிருந்து (15.2.1970) 30 நாட்களுக்குள் உச்சவரம்பிற்குமேல் நிலமுள்ளவர் கீழ்கண்ட விவரங்கள் அடங்கிய அறிக்கையை RDO விற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி அறிக்கைப்படிவம் **இணைப்பு G–ல்** உள்ளது

i) அனைத்து நிலங்களும் அடங்கிய விவரங்கள்;

ii) குடும்ப உறுப்பினர்கள் விவரம் மற்றும் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் சொந்தமாக உள்ள நில விவரம்

iii) ஒரு பொறுப்புரிமை அமைப்பிற்கு அக்கறை உள்ள நில விவரம் அல்லது அந்த நிலத்திலிருந்து பெறக்கூடிய வருமானத்தை குடும்ப உறுப்பினர் பயன்படுத்தி வந்தால் அதன் விபரம்

iv) சட்டம் துவக்க நாளில் தோட்ட நிலங்களுக்கு இடையே மற்றும் ஒட்டியுள்ள நில விபரம்

v) நிலத்தைப் பொருத்த இதர வில்லங்கம் மற்றும் அதற்கு கடன் கொடுத்தவர் பற்றிய விவரங்கள்

vi) நிலத்தைப் பொருத்து வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தால் அதன் விவரம்

vii) உச்சவரம்பிற்குள் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் நில விவரம் மற்றும் உபரி நிலமாக அறிவிக்கை செய்ய விருப்பம் தெரிவிக்கும் நில விவரம்

viii) குடிவாரதாரர் உழும் நில விவரம், அவர் பெயர் மற்றும் விலாசம்

ix) இதர விவரங்கள்

இராணுவப் பணியில் உள்ள ஒருவர் 30 நாட்களுக்குப் பதிலாக 1 வருடத்திற்குள் மேற்கண்ட தவல்களைத் தரலாம்.

குடும்பத்தை அல்லது சொத்தை நிர்வகிப்பவர் மேற்கண்ட விவரங்களை குடும்ப உறுப்பினர்கள் சார்பில் குறிப்பிட்ட நாட்களுக்குள் தெரிவிக்கலாம்.

எது எவ்வாறாக இருப்பினும், குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும், தங்களது முகாந்திரத்தை அளித்து அறிக்கையைத் தயாரிக்கு முன் RDO பிரிவு 10(1)–லான வரைவு விளம்பல் அறிக்கையைத் தயாரிக்குமுன் போதுமான கால அவகாசம் அளிக்க வேண்டும்.

## தகவல் சேகரித்தல்

பிரிவு 9(1) உச்ச வரம்புக்குமேல் நிலம் வைத்திருப்பவர் அவ்வாறு தகவல் தர தவறினால் அல்லது தவறான தகவல் தந்தால் RDO ஓர் அறிவிப்பு மூலமாக 30 நாட்களுக்குள் தகவல் தர அறிவுறுத்தி பெறலாம். (பிரிவு 9–1)

9 (2)-(b)**யிலான ஆணை:** சாகுபடிக்கு தகுதியான நிலங்கள் குறித்த விவரங்களை RDO சேகரித்து, நிலச் சுவான்தாருக்கு ஒரு வாய்ப்பளித்து, பின் சட்டப்பிரிவு 9(2)(b)-யின்கீழ் அவருக்கு சொந்தமான மொத்த நிலங்கள் உச்ச வரம்பிற்குள் வரும் நிலங்கள், உபரியாக உள்ள நிலங்கள் குறித்த ஆணையைப் பிறப்பிப்பார் (மாதிரி ஆணைப்படிவம் **இணைப்பு A**–ல் உள்ளது) அந்த ஆணை அவருக்கு சார்வு செய்யப்பட்டு,

வைத்துக் கொள்ளக்கூடிய நிலம் அதே போன்று உபரியாக உள்ள நில விபரம், மாநில அரசிதழில் விளம்பரம் செய்யப்படுவதோடு, நில உரிமையாளருக்கும் சார்வு செய்வார். 12-வது பிரிவின் கீழான இறுதி அட்டவணை மாதிரிப்படிவம் **இணைப்பு C-ல்** உள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர் நில சீர்திருத்த ஆணையருக்கு ஒரு சீராய்வு மனு செய்து கொள்ளலாம்.

### பிரிவு 13. உச்சவரம்பு கணக்கிடுதலுக்கு சில நிலங்களுக்கு விலக்களிப்பு:

நில வாரியம் (Land Board) வழக்கு சம்பந்தப்பட்ட நிலம் மற்றும் தோட்ட விரிவாக்கத்திற்கு பயன்படக்கூடிய நிலங்களை, உச்ச வரம்பு கணக்கிட எடுத்துக் கொள்ளல் ஆகாது. இருப்பினும், இந்நிலங்கள், உச்ச வரம்பிற்கு மேற்பட்ட நிலங்களின் வகைக்குள் வருமென்றால், விளம்பரப்படுத்தப்படவுள்ள பிரிவு 12-லான இறுதி அட்டவணைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

### பிரிவு 14. திருத்த அறிவிக்கை

மேற்கண்ட வழக்கு அல்லது நிலவாரிய தீர்ப்பிற்கிணங்க பிரிவு 12-லான இறுதி அட்டவணைக்கு திருத்த அறிவிக்கையை RDO பிறப்பிக்கலாம்.

### பிரிவு 15. தவறுகளை நல்லெண்ண அடிப்படையில் திருத்தம் செய்தல்:

மேற்கண்ட பிரிவுகள் 12 மற்றும் 14-ல் ஏற்படும் தவறுகளை (clerical or arithmetical mistake) நல்லெண்ண அடிப்படையில் திருத்தி, ஆணையிட RDO-விற்கு எக்காலத்திலும் அதிகாரம் உள்ளது [பிரிவு-15-b].

### பிரிவு 16. சுவாதீன அடமானம்:

உச்ச வரம்புக்கு மேற்பட்ட நிலத்தை ஒரு சுவாதீன அடமானம் பெற்றவர் (Possessory mortgagee) கொண்டிருந்தால் அவற்றை சுவாதீன அடமானம் வைத்தவர் (possessory mortgagor) வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். (பிரிவு-16-1). அதற்கான அடமானத் தொகையை அடமானம் வைத்தவர், அடமானம் பெற்றவருக்கு வழங்க வேண்டும்.

[பிரிவு– 16-(3) (a) i]. அவ்வாறு நிலம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட நாள்முதல் அதற்கான வட்டித்தொகை ஆண்டுக்கு 5½% வீதம் வழங்கப்படவும் வேண்டும். [பிரிவு– 16-3(c)].

## பிரிவு 17. குத்தகைதாரர் கொண்டிருக்கும் மிகுதி நிலம்:

உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலத்தை குத்தகைதாரர் கொண்டிருந்தால், அதை அவர் நில உரிமையாளர் வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் [பிரிவு–17–1]. அதற்கான இழப்பீட்டுத்தொகையாக சட்டத்தின் Part I of Schedule-III–ல் கண்டபடி, நிலத்தின் ஆண்டு மதிப்பில் 8–ல் 1–பங்கினை, குத்தகைதாரருக்கு நிலச்சுவான்தார் வழங்க வேண்டும். [பிரிவு 17–2]. இப்பண பங்கீட்டில் தாவாக்கள் எழுந்தால், RDO–அதனைத் தீர்வு செய்ய வேண்டும். [பிரிவு 17–3].

## பிரிவு 18. உபரி நிலத்தைக் கையகப்படுத்துதல்:

பொது நோக்கத்திற்காக, உபரி நிலம் வேண்டி ஓர் அறிவிக்கையை (Notification), இறுதி அட்டவணை வெளியிட்ட பின்னர் அரசு வெளியிடும். [பிரிவு–18–1]. இது மாநில அரசிதழில் விளம்பரப்படுத்தப்படும். பிரிவு 18(1) லான உபரி நில இறுதி அறிவிக்கை மாதிரிப்படிவம் **இணைப்பு** D-யில் உள்ளது. அவ்வாறான அறிவிக்கையை பின்னர், நிலம் அமைந்துள்ள கிராமத்தில் RDO வெளியிடுவார் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அவ்வறிக்கையின் நகலொன்றை அனுப்பி வைப்பார். அறிவிக்கை வெளியானதும், அதில் கண்ட நிலம், அதனுடன் இருக்கும் மரங்கள், கட்டிடங்கள், இயந்திரங்கள், தளவாடம், உபகரணம், கிணறு, வடிகால் நிலைகள், மின்சக்தி சாதனங்கள் போன்ற அனைத்தும் பொது நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் [பிரிவு 18-3]. வெளியீட்டு தேதி முதல் வில்லங்கம் ஏதுமின்றி சொத்து அரசிடம் சேர்ந்தடையும்; அந்த நிலத்திலுள்ள நபர்களின் எல்லா உரிமைகள், உரிமைமூலம் மற்றும் நலன்கள் (right, title and interest) அந்தத் தேதி முதல் மறைந்ததாகக் கருதப்படும் (18–3). அறிவிக்கை வெளியான பின்னர் எந்த நேரத்திலும் RDO நிலத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம் [பிரிவு 18–4].

**பிரிவு 18-B மற்றும் 18-C: பிரிவு 18(I) அறிவிக்கையை திருத்தம் செய்ய அரசுக்கு அதிகாரம்:**

இப்பிரிவுகளின்கீழ் அரசு, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அறிவிக்கையை மாற்றிடவோ, திருத்தவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரம் பெற்றுள்ளது.

**பிரிவு 18-D. அரசுக்கு நிலம் சாராத நேர்வுகள்:**

பிரிவு– 18-B மற்றும் 18-C நேர்வுகளில், சில புல எண்கள் மற்றும் பரப்புகள் பிரிவு 18–1–ல் கண்ட உபரி நில அறிவிக்கையிலிருந்து நீக்கம் செய்யும் நேர்வுகளில், அந்த நிலத்திற்கு பிரிவு 50–ன்படி வழங்கப்பட்ட தொகையை, வருவாய் வசூல் சட்டப்படி வசூல் செய்யலாம். (பிரிவு 18-D(a)]. அந்த நிலம் மீண்டும் நிலச்சுவான்தாரைச் சென்றடையும்; இதற்கு முன்பு அதில் செய்யப்பட்ட நில ஒப்படைப்பு ஏதுமிருப்பின், அதுவும் ரத்து செய்வதற்குள்ளாகும். [பிரிவு-18-D(2)].

**பிரிவு 18(E): இறுதி அறிக்கைக்குப் பின் சில நிலங்களை உபரி நிலப்பரப்போடு சேர்க்கும் நேர்வுகள்:**

பிரிவு 18-B, 18-C படியான இறுதி அறிவிக்கை (பிரிவு18–1)க்குப் பிந்தைய திருத்த நேர்வுகளில் சில நிலங்களை உபரி நிலமாக சேர்க்கும்பொழுது, அவை அரசின் கட்டுப்பாட்டிற்கு வந்ததாகக் கருதப்படும்.

**பிரிவு 18(F):**

சட்டப்பிரிவு 18–3– படி கையகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் நிலங்களில் எவர் ஒருவர் தொடர்ந்து அனுபவம் செய்து பயன் அடைந்து வருகிறாரோ, அவர் அவ்வாறு அனுபவம் செய்துவரும் கால அளவிற்கு, அரசுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் [பிரிவு–18-F(1)]. அந்தத் தொகையை வருவாய் வசூல் சட்டப்படி வசூலிக்கலாம். (பிரிவு 18-F(2)].

## அத்தியாயம் – III

## எதிர்காலத்தில் நிலம் வாங்குதலுக்கு கட்டுப்பாடு விதித்தல்

**பிரிவு 19. கிரயம் வாங்குபவர் சார்பதிவாளர் முன்பு உறுதிமொழி (Declaration) தாக்கல் செய்தல்:**

அறிவிக்கை தேதிக்குப்பின் கிரயம் வாங்குபவர், நிலம்

பதிவின்போது தமக்கு மொத்தமாக உள்ள நில விவரத்திற்கான ஒரு உறுதிமொழியை, இரட்டைப் பிரதிகளில், சார்பதிவாளர் முன்பு தாக்கல் செய்ய வேண்டும். [பிரிவு 19-1]. அதன் நகலொன்றை RDO பரிசீலனைக்கு சார்பதிவாளர் அனுப்ப வேண்டும் [பிரிவு–19-2].

**பிரிவு 20. உச்ச வரம்புக்கு மேல் நிலம் உள்ளவர் கூடுதலாக நிலம் கிரயம் வாங்குதலுக்கு தண்டம்:**

பிரிவு–7–ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட உச்ச வரம்புக்கு மேலாக, நிலம் உள்ளவர் அறிவிக்கை செய்யப்பட்ட நாளுக்குப்பிறகு கூடுதலாக வாங்கும் நிலம், தண்ட இழப்பாக அரசுக்கு பரிவர்த்தனை செய்ததாகக் கருதப்படும். [பிரிவு–20-1]. அரசுடன் பரிவர்த்தனை செய்துகொண்டதாக கருதப்பட்ட மேற்படி நிலத்திற்கான அரசு நிர்ணயம் செய்யும் ஒரு இழப்பீட்டுத் தொகை உரிய விசாரணைக்குப் பின் கிரயதாரர்க்கு வழங்கப்படும் [பிரிவு–20-1(b)]. நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கு எதிராக, எந்த நீதிமன்றத்திலும் வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல [பிரிவு–20-1(c)].

அதுபோன்று, அறப்பண்பு கொண்ட ஒரு பொறுப்புரிமை அமைப்பு அறிவிக்கை நாளுக்குப் பிறகு கிரயம் வாங்கினாலும், மேற்கண்ட சட்டப்பிரிவு 20–ன்படியான தண்ட நடவடிக்கைகள் தொடரப்படும். [பிரிவு–20-A].

**பிரிவு 21.**

நீதிமன்ற தீர்ப்பு அல்லது பரம்பரை சொத்து நிலம்,

மேற்கண்டபடி ஒருவருக்கு கிடைக்கப்பெறும் உபரி நிலத்திற்கான தகவலை அறிவிக்கை நாளிலிருந்து 90 நாட்களுக்குள் RDO–விற்கு தெரிவிக்க வேண்டும். [பிரிவு– 21-1]

சட்டத் துவக்க நாளிற்குப் பிறகு, திருமணம் அல்லது தத்து எடுத்தல் மூலம் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய உபரிநிலத் தகவலை 90 நாட்களுக்குள் RDOவிற்குத் தெரிவிக்க வேண்டும். [பிரிவு–21-2].

அவ்வாறு தகவல் தரத் தவறினால் சட்டப்பிரிவு 9–ன் நடைமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும். [பிரிவு–21-3].

**பிரிவு 21-A.**

**15.2.1970 மற்றும் 2.10.1970 கால இடைவெளியில் ஏற்பட்ட பரிவர்த்தனை செல்லுபடியாகும்:**

15.2.1970-2.10-1970-கால இடைவெளியில ஏற்பட்ட பாகப்பிரிவினை, உரிமை மாற்றம் தானம், கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு செய்யும் தானம், முதலியவை செல்லும்தன்மை கொண்டவை.

**பிரிவு 22. 15.2.1970 மற்றும் 2.10.1970 கால இடைவெளியில் ஏற்பட்ட பரிவர்த்தனை எப்பொழுது செல்லுபடியாகாது?**

மேற்கண்ட கால இடைவெளியில் ஏற்பட்ட பரிவர்த்தனை/ பாகப்பிரிவினையால், மிகைநிலப்பரப்பு மாறும் நிலையிலும்; சட்டத்தின் குறிக்கோளை முடியடிக்கும் நிலையிலும் இருந்தால், அது செல்லுபடியாகாது. இந்த நிலங்களும் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

**பிரிவுகள் 24-30: நிலவாரிய அமைப்பு மற்றும் பணிகள்:**

நிலவாரிய (Land Board Chairman) தலைவர் – நில சீர்திருத்த ஆணையர் பணிகள் குறித்து விவரிக்கின்றது.

**பிரிவுகள் 30-34. தோட்டங்களுக்கு இடையே அமைந்த நிலங்கள்:**

தோட்டங்களுக்கு இடையே அமைந்த (interspersed) அல்லது ஒட்டி அமைந்துள்ள (contiguous) நிலங்களை நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேல் பெற நில வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் [பிரிவு–30]. எனினும், அனுமதிக்கப்பட்ட நிலத்தின் அளவு, தோட்டத்தின் மொத்தப்பரப்பில் 20% மேல் இருக்கலாகாது [பிரிவு–31], நிலவாரியம் அனுமதி வழங்கும்முன் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயங்கள் [பிரிவு–32], நிபந்தனை மீறும் நிகழ்வுகளில், அனுமதியை நிலவாரியம் ரத்து செய்யலாம் [பிரிவு–33], நிலவாரியத்தின் முடிவு இறுதியானது [பிரிவு–34].

பிரிவு 36.

நிலவாரியம் பதிவுகளை திருத்தவும், எழுத்துப் பிழைகளை சரி செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

**பிரிவு 37-A. தொழில் அல்லது வணிக நிறுவனங்கள், மிகுதி நிலம் கொண்டிருக்க அரசு அனுமதி வழங்கல்:**

எந்த ஒரு தொழில் அல்லது வணிக நிறுவனமும் உச்ச அளவிற்கு மேல் நிலம் கொண்டிருக்க அரசு அனுமதி வழங்கலாம். [பிரிவு–37-A].

இந்நிறுவனங்கள் உச்ச அளவிற்கு மேல் நிலம் பெற படிவம் 36–ல் அரசினருக்கு (வருவாய்த்துறை) விண்ணப்பிக்க வேண்டும். மாதிரிப்படிவம் **இணைப்பு H**–ல் உள்ளது. அதன்பேரில், விவசாய உற்பத்திக்கென்றால், 3 வருடங்கள் வரையிலும், மேலும் தொடர்ந்து அரசினர் அனுமதி அவ்வப்பொழுது நீட்டித்தும் வழங்கப்படும். கனிமம் வெட்டி எடுப்பதற்காக (Mining operations) உபரி நிலம் அனுமதி கோரப்பட்டால் 1957-ம் வருட கனிம வளச் சட்டம் (Mines and Minerals (Regulation and Development) Act, 1957 (Central Act LxVII of 1957) மற்றும் விதிமுறைகள்படி உரிமம் அல்லது குத்தகை அனுமதிக்கப்பட்ட காலம்வரை, அரசு அனுமதி வழங்கும். எதிர்கால தொழில் அல்லது வர்த்தக விஸ்தரிப்புக்கு உபரிநிலம் கோரப்பட்டால், அரசு அனுமதி வழங்கும் காலத்திற்குள் (குறிப்பாக 5 வருடத்திற்குள்) உபரி நிலம் அந்த நோக்கத்திற்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அரசினரால் வழங்கப்படும் அனுமதி மற்றும் நோக்கம் நிறைவேற்றப்படல் குறித்து, வருவாய் ஆய்வர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலரால் அவ்வப்பொழுது, ஆய்வு / தணிக்கை மேற்கொள்ளப்படும். அரசு அனுமதி பெற்று உபரிநிலம் பயன்படுத்தும் நிறுவனம், கோரப்படும் அறிக்கைகளை அவ்வப்பொழுது அனுப்பி வைக்க வேண்டும். நிறுவனம் இயங்கா நிலைக்கு வந்தால் அரசிற்கு தகவல் அளிக்க வேண்டும். [நில சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு நிர்ணய விதிகள் 1961- விதி 55(A)].

**பிரிவு 37-B. பொது பொறுப்புரிமை அமைப்பு (Trust), ஒரு கல்வி நிறுவனம் (or) மருத்துவமனை நிறுவிட, மிகுதி நிலம் கொண்டிருக்க அனுமதி வழங்கல்:**

ஒரு பொறுப்புரிமை அமைப்பு (Trust), ஒரு கல்வி நிறுவனம் அல்லது

மருத்துவமனை நிறுவிட அல்லது ஏற்கனவே இருக்கும் கல்வி நிறுவனங்கள் அல்லது மருத்துவமனை விரிவுபடுத்த அரசின் அனுமதி பெறலாம். [பிரிவு–37-B]. இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பத்தை படிவம் 38–ல் அரசினருக்கு (வருவாய்த்துறை) அனுப்பப்பட வேண்டும். மாதிரிப்படிவம் **இணைப்பு I** –ல் உள்ளது. விதி 66–க்கு உட்பட்டு அரசினரால் இந்த அனுமதி வழங்கப்படும். D.R.O.–விடம், பிரிவு 37-B-ன்கீழ் குறை களைவு அறிக்கை கோரல் மாதிரி அறிக்கை **இணைப்பு E**–ல் உள்ளது. மேலும் அரசு ஆணை பெற நில சீர்திருத்த ஆணையர் அனுப்பிய பரிந்துரை கருத்துருக்கள், மாதிரி அறிக்கை **இணைப்பு F**-ல் உள்ளது.

**பிரிவு 37-B யிலான கருத்துக்களுடன் இடம்பெற வேண்டிய அம்சங்கள்:**

i) அனுமதி கோரும் நிலங்களில் எவ்வித கட்டுமானங்களும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளுதல்;

ii) பட்டாநிலங்களுக்கு இடைப்பட்ட புறம்போக்கு மற்றும் விளக்கிகளில் ஆக்கிரமிப்பு மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இடையூறு தவிர்த்தல்;

iii) பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுமக்களுக்கு உதவும் வாய்ப்பு;

iv) உபரி வருமானத்தை அறக்கட்டளையின் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்துதல்

**அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள்:**

i) படிவம் 38–லான விண்ணப்பம்;

ii) அறக்கட்டளை பதிவு ஆவணம்

iii) கடந்த 3 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை

iv) திட்ட அறிக்கை

v) கல்வி நிறுவனத்திற்கான அரசு அங்கீகார ஆணை

vi) கோ.ஆ.த/வ.ஆ.த புலத்தணிக்கைக் குறிப்பு

viii) கி.நி.அ/நம்பகத் தலைவர் வாக்குமூலம்

**பிரிவு** 38-49: நீக்கம் செய்யப்பட்டது.

**பிரிவு 50. கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு தொகை வழங்குதல்:**

அட்டவணை–III [Schedule - III] –ல் குறிப்பிட்ட வீதப்படி, நிலத்தில் உள்ள ஒருவரது உரிமை, உரிமைமூலம் மற்றும் நலன் (Right, Title and Interest) அடிப்படையில் அவருக்குத் தொகை வழங்கப்பட வேண்டும். [பிரிவு 50–1].

பாத்தியதை கோருபவர், பிரிவு 18(1)–லான இறுதி அறிவிக்கை வெளியான 30 நாட்களுக்குள், குறிப்பிட்ட படிவத்தில், RDO–விடம் மனு கொடுக்க வேண்டும். [பிரிவு–50-2].

RDO அட்டவணை–III-ல் குறிப்பிடப்பட்ட வீத அடிப்படையில் தீர்மானித்து, வரைவு மதிப்பீட்டுப்பட்டி (draft assessment roll) தயாரித்து, அளிக்கப்படும் தொகை பற்றிய தகவலுடன் வெளியிடுவார் [பிரிவு–50-3].

வரைவில் குறிப்பிட்ட நபர்களுக்கு RDO அதனை அனுப்புவார். இதில் மறுப்பு ஏதேனும் இருப்பின், வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர் RDO விற்கு தெரிவிக்க வேண்டும் [பிரிவு–50-3(a)ii].

குறிப்பிட்ட காலத்திற்குள் மறுப்பு ஏதும் தெரிவிக்கப்படாவிடில், வரைவு மதிப்பீட்டுப் பட்டியை இறுதியாக வெளியிடுவார்.

விசாரணையை முடித்து 6 மாதத்திற்குள் தொகை வழங்குவதற்கான பணியை முடித்து விடுவார்.

**பிரிவு 51, 52 மற்றும் 53:**

உபரி நிலத்தின்மீது அடைமானம் பெற்றவர் (mortgagee), பொருட்பிணைப் பொறுப்பு பெற்றவர் (charge holder) வரையுடை உரிமையர் (limited owner) மற்றும் வாழ்க்கைப் பொருளுதவி பெற்றவர் (maintenance holder) ஆகியோரின் பாத்தியதை:–

நிலத்தின்மீது மேற்கண்ட நபர்களின் பாத்தியதை அடிப்படையில் தொகை வழங்கும் நடைமுறை விவரிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு 54: உபரி நிலத்தின்மீதான குத்தகைதாரரின் பாத்தியதை:**

அட்டவணை–IV-ல் குறிப்பிட்ட வீதத்தில் குத்தகைதாரருக்கு தொகை வழங்கப்படும்.

**பிரிவு 55. தொகை செலுத்தப்படும் முறை:**

தொகை, அரசு முடிவுக்கு ஏற்ப ரொக்கமாக அல்லது உறுதிமுறியாக (bond) அல்லது பகுதி ரொக்கம் அல்லது பகுதி உறுதிமுறியாக செலுத்தப்படும்

பிரிவு 18(1)–லான இறுதி அறிவிக்கைக்குப்பின், இறுதி வரைவு மதிப்பீட்டுப்பட்டி (Final Assessment Roll) வெளியீட்டு தேதியிலிருந்து 1 வருடத்திற்குள் தொகை வழங்கப்படும்.

மேலும், பிரிவு 18(1)-லான இறுதி அறிவிக்கை நாளிலிருந்து நில உடமை கொண்டிருப்பவருக்கு வட்டி கணக்கிடப்பட்டு வழங்கப்படும் அல்லது பிரிவு 18(1)–லான அறிவிக்கை நாளுக்குப்பிறகு நிலம் கைவசப்படுத்தப்பட்ட நாள்முதல், வட்டி கணக்கிடப்பட்டு வழங்கப்படும். [பிரிவு–55-2].

வட்டி ஆண்டுக்கு 4% வீதத்தில் கணக்கிடப்படும். [1966-ம் ஆண்டு உபரி நில விதி–4]. இந்த வட்டி விகிதம் 10 வருடங்கள் வரை அமுலில் இருக்கும்.

**பிரிவு 56.**

இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித்திட்டம் அமுல்படுத்தல் குறித்து விவரிக்கிறது.

**பிரிவு 57-58:**

ரயத்துவாரி பகுதியில் நில வரித்திட்டம் அமுல்படுத்துதல் குறித்து விவரிக்கிறது.

## அத்தியாயம் – VIII

## பயிரிடும் குத்தகைதாரர்களுக்கான நில உச்சவரம்பு நடவடிக்கைகள்

**பிரிவு 60. குத்தகைதாரர்க்கான உச்சவரம்பு விவரம்:**

பயிரிடும் குத்தகைதாரரின் உச்ச வரம்பு என்பது, பகுதியாக பயிரிடும் குத்தகைதாரராக மற்றும் பகுதியாக உடமையுரிமையாளராக அல்லது முழுமையாக பயிரிடும் குத்தகைதாரராக உள்ள ஒருவர் 5 தர ஏக்கர் வரை கொண்டிருக்கலாம். அதாவது, ஒரு பயிரிடும் குத்தகைதாரர் அதிகபட்சமாக 5 தர ஏக்கர் நிலம் கொண்டிருக்கலாம்.

## பிரிவு 61. குத்தகைதாரர் அறிக்கை அனுப்புதல்:

அறிவிக்கை செய்யப்பட்ட (2.10.1970) நாளுக்குப்பிறகு ஒருவர் உச்சவரம்புக்குமேல் குத்தகை நிலம் கொண்டிருந்தால் 90 நாட்களுக்குள் RDO விற்கு அவர் கொண்டிருக்கும் நிலம் குறித்த விவர அறிக்கை அனுப்ப வேண்டும். [பிரிவு–61-1]. அவ்வாறு அவர் தரத்தவறினாலோ, தவறான தகவல் தந்தாலோ RDO விவர அறிக்கை கேட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும். [பிரிவு–61-2].

## பிரிவு 62. குத்தகைதாரரின் உச்ச வரம்புக்கு மேற்பட்ட நிலத்தை சுவாதீனம் எடுத்தல்:

நிலச்சுவான்தார் மற்றும் குத்தகைதாரருக்கு ஒரு வாய்ப்பு அளித்து, 3 மாத கால அவகாசத்திற்குப்பின் குத்தகைதாரரின் உச்சவரம்புக்கு மேற்பட்ட மற்றும் உரிமையாளரின் உரிமைக்கு உட்பட்டு கொண்டிருக்கும் நிலத்தின் சுவாதீனத்தைப் பெறலாம்.

## பிரிவு 63. அரசு குத்தகையைச் செலுத்துதல்:

நிலம் சுவாதீனம் எடுத்த நாளிலிருந்து அரசு குத்தகைதாரராகக் கருதப்படும். மேலும், நிலச் சுவான்தாரருக்கு அட்டவணை-III-படி (பத்தி 4-Part-Iன்படி) நியாய வாரத்தை அரசு செலுத்தும் [பிரிவு–63-2].

இதனில் தாவா எழும் நிலையில் நிலத்தீர்ப்பாயத்திற்கு (DRO–விற்கு) சம்பந்தப்பட்ட நபர் விண்ணப்பம் அளிக்கலாம். [பிரிவு–63-3].

## பிரிவு 64. உச்ச வரம்பில் எடுக்கப்பட்ட உபரி நிலத்தை வழங்குதல்:

உச்ச வரம்பில் எடுக்கப்பட்ட நிலத்தை பிற நிலமற்ற ஏழைகளுக்கு RDO வழங்கலாம்.

## பிரிவு 65.

எந்த நிபந்தனைக்குட்பட்டு RDO நிலத்தைப் பகிர்ந்தளித்தாரோ, அதுமீறப்படும்போது, மேற்படி சுவாதீனத்தை RDO இழக்கச் செய்யலாம்.

## பிரிவு 73. விலக்களிக்கப்பட்ட நிலங்கள்:

1. மைய, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் கொண்டிருக்கும் நிலங்கள்.

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் கொண்டுள்ள நிலங்கள்.

3. அரசினரால் வழங்கப்பட்ட நிலக்குடியிருப்பு கூட்டுறவுச் சங்கங்களின் நிலங்கள்.

4. சட்டப்பிரிவு 37-A-யின்கீழ் அரசு அனுமதி பெற்று நிலங்களைக் கொண்டிருக்கும் தொழில் அல்லது வணிக நிறுவனங்கள்.

5. பிரிவு 37–பி–யின்கீழ் அரசு அனுமதி பெற்று நிலங்களைக் கொண்டிருக்கும் பொது பொறுப்புரிமை அமைப்புகள்.

6. சட்டம் துவக்க நாளில் இருந்த எல்லா தோட்ட நிலங்கள்.

7. 1.7.1959–க்கு முன்பு பழத்தோட்டங்களாக, தோப்புகளாக, பாக்குமரத் தோட்டங்களாக மாற்றப்பட்ட நிலங்கள்.

8. சட்டம் துவக்கநாளில் எரிபொருள் மரங்கள் வளர்ப்பதற்கா மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலங்கள்.

9. கிராமதான நிலம் மற்றும் பூமிதான இயக்கத்திற்கு கொடையாக வழங்கப்பட்ட நிலம்.

10. அனுமதிக்கப்பட்ட தோட்டங்களுக்கு இடைஇடையே மற்றும் ஒட்டியமைந்த நிலங்கள்.

11. இராணுவ வீரரின் வீரச் செயல்களுக்காக விருதாக வழங்கப்பட்ட நிலங்கள். [பிரிவு–73].

**பிரிவு 74-75. நீக்கம் செய்யப்பட்டது:**

**பிரிவு 76, 76-A, 77. நிலத்தீர்ப்பாயங்கள்** (Land Tribunal):

DRO நிலை அலுவலர் ஒருவரைக் கொண்டதாக நிலத்தீர்ப்பாயம் இருக்கும். ஒவ்வொரு நிலத்தீர்ப்பாயமும் ஓர் உரிமையியல் நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கும். நிலத்தீர்ப்பாய உத்தரவின்மீது உயர்நீதிமன்றத்திற்கு சீராய்வு ஆள்வரை, வரம்பு உள்ளது.

## மேல்முறையீடும் சீராய்வும்

**பிரிவு 78. நிலத்தீர்ப்பாயத்திடம் (DRO விடம்) மேல்முறையீடு:**

பிரிவுகள், 9(2)(b), 10(3),(4), (5), 16(3)(a)(iii), 20, 22, 50(4), 51(1), (2), 52, 61(3) (b) அல்லது 102(2)(b)-ன்படியான RDO-வின்

முடிவுகள்/தீர்ப்புகளை எதிர்த்து, அரசு 90 நாட்களுக்குள்ளும், பாதிக்கப்பட்டநபர் எவரும் 30 நாட்களுக்குள்ளும் நிலத்தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

மேற்கொண்டு, 30 நாட்கள் வரை தாமதத்தைப் பொருத்தருளி, தீர்ப்பாயம் மேல்முறையீட்டை ஏற்கலாம்.

**பிரிவு 79. உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு:**

பிரிவு 11(3) அல்லது 77(2)–ன்கீழான நிலத்தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளுக்கு எதிராக அரசு 60 நாட்களுக்குள்ளும், பாதிக்கப்பட்ட நபர் எவரும் 30 நாட்களுக்குள்ளும் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

சரியான காரண காரியத்தின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டிற்கான காலதாமத காலத்தை பொருத்தருளலாம்.

**பிரிவு 83. உயர்நீதிமன்றத்தில் சீராய்வு:**

உயர்நீதிமன்றம் தானாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ, RDO, நில தீர்ப்பாயம், நில ஆணையர் ஆவணங்கள் முதலியவற்றை வரவழைத்து ஆய்வு செய்யவோ, அவற்றின் சட்டரீதியான நடைமுறையை சரிபார்க்கவோ, அவற்றில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவோ அதிகாரம் பெற்றிருக்கின்றது.

**பிரிவு 84. தடை ஆணை வழங்கும் அதிகாரம்:**

உயர்நீதிமன்றம், நிலத்தீர்ப்பாயம் அல்லது நில ஆணையர் எந்த ஆணையையும் செயல்படுத்துவதற்கு தடை ஆணை விதிக்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

RDO (Authorised Officer) ஆணையை எதிர்த்து D.R.O (Land Tribunal) மற்றும் Land Commissioner (Land Board) மற்றும் High Court-ல் மேல்முறையீடு சுருக்க விவரம்–

| பிரிவு | மேல்முறையீடு | Further Appeal / CRP |
|---|---|---|
| 9(2) (b) order | D.R.O. | High Court |
| 10 (1) | Objection before R.D.O | - do - |
| 10 (5) | D.R.O | - do - |

| | | |
|---|---|---|
| 12 | C.L.R. | - do - |
| 18 (1) | C.L.R. | - do - |
| 20 | D.R.O. | - do - |
| 22 | D.R.O. | - do - |
| 50 (4) | D.R.O. | - do - |
| 50 (5) | C.L.R. | - do - |
| To | Time Limit | |
| D.R.O. | 30 | - do - |
| C.L.R. | 60 | - do - |
| High Court | 60 | - do - |

---

## அபராதம் விதித்தல் நடைமுறை

**பிரிவு 85. விவர அறிக்கை அனுப்பாததற்கு அபராதம் விதித்தல்:**

எவர் ஒருவர் பிரிவு 9–1 அல்லது பிரிவு 61(2)–ன் கீழான விவர அறிக்கையை RDO–விற்கு அனுப்பத் தவறுகின்றனரோ, அவருக்கு ரூ.2,000/– வரை அபராதம் விதிக்கலாகும். [பிரிவு–85–1].

அதன்பிறகும் தொடர்ந்து விவர அறிக்கையை அனுப்பாமலிருந்தால், அவர் அனுப்பாமலிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.50/– வீதம் அபராதம் செலுத்த வேண்டும். [பிரிவு–85–2].

**பிரிவு 86. பிரிவு 102-ன் கீழான தகவல் தரத்தவறியதற்கு அபராதம்:**

எவர் ஒருவர் பிரிவு 102(1)–ன்கீழான தகவலை RDO–விற்குத்தரத் தவறுகிறாரோ, அவருக்கு ரூ.2000/– வரை அபராதம் விதிக்கலாகும்.

**பிரிவு 87. தவறான விவர அறிக்கை அல்லது தகவலைத் தருபவருக்கு அபராதம்:**

எவர் ஒருவர் இச்சட்டத்தின்படி தரவேண்டிய சரியான தகவலுக்குப் பதிலாக, தவறான விவர அறிக்கை அல்லது தகவலைத் தருகிறாரோ, அவருக்கு ரூ.2,000/– வரை அபராதம் விதிக்கலாம்.

**பிரிவு 88 : பிரிவு 19–ன்படியான உறுதிமொழியை தவறாக அளித்தல்:**

பிரிவு 19–1–ன்கீழ் தரவேண்டிய உறுதிமொழியை தவறாக அளித்தால் ரூ.2,000/– வரை அபராதம்.

**பிரிவு 88-A. உபரிநிலமென காட்டுவதற்கான தவறான நில பரிவர்த்தனை:**

தவறான பரிவர்த்தனை அல்லது பிரிவு 22-ன்கீழான தவறான பாகப்பிரிவினை அடிப்படையில் தனது அறிக்கையில் உபரி நிலமாக காட்டுபவருக்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.2,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

**பிரிவு 89. உச்சவரம்பிற்கு மேற்பட்டு நிலம் வாங்குதலுக்கு அபராதம் விதித்தல்:**

அறிவிக்கை நாளுக்குப்பிறகு, உச்சவரம்பிற்கு மேற்பட்டு நிலம் வாங்கினாலோ அல்லது அடமானமாக சொத்து பெற்றாலோ, ரூ.2,000/- வரை அபராதம் விதிக்கலாகும்.

**பிரிவு 90. சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கு இடையூறு செய்பவருக்கு அபராதம் விதித்தல்:**

சட்டப்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையை மீறுபவர் மற்றும் உபரி நிலத்தை உடைமையில் எடுப்பதை தடை செய்பவருக்கு அபராதம் ரூ.2,000/ - வரை விதிக்கலாகும்.

**பிரிவு 91. மரம் வெட்டுதல், தளவாடங்களை அப்புறப்படுத்தலுக்கு அபராதம் விதித்தல்:**

அரசு பொறுப்பிற்கு மிகை நிலம் வந்தபின், அனுமதியன்றி அதில் உள்ள மரங்களை வெட்டுதல், கட்டிடங்கள், இயந்திரங்கள் போன்ற தளவாடங்கள் அப்புறப்படுத்தலுக்கு 1 வருடம் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.2,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாகும்.

**பிரிவு 92. கம்பெனி குற்றம் செய்தல்:**

இச்சட்டத்தின்படியான குற்றங்களை கம்பெனி, நிறுவனம் புரிந்தால், சட்டப்படியான தண்டனை வழங்கலாகும்.

**பிரிவு 93. வழக்கினைத் தொடர்தல்:**

RDO அல்லது அவர் நியமனம் செய்த அலுவலர் எழுத்துமூலமான புகார் அளித்தாலொழிய எந்த நீதமன்றமும் வழக்கினை கோப்பில் எடுத்துக் கொள்ளவியலாது.

**பிரிவு 94. உபரியாக எடுக்கப்பட்ட நிலத்தை, அரசு முடிவு செய்தல்:**

எவர் ஒருவருக்கு நிலம் எதுவும் முற்றிலும் இல்லையோ அல்லது 3 ஏக்கர் புஞ்சை அல்லது 1½ ஏக்கர் நஞ்சை உள்ளதோ, அவர் குத்தகைக்கு உழுபவராக இருந்தாலோ, அவருக்கு முன்னுரிமை அடிப்படையில் நிலம் வழங்கலாம்.

**பிரிவு 94-A, 94-B, 94-C:**

சர்க்கரை ஆலை வைத்துள்ள உபரி நிலத்தை உடமையில் எடுக்கும்போது நடைமுறை விதிகள் இப்பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## பலவகைப்பட்டவை (Miscellaneous)

**பிரிவு 95:**

ஒருவகை நிலத்திலிருந்து மற்றொரு வகை நிலமாக மாறும்போது, நில உச்சவரம்பு கணக்கிடுகையில் மாற்றம் இருக்காது.

**பிரிவு 96:**

சட்டப்பிரிவு 12 அல்லது 14–லான இறுதி மசோதா விளம்பரப்படுத்தப்பட்ட பின்பு, உண்டாகும் குடும்ப உறுப்பினர் குறைவினால், உச்சவரம்பு பரப்பு பாதிக்கப்படாது.

**பிரிவு 99. ஒரு RDO ஆட்சி எல்லையிலிருந்து மற்றொரு RDO ஆட்சி எல்லைக்கு நடவடிக்கைகளை மாற்றுதல்:**

மாவட்டத்திற்குள் மாற்றம் செய்ய கலெக்டரும், மாவட்டம் விட்டு அடுத்த மாவட்டத்திற்கு மாற்றம் செய்ய நில சீர்திருத்த ஆணையரும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

**பிரிவு 101. நீதிமன்றத்திலிருந்து விவரம் பெற R.D.O விற்குள்ள அதிகாரம்:**

சட்டத்தின் நடைமுறைகளை கடைபிடிக்க தேவையான விவரங்களை நீதிமன்றத்திலிருந்து கேட்டுப்பெற, RDO விற்கு அதிகாரம் உண்டு.

**பிரிவு 102. தனிநபரிடமிருந்து விவரம் கேட்டுப் பெற RDO விற்கு**

**உள்ள அதிகாரம்:**

எந்த ஒரு தனிநபரிடமிருந்தும் அவரிடம் உள்ள நில விபரம், குடும்ப நபர் விபரம் முதலியவை கேட்டுப்பெற RDO விற்கு அதிகாரம் உண்டு. அந்த விவரத்தை 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர் தர வேண்டும்.

**பிரிவு 104:**

சட்டத்தின் செயல்பாடு கருதி, RDO, குடியிருப்பு வீடு தவிர, எந்த நிலத்திலும் நுழைந்து அளவைப் பணி மேற்கொள்ளலாம்.

**பிரிவு 105:**

இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ண அடிப்படையில் RDO மற்றும் உயர் அலுவலர்களால் செய்யப்படும் எந்த நடவடிக்கையையும் எதிர்த்து வழக்குகள் ஏதும் தொடர இயலாது.

**பிரிவு 108. நீதிமன்றக் கட்டணங்கள்:**

இச்சட்டப்பிரிவுகளின்கீழான மேல்முறையீடு மற்றும் விண்ணப்பங்களுக்கு ரூ.100/– நீதிமன்ற வில்லைகள் ஒட்டப்பட வேண்டும்.

-----------

## அட்டவணை – III

(பிரிவு 50–ன்படி)

### பகுதி –I, (Part - I)

1. அரசினால் உபரியாக எடுக்கப்பட்ட நிலத்திற்கு நில உடமையாளருக்கு வழங்கப்படும் தொகை:

2. முதற்கண், நிலத்தின் ஆண்டு மதிப்பு (annual value of the land) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. நிலத்தின் ஆண்டு மதிப்பு கணக்கிடும் விதம்:

(i) சம்பந்தப்பட்ட நஞ்சை, புஞ்சை அல்லது மானாவாரி நிலத்திற்குண்டான, நிலவரியின் 20 மடங்குத்தொகை

(ii) அரசு ஆதாரத்திலிருந்து பாசனநீர் பெறும் புஞ்சை அல்லது மானாவாரி நிலங்களைப் பொருத்து

(a) இரண்டு அல்லது அதிகமான பயிர்களுக்கு நேரடியாக பாசனநீர் (direct flow of water) கிடைக்கும் நிலங்களுக்குண்டான,

(A) நில வரியின் 20 மடங்குத்தொகை, மற்றும்

(B) ஒரு ஏக்கருக்கு ரூ.9/– வீதம்

(b) ஏற்றம் மூலம் ஒன்று அல்லது இரண்டுக்கு அதிகமான பயிர்களுக்கு பாசன நீர் கிடைக்கும் நிலங்கள் அல்லது ஒரு பயிருக்கு மட்டும் நேரடி பாசனம் மூலம் நீர் கிடைக்கும் நிலங்களில்

(A) 20 மடங்கு நிலவரி தொகை, மற்றும்

(B) ஒரு ஏக்கருக்கு ரூ.5/– வீதம்

(iv) தரிசு நிலங்களை (waste lands) பொருத்து, நிலத்தின், நிலவரியில் 5 மடங்கு.

**விளக்கம்:** தரிசு நிலம் என்பது, பிரிவு 18(1)–லான இறுதி அறிவிக்கைக்கு முந்தைய 5 ஆண்டுகள் சாகுபடியின்றி தரிசாக விடப்பட்ட நிலங்களாகும்.

(v) வன நிலங்க்ளைப் பொருத்து (Forest lands), அவற்றின் நிலவரியைப் போல் 5 மடங்கு

**விளக்கம்:** (i) வன நிலங்கள் என்பது அதிகமான மரங்கள் அல்லது புதர்கள் அல்லது இயற்கையாக வளர்ந்த செடி கொடிகள் அடர்ந்த பகுதி ஆகும்.

(ii) மரங்கள் அல்லது புதர் மண்டியுள்ள தரிசு நிலங்கள் இதில் அடங்காது.

மேற்கண்ட பத்திகள் (i) முதல் (v) வரை கண்டுள்ள நிலங்களின் ஒட்டுமொத்த ஆண்டு மதிப்பு ஒரு ஏக்கருக்கு ரூ.350/– வீதத்திற்குமேல் இருத்தல் கூடாது.

4. வன நிலத்தைத்தவிர இதர நிலங்களைப் பொறுத்து அரசினரால் உபரியாக எடுக்கப்படும் நிலங்களுக்கு, வழங்கப்படும் தொகையானது கீழ்க்கண்ட வீதத்தில் வழங்கப்பட வேண்டும்.

(i) ஆண்டு நில மதிப்பின் முதல் ரூ.3,000/– (for first sum of Rs.3000) வரை, அந்தத் தொகையைப் போல் 10 மடங்கு வரை

(ii) அதற்கடுத்ததான ரூ.3,000/– வரையிலான தொகைக்கு (nex sum of Rs.3,000/-), அதனைப் போல 9 மடங்கு தொகை;

(iii) அதற்கு அடுத்ததான ரூ.3,000/– வரையிலான தொகைக்கு, (for next sum up Rs.3,000/-) அதனைப்போல 8 மடங்கு தொகை

(iv) அதற்கு அடுத்த ரூ.3,000/– வரையிலான தொகைக்கு, அதனைப்போல 7 மடங்குத்தொகை.

(v) அதற்கு அடுத்ததான ரூ.3000/– வரையிலான தொகைக்கு, அம்மதிப்பைப் போல 6 மடங்குத் தொகை

(vi) எஞ்சியுள்ள தொகைக்கு, அதனைப்போல 5மடங்கு

5. வன நிலம் தவிர, இதர நிலங்களில் உள்ள மரங்களின் மதிப்பு பிரிவு 18(1) இறுதி அறிவிக்கை பிறப்பிக்கப்பட்ட நாளில்

(i) மனித முயற்சியில் வளர்க்கப்பட்ட பழம் இல்லாத (not fruit bearing trees) மரங்களுக்கு, ரூ.1,000/– ஒரு ஏக்கருக்கு

(ii) கீழ்க்கண்ட இனங்ளில்–

(a) பழத்தோட்டங்கள்

(b) தோட்டப்பயிர்கள்

(c) பழமரங்கள்

மனித முயற்சியில் வளர்க்கப்பட்டவைகளுக்கு ரூ.3,000/– ஒரு ஏக்கருக்கு

(iii) தானாக வளர்ந்த அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள மரங்களுக்கு ரூ.250/– ஒரு ஏக்கருக்கு

எவ்வாறாகிலும் மேற்கண்ட (i)-(ii) இனங்களுக்கு வழங்கப்படும் ஒட்டு மொத்த தொகை ஒரு ஏக்கருக்கு ரூ.3500/–ஐ மீறுதல் கூடாது.

6. வன நிலங்களுக்கு வழங்கப்படும் மொத்த மதிப்பு விவரம் விவரிக்கப்பட்டுள்ளது.

7. கட்டிடங்கள், இயந்திரங்கள், தொழிற்கூடம் போன்றவற்றிக்கு வழங்கப்படும் தொகை 1961–ம் வருட வருமான வரிச்சட்ட நடைமுறைப்படி நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும்.

## பகுதி –II, (Part - II)
## அட்டவணை – IV

பிரிவு 54–ன்படி குத்தகைதாரருக்கு வழங்கப்படும் தொகை, அட்டவணை– III- பகுதி–I-ல் கண்டபடி கணக்கீடு செய்யப்பட்டுவரும் தொகையில் 1/8 வீதத்தில் வழங்கப்படும்.

# நிலச் சீர்திருத்தம் (சுருக்க விவரம்)

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டம் 1961.

சட்டத்தின் நோக்கம்

குடும்ப நில உச்சவரம்பு [பிரிவு 5-i(a)]

| | | | |
|---|---|---|---|
| i. | 5 நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | - | 15 தர ஏக்கர் |
| ii. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | - | 5 தர ஏக்கர் |
| iii. | குடும்பத்திற்கான மொத்த உச்சவரம்பு | - | 30 தர ஏக்கர் |

குடும்பம் என்பது (பிரிவு 3-14)

i. கணவர்
ii. மனைவி
iii. மைனர் மகன்கள்
iv. மணமாகாத மகள்கள்
v. ஆண் வழியில் வந்த பெற்றோரை இழந்த மைனர் பேரன்கள் மற்றும் மணமாகாத பேத்திகள்.

சாதாரண ஏக்கரும் தர ஏக்கரும் [பிரிவு 3-40 (i)] Ordinary Acre and standard Acre

எடுத்துக்காட்டு:-

| நிலம் | 1 ஏக்கருக்கு நிலவரி (ருபாய்) | சாதாரண ஏக்கர் (O.A) | தர ஏக்கர் (S.A) | வீதம் |
|---|---|---|---|---|
| நஞ்சை | ரூ. 4/ வரை | 2 | 1 | ½ |
| புஞ்சை | ரூ. 1.25 / வரை | 4 | 1 | ¼ |

நிறுவனங்கள் கொண்டிருக்க உரிமையுள்ள நிலங்கள்:- பிரிவு 5(i) © (i)

| வரிசை எண் | நிறுவனம் | தர ஏக்கர் |
|---|---|---|
| i. | பல்கலைக் கழகத்தால் ஏற்கப்பட்ட (or) இணைந்த கல்லூரிகள் | 40 |
| ii | அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் | 20 |
| iii | அங்கீகரிக்கப்பட்ட துவக்கப்பள்ளி (or) உயர்துவக்கப்பள்ளி | 10 |
| iv | மாணவர் விடுதி | 25 |
| vi | பாலிடெக்னிக் | 25 |
| Vii | வேளாண் பள்ளி | 25 |
| Vii | கைவிடப்பட்டோர் காப்பகம் | 25 |

இச்சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட நிலங்கள்:-

i. மைய, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் கொண்டிருக்கும் நிலங்கள்
ii. பல்கலைக் கழகங்கள் கொண்டுள்ள நிலங்கள்
iii. அரசினரால் வழங்கப்பட்ட நிலக்குடியிருப்பு கூட்டுறவுச் சங்கங்களின் நிலங்கள்
iv. பிரிவு 37-A யின் கீழ் அரசு அனுமதிபெற்று நிலங்களைக் கொண்டிருக்கும் தொழில் (or) வணிக நிறுவனங்கள்
v. பிரிவு 37-B யின் கீழ் அரசு அனுமதி பெற்று நிலங்களைக்கொண்டிருக்கும் பொது பொறுப்புரிமை அமைப்புகள்
vi. சட்டம் துவக்க நாளில் இருந்த எல்லா தோட்ட நிலங்கள்
vii. 01.07.1959 ற்கு முன்பு பழத்தோட்டங்களாக, தோப்புகளாக, பாக்கு மரத் தோட்டங்களாக மாற்றப்பட்ட நிலங்கள்
viii. சட்டம் துவக்க நாளில் எரிபொருள் மரங்கள் வளர்ப்பதற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த மரங்கள்
ix. கிராமதான நிலம் மற்றும் பூமிதான இயக்கத்திற்கு கொடையாக வழங்கப்பட்ட நிலம்
x. அனுமதிக்கப்பட்ட தோட்டங்களுக்கு இடை இடையே மற்றும் ஒட்டியமைந்த நிலங்கள்
xi. இராணுவ வீரர்களின் வீரச்செயல்களுக்காக விருதாக வழங்கப்பட்ட நிலங்கள்.

சட்டம் துவக்க நாளில் (15.2.1970) உச்சவரம்பிற்கு மேல் நிலமுடையவர் ,30 நாட்களுக்குள் உரிய படிவத்தில் A.O. விற்கு தெரிவிக்க வேண்டும் ~~[பிரிவு~~ (x) ~~8(1)~~] ~~அடுத்து~~, உச்ச வரம்பிற்குமேல் நிலமுடையவர் குறித்த 10(i) லான விளம்புகை அறிக்கையை (Draft Statement Publication) ~~A.O. வெளியிடுவார்~~. A.O. தயார் செய்த நிலசீர்திருத்த துறைக்கு அனுப்ப மாநில அரசிதழில் பிரசுரம் செய்ய அனுப்புவைப்பார்.
இது கீழ்கண்ட படி விளம்புகை செய்யப்படும்:-

i. மாநில அரசிதழ்
ii. மாவட்ட அரசிதழ்
iii. A.O. அலுவலக தகவல் பலகை
iv. தாலுகா அலுவலகம், ஊராட்சிய ஒன்றியம், கிராமசாவடி, ஊராட்சி அலுவலக தகவல் பலகைகள்.

சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இது சார்வு செய்யப்படும். அறிவிக்கை செய்யப்பட்ட உபரி நிலங்களில் தமக்கு வசதியான நிலங்களை தக்க வைத்துக்கொள்ளவும் அரசுக்கு ஒப்படைக்க கருதும் நில விவரங்களை தெரிவிக்கவும் (Choice of either retention or surrender of surplus lands) வாய்ப்பு வழங்கப்படும். 30 நாடகளுக்குள் இதர ஆட்சேபணை இருப்பின் தெரிவிக்க வாய்ப்பளித்து பின் இறுதி ஆணையை பிரிவு 10(5)-ன் கீழ் பிறப்பிப்பார். ~~[பிரிவு 10 (5)]~~ (x) தேவையான தகவல் சேகரித்தபின், உரிய விசாரணை மற்றும் ஆவணங்களின் ஆய்வு

அடிப்படையில் A.O, உச்ச வரம்பிற்கு மேல் நில முடையவர் குறித்த ஆணையை A.O. பிறப்பிப்பார் [பிரிவு 9 (2) (b)] இவரது ஆணை நிலசீர்திருத்த ஆணையர்க்கு அனுப்பப்படும், ஒப்புதல் பெறப்படும். இது இந்த ஆணை நில உடைமையாளருக்கு சார்வு செய்யப்படும். ஆட்சேபணை ஏதும் வரப் பெறாத நிலையில்

நில உடமையாளர் மற்றும் நில உரிமை (Title) குறித்து தாவா எழும் நேர்வுகளில், அவசியமெனில், AO. இது குறித்து சார்பு நீதி மன்றத் தீர்வுக்கு அனுப்புகை செய்வார் (பிரிவு 11)

நில உடமைதாரருக்கு உள்ள நிலவிவரம், உச்சவரம்பு நிலப் பகுதிக்குள், அவர் தக்க வைத்துக்கொள்ள விரும்பும் நிலம், அது போக உச்சவரம்புக்குள் வரும் நிலம் புலஎண் வாரியாக, இறுதி அறிவிக்கை A.O.வால் வெளியிடப்படும். பிரிவு 12 லான இறுதி அறிவிக்கைக்குப் பின், உபரி நிலம் அரசு காரியத்திற்காக (Public Purpose) எடுக்கப்பட்டதாக அரசினரால் பிரிவு 18(i) ன் கீழ் ஒரு அறிவிக்கை மாநில மற்றும் மாவட்ட அரசிதழ்களில், ஆங்கில மற்றும் உள்ளூர் மொழியில் பிரசுரம் செய்யப்படும். பின் அவை கிராம சாவடி, ஊராட்சி மன்றம், தாலுகா அலுவலக தகவல் பலகைகளில் விளம்பரப்படுத்தப்படும். கிராமத்தில் தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யப்படவேண்டும்.

பிரிவு 18(i) லான அறிவிக்கைகுப்பின் உபரிநிலத்தின் மீதான நில உடமையாளரின் உரிமை இல்லா நிலையினதாகும் (Right extinguished).

தொழில் (or) வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்களை வைத்திருக்க அரசு ஆணை பெறுதல் (பிரிவு 37 A)

பொது நம்பகங்கள் கல்வி (or) மருத்துவமனை நோக்கங்களுக்காக உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்களை வைத்திருக்க அரசு அனுமதி பெறல் (பிரிவு 37-B)

கையகம் செய்யப்பட்ட உபரி நிலத்திற்கு இழப்பீடு நிர்ணயம் செய்தல் (பிரிவு 50)

பிரிவு 18 (i) லான அறிவிக்கை பிரசுரமான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், நில உரிமையாளர், இழப்பீடு கோரி A.O விடம் விண்ணப்பிக்க வேண்டும்.

பிரிவு 18 (i) ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட உபரி நிலத்திற்கான தொகை பத்திரம் இறுதி நிர்ணயப் பட்டி (Final Assessment Roll) வெளியிடப்பட்ட நாளிலிருந்து 1-வருடத்திற்குள் வழங்கப்படவேண்டும்.

சட்டப்பிரிவு 50 இணைப்பு III (Schedule –III) ன்படி கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான தொகை ஏக்கர் வீதத்தில் வழங்கப்படவேண்டும்.

## தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை முடிவு செய்தல்) விதிகள் 1965

உபரி நில அடமானம் பெற தகுதி பெற்றவர்:- (விதி 5 (i)

i. சட்ட துவக்க நாளன்று உபரி நிலத்தை சாகுபடி செய்தவர் மற்றும் அந்த நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்
ii. நிலமற்ற ஆதி திராவிடர் / மலைசாதியைச் சேர்ந்த விவசாயக் கூலிகள்.
iii. இராணுவ வீரர் மற்றும் முன்னாள் இராணுவவீரர் குடும்பத்தினர்.
iv. இலங்கை / பர்மாவிலிருந்து குடிபெயர்ந்தோர்
v. நிலமற்ற விவசாயக் கூலிகள்
vi. விவசாயக் குத்தகைதாரர்

உபரி நிலம் அடமானம் செய்யப்படும் பரப்பு (விதி 5-2)

அதிகபட்சம் நஞ்சை 1 ½ ஏக்கர்
புஞ்சை 3 ஏக்கர்

உபரி நில அடமான நிபந்தனைகள் (விதி:9)

அடமான ஆணை படிவம் F-ல் வழங்கப்படும்.

**அடமான நிபந்தனைகள்:-**

i. அடமானம் தவறாகவோ விதிமுறைக்குப் புறம்பாகவோ செய்யப்பட்டால் ரத்து செய்வதற்குள்ளாகும்.
ii. அடமானம் ரத்து செய்வதற்குள்ளாகும் நிலையில், நிலத்தை சீர் செய்ததற்கான தொகையை உபரி நில அடமானதாரர் பெறுவதற்கு தகுதியற்றவர்.
iii. நிலக் கிரயம் முழுவதும் செலுத்தப்பட்ட பின்பும் மற்றும் அடமானம் ஆன தேதயிலிருந்து 20 வருடங்களுக்குப் பின்பும் அடமானதாருக்கு நிலம் முழு உரிமையானதாக அமையும்
iv. அடமானதாரர் நேரடி விவசாயத்தில் ஈடுபடவெண்டும்.
v. ஒப்படை செய்யப்பட்ட நிலம் 20 ஆண்டு முடியும்முன் விற்பனை செய்யப்படக் கூடாது. மேலும், ஆதி திராவிடர்க்கு ஒப்படை செய்யப்பட்ட நிலம் 20 ஆண்டு கடந்த பின்னரும் ஆதி திராவிடர் குடும்பத்திற்குத்தான் விற்பனை செய்யப்படவேண்டும்.

<u>பதிவேடுகள் பராமரிப்பு</u>

1. M.R I (உபரி நிலங்கள் பதிவேடு)
2. M.R. II ஒப்படைதாரர்கள் பதிவேடு
3. M.R. III – உபரிநிலங்களுக்கான இழப்பீடுதொகை பதிவேடு
4. M.R IV – உபரி நிலங்கள் விபரம் பதிவேடு
5. 37A, – பதிவேடு
6. 37B – பதிவேடு
7. P.O.B – இடை ஆணைப் பதிவேடு.

# IV. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955

# The Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955

### 1. குத்தகைதாரர் – விளக்கம்

பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகையை உறுதி செய்து, நில உரிமையாளர்களால், முறையின்றி வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்து அவர்களின் நலனைப் பாதுகாத்தல், இச்சட்டத்தின் நோக்கமாகும் (பிரிவு 3–1). ஒரு குத்தகைக்கான உட்கிடையான அல்லது வெளிப்படையான ஒப்பந்தம் நிலச்சுவான்தார் மற்றும் நிலத்தில் சொந்தமாகப் பயிரிடுபவரிடையே இருத்தல் வேண்டும். கூட்டுக்குடும்பத்தில் யாராவது ஒரு உறுப்பினர் தன் உடல் உழைப்பை அளித்தால் போதுமானது, கூட்டுக்குடும்பம் இச்சட்டத்தின்கீழ் பாதுகாப்பு பெற உரிமையுண்டு. (AIR 1966 SC 469)

பயிரிடும் குத்தகைதாரராக உரிமை கோர வேண்டுமெனில்? அவர் சொத்தினை தனக்கு குத்தகைக்கு விடப்பட்டதை மெய்ப்பிக்க வேண்டும். (பிரிவு - 2(a)(a)) குத்தகைதாரர் இறந்துவிடில், அவரது சட்டப்பிரதிநிதிகளில் யாராவது ஒருவர் பயிரிடுவதில் தனது சொந்த உடலுழைப்பைத் தந்தால் அவர்களுக்கும் இச்சட்டப்படி பாதுகாப்பு உண்டு (AIR 1975 Mad 386).

### 2. குத்தகைதாரரை நிலத்திலிருந்து வெளியேற்றுதல்:

கீழ்க்கண்ட காரணங்களுக்காக நிலச்சுவான்தாரர் குத்தகைதாரரை வெளியேற்றலாம்:

1. குறிப்பிட்ட காலத்திற்குள் (ஒரு மாதத்திற்குள்) குத்தகையைச் செலுத்தாமல் இருத்தல்.

2. நிலத்திற்கு இழப்பு, பயிருக்கு சேதம் அல்லது ஊறுவிளைத்தல்; பயிரிடப்பட வேண்டிய நிலத்தில் பயிரிடத் தவறினால் சட்டப்பாதுகாப்பு கிடையாது. உதாரணமாக இருபோக நிலத்தில் ஒரு போகம் மட்டும் சாகுபடி செய்தால் நிலத்தின் மதிப்பை பாதிக்கும். (AIR 1981 Mad 170).

3. விவசாயம் மற்றும் தோட்டப்பயிர் சாகுபடி தவிர இதர காரியங்களுக்குப் பயன்படுத்துதல் (உதாரணமாக – தொழில் காரியங்கள்)

4. நிலச் சொந்தக்காரரின் நில உரிமைமூலத்தை (Title) வேண்டுமென்றே மறுத்தல் [பிரிவு– 3-2(a)(b)(c)(d)].

மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் குத்தகைதாரரை வெளியேற்ற நில உரிமையாளர் வருவாய் நீதிமன்றத்தை அணுகலாம் (பிரிவு 3(4a)).

குத்தகை பாக்கியை செலுத்தத் தவறியவர், வருவாய் நீதிமன்ற விசாரணைக்குப்பின், நிர்ணயிக்கப்படும் கால அளவிற்குள் பாக்கியை செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றம் உத்தரவிடலாம். [பிரிவு–3-4(b)] பயிர் பொய்த்துவிட்ட காரணத்தால் குத்தகைதாரர் செலுத்தவேண்டிய குத்தகையை குறைக்க அதிகாரம் இல்லை. **(1959-1 MLJ 122)** மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட (காலம் கடந்த) குத்தகைப்பாக்கியை குத்தகைதாரர் செலுத்த வருவாய் நீதிமன்றம் உத்தரவிட முடியாது **(AIR 1994 Mad 210).**

### 3. இராணுவ வீரருக்கு சிறப்பு சலுகைகள்

1. குத்தகைதாரர் இராணுவத்தில் சேர்ந்தபின் தான் கொண்டிருந்த நிலத்தை கீழ்குத்தகைக்கு (Sublet) விடலாம்.

2. குத்தகைதாரர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டபிறகு, கீழ்க்குத்தகைக்கு விட்ட நிலத்தின் சுவாதீனத்தை திரும்பப் பெறலாம்.

3. இராணுவத்தில் சேர்ந்த நில உரிமையாளர், பணியிலிருந்து விடுவிக்கப்பட்டபின், சொந்தமாகப் பயிரிடுவதற்கு, பயிரிடும் குத்தகைதாரரிடமிருந்து சுவாதீனத்தை திரும்பப் பெறலாம். (பிரிவு4AA)

மேற்படி நிலச் சுவாதீனம் திரும்பப் பெற வருவாய் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பத்தை – இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதிலிருந்து 6 மாதங்களுக்குள் அளிக்க வேண்டும். (1955–ம் வருட குத்தகைதாரர் பாதுகாப்பு விதிகள் – விதி 6-BB).

**4. குத்தகை ஒப்பந்தம் (Execution of Lease):**

குத்தகைதாரரும் நில உரிமையாளரும் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை ஒப்பந்தமானது, குறிப்பிட்ட படிவத்தில், மூன்று நகல்கள் கொண்டதாக இருக்க வேண்டும். அதில் குத்தகைதாரர் பெயர், குத்தகை நிலத்தின் புல எண் மற்றும் இதர விவரங்கள், குத்தகைத் தொகை விவரம் முதலியவை அடங்கியிருக்கும். இரு தரப்பினரும் இதில் கையெழுத்திட வேண்டும். மூன்று நகல்களில் ஒன்று நில உரிமையாளருக்கும் இன்னொன்று குத்தகைதாரருக்கும் உரியது. மூன்றாவது நகல் நில உரிமையாளரால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும். தரப்பினருள் யாராவது ஒருவர் காரணமின்றி கையெழுத்திட மறுத்தாலோ அல்லது காலதாமதம் செய்தாலோ, மற்ற தரப்பினர் தாலுகா அலுவலகத்தில் குத்தகை ஒப்பந்தத்தை சேர்ப்பிக்கலாம். (பிரிவு 4-B(1) குத்தகை ஒப்பந்தத்தில் நீதிமன்ற முத்திரைவில்லை (Courtfee Stamp) ஒட்டத்தேவையில்லை (பிரிவு–4-B(2)) குத்தகை ஒப்பந்தத்தில் சரியான காரணமின்றி கையெழுத்திட மறுத்தவர் அல்லது தாமதிப்பவர்மீது வருவாய் நீதிமன்றம் ரூ.50/– வரை அபராதம் விதிக்கலாம் (பிரிவு–4-B(3)). குத்தகை ஒப்பந்தம் (Lease Deed) பின்வரும் படிவம் VII-ல் கண்டபடி இருத்தல் வேண்டும்: (விதி 6-D) வட்டாட்சியர் அலுவலகத்தில் கீழ்க்கண்ட படிவத்தில் குத்தகைப்பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

---

## குடிவாரப்பதிவேடு (Lease Deed Register)

[விதி 6-D(ii)-படி]

1. வரிசை எண் :
2. கிராமத்தின் பெயர் :
3. நில உரிமையாளர் பெயர் மற்றும் விலாசம் :
4. குடிவாரதாரர் பெயர் :
5. புல எண் மற்றும் நில விபரம் :
6. குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்த நாள் :
7. குத்தகை ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட நபர்களில் ஒருவர் கையொப்பமிடாத நிலையில் குத்தகை நடைமுறைக்கு வரும் நாள் :
8. குத்தகை ஒப்பந்தப்பத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள் :
9. குத்தகை ஒப்பந்தம் அலுவலகத்தில் வரப்பெற்றதற்கு ஒப்புதல் அளித்த நாள் :
10. குறிப்பு (ஒப்புதல் அளித்த அலுவலரின் சுருக்கொப்பம் மற்றும் நாள்)

**5. உரிமையியல் நீதிமன்ற அதிகாரவரம்பு :**

குடிவாரச் சட்டங்களைப் பொருத்து வருவாய் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக சிவில் நீதிமன்றங்களுக்கு ஆள்வரை கிடையாது. (Bar of Jurisdiction of Civil Courts) (பிரிவு–6). ஆனால் உயர்நீதிமன்றத்திற்கு சீராய்வு அதிகாரம் (Revision) உண்டு (பிரிவு–6-B).

**6. முக்கிய உயர்நீதிமன்றத் தீர்ப்புகள்:**

(i) It is not sufficient if he simply says that he is in possession. No where has he stated that he is contributing his

# (5) VI. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாயக்குத்தகை செலுத்துச்) சட்டம், 1956

# (The Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956)

**1. சட்டத்தின் நோக்கம்:**

பயிரிடும் குத்தகைதாரர் நில உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய குத்தகையை ஒழுங்குபடுத்தவும் நில உரிமையாளரின் தன்னிச்சை நடவடிக்கையான குத்தகையை உயர்த்துதல் போன்றவற்றை தடுக்கவும், குத்தகைதாரருக்கு போதுமான பாதுகாப்பினை அளிக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் குத்தகைதாரர் செலுத்த வேண்டிய நியாயக் குத்தகையை நிர்ணயிக்கிறது,

**2. நிலச்சுவான்தார் மற்றும் குடியானவர் – உரிமைகள் மற்றும் கடப்பாடுகள்:**

1. தன்னுடைய கவனமின்மையாலோ அல்லது பொறுப்பற்ற தன்மையினாலோ சாகுபடி நிலத்தில், பயிரிடத் தவறினாலும் நிர்ணயிக்கப்பட்ட நியாய வாரத்தை வசூலிக்க நிலச்சுவான்தாரருக்கு உரிமையுண்டு.

2. விதை, உரமிடல், உழுதல், அறுவடை, கதிரடித்தல் போன்ற விவசாயச் செலவுகளை குத்தகைதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. நிலத்திற்கான நிலவரி போன்றவற்றை நிலச்சுவான்தார் செலுத்த வேண்டும்.

4. நிலம், கிணறு போன்றவற்றின் பராமரிப்புச் செலவை (Capital Expenditure) நிலச்சுவான்தார் ஏற்க வேண்டும். (பிரிவு–3-(2)).

**3. நியாயக்குத்தகை:**

நியாயக்குத்தகை என்பது, சாதாரண மொத்த விளைச்சலில் அல்லது பண மதிப்பீட்டில் 25 சதவீதமாகும் (பிரிவு 4–(1)).

ரொக்கமாகவோ அல்லது இனமாகவோ குத்தகையை செலுத்தலாம். மொத்த விளைச்சலில் 25% ற்கு மேல் பாதிப்பு ஏற்படும் விதமாக மோசமான பருவநிலை இருப்பின் அந்தக்காலக்கட்டத்தில் விகிதாச்சாரப்படி குத்தகையைக் குறைத்திடல் வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் குத்தகை நீதிமன்றம் செலுத்தவேண்டிய பாக்கியில் ஒப்புக் கொள்ளப்பட்ட குத்தகையை, குத்தகைதாரர் டிபாசிட் செய்ய நிபந்தனை விதிக்கலாம். (பிரிவு 5–2) ஒரு முறை நிர்ணயம் செய்யப்பட்ட நியாயக் குத்தகை தொடர்ந்து 5 வருடங்களுக்கு அமுலில் இருக்கும். புயல், வெள்ள மற்றும் வறட்சி காலங்களில், குத்தகைதாரர்

விண்ணப்பத்தின்பேரில் வருவாய் நீதிமன்றம் நியாயக் குத்தகையைக் குறைக்கலாம். அதேபோன்று, நிலத்தை சீர் செய்ததன் அடிப்படையில், நிலச்சுவான்தார் கோரிக்கையின்பேரில் வருவாய் நீதிமன்றம் நியாயக்குத்தகையை உயர்த்தித் தரலாம் (பிரிவு–6)

### 4. நியாயக்குத்தகைப்பணம் – நிர்ணயம் (மாவட்ட ஆட்சியரின் அறிவிக்கை):

ஒவ்வொரு வருடமும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் தாலுக்காவாரியான விவசாயப் பொருட்களின் சராசரி சந்தை விலையை (average market price) மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சியர் வெளியிடுவார். சராசரி சந்தை விலையை நிர்ணயம் செய்தல் தொடர்பாக சீசன் ரிப்போர்ட், சந்தை விலைகள் மற்றும் புள்ளியியல் துறையிலிருந்து விவரங்கள் சேகரித்து, அவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை வெளியிடுவார். (1956–ம் வருட நியாயவாரச் சட்ட விதிகள் 15(i) (ii)) இந்த அறிவிக்கை நகல்கள் வருவாய் நீதிமன்றத்தில் நியாயக்குத்தகை நிர்ணயம் செய்ய பராமரிக்கப்படுகின்றன.

### 5. உச்ச அளவுக்கு மேற்பட்ட நிலம்:

ஒரு வேலி (6 2/3 ஏக்கர்)க்கு அதிகமாக நன்செய் நிலங்களை சொந்தமாகவும், குத்தகையாகவும் கொண்டுள்ள குத்தகைதாரருக்கு இச்சட்ட ஷரத்துகள் பொருந்தாது. 1 ஏக்கர் நஞ்சை என்பது 3 ஏக்கர் புஞ்சை அல்லது 1½ தோட்ட நிலத்திற்கு சமமானது (பிரிவு 14-1).

### 6. மேல்முறையீடு:

வருவாய் நீதிமன்ற ஆணையை எதிர்த்து முறையீடு 30 நாட்களுக்குள் ரென்ட் ட்ரிபியூனலுக்கு (Rent tribunal) செய்து கொள்ளலாம் (பிரிவு–14)

(1956–ம் வருட நியாய வாரச்சட்ட விதிகள் 14)

நிலச்சுவான்தார் மற்றும் குடியானவரிடையே மரத்திலுள்ள மேம்பலனை மட்டும் எடுத்துக் கொள்ள செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் குடிவார ஒப்பந்தமாகாது (Tenancy agreement) சம்பந்தப்பட்ட நிலத்தை உழுதல், விதை விதைத்தல், நடவு, அறுவடை போன்ற மனித சக்தி உள்ளடங்கிய விவசாய சாகுபடி செய்தல் குடிவார ஒப்பந்தத்தில் உள்ளடங்கி இருத்தல் வேண்டும்.

தீர்ப்புரை : மதுரை உயர்நீதிமன்ற W.P. (M.D) No. 5534/2007 நாள்: 29.11.2013 மேற்கோள் : (2013. 2. LW 490)

------------

6 தமிழ்நாடு பொது அறக் கட்டளைகள் (Public Trust) வேளாண்மை நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்கு படுத்துதல்) சட்டம், 1961 81

அறக்கட்டளைகள் (Trust) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் உள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டதின் கீழ் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகை தாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன் முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதி மன்றங்கள் மூலம் தீர்வு செய்யவும் இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

அத்தியாயம் - I

| சட்டப்பிரிவு | விளக்கங்கள் |
|---|---|
| 2(3) | கூட்டுறவு விவசாய சங்கம்<br>பொது அறக்கட்டளைகளின் நிலங்களை உழும், கூட்டுறவு சங்கங்களின் சட்டப்படி பதிவு செய்யப்பெற்ற விவசாயிகள். |
| 2(2) | அனுமதி பெற்ற அதிகாரி (Authorised Officer) (A.O)<br>தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதி மன்றம்) |
| 2(5) | சாகுபடி குத்தகைதாரர்<br>குத்தகை ஒப்பந்த அடிப்படையில் நிலத்தை சொந்த உழைப்பைக் கொண்டு உழும் நபர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர். இடைத்தரகர் இதில் அடங்கமாட்டார். |
| 2(6) | சாகுபடி குத்தகைதாரர் வைத்துக் கொள்ளக்கூடிய நிலப்பரப்பு<br>5 தர ஏக்கர் |
| 2(24) | அடமானம் பெற்ற உரிமையாளர் (Possessory Mortgagee)<br>அடமானம் பெற்ற நிலத்தை வைத்துக்கொள்ளவும் நிலத்திலிருந்து வரும் வாடகை மற்றும் லாபங்களை பெற்றுக்கொள்ளவும் உரிமை பெற்றவர். |
| 2(25) | பொது அறக்கட்டளை என்பது<br>பொது அறக்கட்டளை என்பது கோவில், மசூதி, சர்ச் போன்ற பொது வழிபாடு ஸ்தலங்கள், அறப்பண்பு கொண்ட நிலையங்கள், கல்வி நிலையங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டுக்கு பயன்படும் நிறுவனங்கள். |
| 2(28) | தர ஏக்கர் என்பது<br>நஞ்சை நிலம் நிலவரி<br>ஏக்கர்<br>0.8 - ரூ. 15/- w;F Nky;<br>1 - ரூ.10 முதல் ரூ. 15/- வரை<br>1.2 - ரூ. 8 முதல் ரூ. 10/- வரை<br>போன்று 4 ஏக்கர் - வரை |

அத்தியாயம் - II

பொது அறக்கட்டளைகள் கையுடமை கொண்டிருக்கும் நிலங்களை ஒழுங்கு படுத்துதல்:-

| | |
|---|---|
| 5 | பொது அறக்கட்டளைகள் சொந்த சாகுபடியில் கையுடைமையில் வைத்துக்கொள்ளக்கூடிய நிலத்தின் பரப்பு 20 தர ஏக்கருக்குள் |
| 6 | 20 தர ஏக்கருக்கு மேல் மிகையாக உள்ள நிலத்தை பொது அறக்கட்டளை சொந்த சாகுபடி செய்யக் கூடாது. ஆனால் ஒரு கூட்டுறவு விவசாய சங்கத்திற்கோ, அல்லது ஒரு சாகுபடி குத்தகை தாரருக்கோ, கூடுதல் நிலத்தை குத்தகைக்கு விடலாம். அவ்வாறு ஒரு சாகுபடி குத்தகை தாரருக்கு குத்தகைக்கு விடப்படும் நிலம், ஏற்கனவே அவருக்கு உள்ள நிலமும் சேர்த்து, 5 தர ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது. |

| | |
|---|---|
| 14 | பொதுக்கட்டளை சாகுபடி நிலத்தை சரியாக நிர்வகிக்கா விடில் A.O. தலையிட்டு, சாகுபடி செய்ய முன்வரும் நபர்களை நியமனம் செய்து, அவர்களுக்கு குத்தகைக்குவிட ஆணை பிறப்பிக்கலாம். குத்தகை ஒப்பந்த அடிப்படையில் சாகுபடிக்கு பெற்ற நபர் ஒப்பந்த நிபந்தனைகளின்படி சரியாக சாகுபடி செய்யவில்லை என்றால், A.O தலையிட்டு. சாகுபடி செய்ய விருப்பமுள்ள வேறு நபர்களை நியமனம் செய்யலாம். |
| 14- A | **A.O.விற்குறிய சிறப்பு அதிகாரங்கள்:-** பொது அறிக்கட்டளை சட்டப்பிரிவு 6-ன்படி குத்தகைக்கு விடா விட்டாலோ, விடப்பட்ட குத்தகை நல்லெண்ண அடிப்படையில் இல்லாமல் இருந்தாலோ சாகுபடி குத்தகைதாரராக இல்லாத ஒருவரை பொது அறக் கட்டளை முறைப்படி வெளியேற்றாமல் இருந்தாலோ, A.O. பொதுக்கட்டளைக்கு ஒரு நோட்டீசு அனுப்பி, ஏற்கனவே அவர் பட்டியலில் உள்ள சாகுபடிதாரருக்கு குத்தகைக்கு விட அறிவுறுத்தி ஆணை பிறப்பிக்கலாம். |
| 17 | மேல் **முறையீடு** :- 60 நாட்களுக்குள் D.R.O. அவர்களிடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம் (விதி-1) |

## அத்தியாயம் III
## குடிவாரம் குறித்த நடைமுறை விதிகள்

| | |
|---|---|
| 18 | பொது அறக்கட்டளைக்கு சொந்தமான நிலங்களை, சாகுபடி செய்யும் குத்தகை தாரரை, பொது அறக்கட்டளை தானாக வெளியேற்ற இயலாது. |
| 19 | கீழ்கண்ட சில நேர்வுகளில் பொது அறக்கட்டளை, சாகுபடி குத்தகை தாரரை வெளியேற்றலாம். பொது அறக்கட்டளைக்கு செலுத்தவேண்டிய வாரத்தை வழங்காமல் இருத்தல் ; நிலத்திற்கு சேதம் விளைவித்தல்: நிலத்தை சாகுபடி செய்யாமலே, இருப்பது, பொது அறக்கட்டளையின் உரிமையை மறுப்பது, - போன்ற காரணங்கள்<br>சாகுபடி செய்யும் குத்தகைதாரர் நேரடியாக A.O. விடம் வாரத்தை பணமாகவோ தானியமாகவோ பொது அறக்கட்டளை கணக்கில் வரவு வைக்க செலுத்தலாம். நிலுவைத் தொகைகளை ஒரு மாதத்திற்குள் செலுத்தலாம் |
| 20- A | **இராணுவ வீரர்க்கு சிறப்பு உரிமைகள்** இராணுவ வீரர் பணியிலிருந்து திரும்பி வந்ததும், ஏற்கனவே குத்தகைக்கு பெற்றிருந்த நிலத்தை மீண்டும் கையகப்படுத்திக்கொள்ள உரிமை உண்டு |
| 21 | **குத்தகை ஒப்பந்த முறி நிறைவேற்றல்**<br>சாகுபடி குத்தகைதாருக்கும் பொது அறக்கட்டளைக்கும் இடையே குத்தகை ஒப்பந்தம் ஆன உடனே, ஒரு குத்தகை ஒப்பந்த முறி (Lease Deed) 3 பிரதிகளில் எழுதப்பட்டு, இருவரின் கையொப்பம் அதில் இடப்படவேண்டும். ஒரு பிரதி பொது அறக்கட்டளையும், மற்றொரு பிரதியை சாகுபடி குத்தகை தாரரும், மூன்றாவது பிரதியை தாலுகா அலுவலகத்திலும் வைத்துக்கொள்ளப்படவேண்டும். |

## அத்தியாயம் IV

**நியாய வாரம் (Fair Rent)**

**23. சாகுபடி குத்தகைதாருக்கும் பொது அறக்கட்டளைக்கும் உள்ள உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பொது அறக்கட்டளைக்கு நியாய வாரத்தை சாகுபடி குத்தகை தாரரிடமிருந்து பெற உரிமை உண்டு; அதே போன்று சாகுபடி குத்தகைதாரர் பொது அறக்கட்டளைக்கு அதனை செலுத்த வேண்டிய கட்டுப்பாடு உண்டு.

உழுதல், விதைத்தல், அறுவடை போன்ற செலவுகளை குத்தகைதாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதே போன்று அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி போன்ற வற்றை செலுத்த வேண்டிய பொறுப்பு அறக்கட்டளையைச் சார்ந்தது. நிலத்தை பராமரித்தல், கிணறை ரிப்பேர் செய்தல் பொது அறக்கட்டளையின் கடமை.

24 நியாய வாரம்:-

சாதாரண மொத்த உற்பத்தியில் (or) பணமதிப்பில் 25% அதீத பருவநிலைகளில் உற்பத்தி 25% ற்கு மேல்குறைந்தால், அதற்குத் தக்கதான விகிதாச்சார நியாய வாரத்தை, பொது அறக்கட்டளை குறைக்க வேண்டும்.

26 நியாயவாரத்தில் மாற்றம்

5 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றத்திற்குட்படும்.

27. அறுவடைப் பொருளை பங்கிடல்

தானியத்தை அறுவடை செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக பொது அறக்கட்டளைக்கு தெரிவித்தல் வேண்டும். களத்திலேயே அறுவடைப் பொருள் பங்கிடப்படவேண்டும். அறிவிப்பு நோட்டீசில் குறிப்பிட்ட நாளில் பொது அறக்கட்டளை களத்திற்கு வராத நிலையில், குத்தகைதாரர் தானியத்தை அறுவடை செய்துவிடலாம். இவ்வித சூழ்நிலையில் குடிவாரதாரரோ, அறக்கட்டளையோ தானியத்தை பிரித்து எடுத்தல் குறித்து A.O விற்கு விண்ணப்பம் அளிக்கலாம். அதன் பேரில் A.O. அறிவுரையின் பேரில் தானியம் பங்கிடல் குறித்து, தனி அலுவலர் அனுப்பப்படலாம்.

28. வார நிர்ணய நீதி மன்றம், வார தீர்ப்பாயம் அமைத்தல்

வார நிர்ணய நீதி மன்றம்: தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்)

29. வார நிர்ணய நீதி மன்றத்தில் விண்ணப்பம் மற்றும் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு:-

சுமுகமான வார நிர்ணயம் குறித்து குடிவாரதாரரோ அல்லது அறக்கட்டளையோ வார நிர்ணய நீதி மன்றத்தில் விண்ணப்பிக்கலாம்; வார தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்யலாம்.

32. மாவட்ட நீதிமன்றத்தில் சீராய்வு

வார நீர்ப்பாயத்தின் முடிவினை எதிர்த்து, சிவில் நீதி மன்றத்தில் சீராய்வு மனு மேற்கொள்ளலாம்.

## அத்தியாயம் V

### சாகுபடி குத்தகைதாரர் விவசாய சங்கங்கள், **(Tenant Farming Societies)**

33. 10 அல்லது அதற்குமேற்பட்ட சாகுபடி குத்தகைதாரர் கூட்டுறவு விவசாய சங்கங்களை அமைத்துக்கொள்ளலாம்; அவற்றைப் பதிவு செய்து கொள்ளலாம்.

35. சாகுபடி குத்தகைதாரர் சங்கங்களை பதிவு செய்தல்

முறையான விசாரணைக்குப் பின்பு பதிவாளர் சாகுபடி குத்தகைதாரர் சங்கங்களை பதிவு செய்யலாம்.

36. சாகுபடி குத்தகைதாரர் சங்கத்திற்கு நில உடைமை மாறுதல் செய்தல்:-

சங்கம் பதிவானதிலிருந்து, உறுப்பினர் ஒவ்வவொருவரின் உடமையிலுள்ள நிலம் அனைத்தும் குத்தகைதாரர் சங்கத்திற்கு மாற்றம் செய்யப்படும். சங்க ஒப்பந்தப்படி உறுப்பினர் எவரும், சங்கத்திலிருந்து விலக முடியாது; ஆனால் புதிய உறுப்பினர்கள் சங்கத்தில் சேர பதிவு செய்து கொள்ளலாம்.

39. அறக்கட்டளை பெயரிலுள்ள நிலம் தொடர்ந்து அதன் உடமை மற்றும் உரிமையியல் இருக்கும்

## அத்தியாயம் VII,

### விதிவிலக்கினங்கள் (Exemptions)

51. கீழ்கண்ட நிலங்கள் இச்சட்டத்தின் செயல்பாடுகளிலிருந்து விலக்கு பெறுகின்றன.

i) தோட்ட நிலங்கள்

ii) தோட்ட நிலங்களுக்கு இடை இடையே உள்ள நிலங்கள்

iii) பழத்தோட்டங்கள், தோப்புகள், பாக்குமரத் தோட்டங்கள் முதலியவை

v) எரிபொருளுக்கு உதவும் மரங்கள்

vi) பால் பண்ணை, கோழிப்பண்ணை அல்லது கால் நடை, வளர்ப்புக்குப் பயன்படும் நிலங்கள்

vii) மேய்ச்சலுக்குப் பயன்படும் நிலங்கள் மற்றும் நிலவரி ஒரு ஏக்கர் ரூ. 1.25/- க்குப்பட்ட நிலங்கள்.

(7)

# V. 1969-ம் ஆண்டின் வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுறுச் சட்டம்

## (Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969)

குத்தகைதாரர்களாக பயிரிடும் நபர்கள் தங்களுக்கு அந்த நிலத்தின்மீது உள்ள குத்தகை உரிமையை பாதுகாத்துக்கொள்ளவும், குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்ளவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் குத்தகை உரிமைப் பதிவுறுவை தயாரிக்கப் பிரிவு (பிரிவு : 3(1)ன்படி) அரசு உத்தரவிடலாம். அதன்படி நில உரிமையாளர் மற்றும் குடியானவர் விவரம் சம்பந்தப்பட்ட நிலம் மற்றும் இதர விவரங்கள் தயாரிக்கப்பட்டு, பதிவு அலுவலரால் (Record Officer) கிராமத்தில் ஒரு அறிவிக்கை (பிரிவு 3(4)—ன்படி) வெளியிடப்படும். அதன்பிறகு தரப்பினருக்கு தக்க வாய்ப்பு (Reasonable Opportunity) அளித்து, பின் கிராமத்திற்கான குத்தகை உரிமைகள் பற்றிய வரைவுப்பதிவேடு தயார் செய்யப்பட்டு மாநில மற்றும் மாவட்ட அரசிதழில் (பிரிவு—3(10)—ன்படி) வெளியிடப்படும்.

அதன்பின் குத்தகைக்கு நிலம் விடப்பட்டிருந்தால் நில உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் (பிரிவு 4(1) (a)—ன்படி) குத்தகையை பதிவு செய்யக்கோரி பதிவுறு அலுவலருக்கு விண்ணப்பம் அளிக்கலாம். குத்தகையை பதிவு செய்யக் கோரும் விண்ணபம் 1969-ம் வருட குத்தகை உரிமைகள் பதிவுறுச் சட்ட விதியில் கண்ட படிவம் Vல் இருத்தல் வேண்டும். விண்ணப்ப படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், பூர்வாங்க விசாரணைக்குப் பின் வட்டாட்சியர் (பிரிவு—4(3) (a)- ன்படி சம்பந்தப்பட்ட நிலத்தின் குத்தகைதாரராக பதிவு செய்யலாம் அல்லது (பிரிவு 4(3)(b))ன்படி குத்தகைதாரராக பதிவு செய்ய மறுக்கலாம். வட்டாட்சியரின் ஆணையினால் பாதிக்கப்பட்டவர் சட்டவிதி 12(1)ன்படி 60 நாட்களுக்குள் வருவாய் நீதிமன்றத்திற்கு (Revenue Court) மேல்முறையீடு செய்து கொள்ளலாம். வருவாய் நீதிமன்ற ஆணையினால் இடருற்றவர், சட்ட விதி 13(1)ன்படி 90 நாட்களுக்குள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் ஒரு சீராய்வு மனு செய்து கொள்ளலாம்.

(Rights and liabilities of tenant)

இங்கே குறிப்பிடுக :

**அட்டவணை**

(Schedule)

**நில விபரம்**

| மாவட்டம் | வட்டம் | கிராமம் | புல எண் | நில வகைபாடு | பரப்பு ஏக்கரில்/ ஹெக்டேரில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | |

நில உரிமையாளர் பயிரிடும் குத்தகைதாரர்

கையொப்பம் கையொப்பம்

கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் நில உரிமையாளர் / பயிரிடும் குத்தகைதாரர் கையொப்பமிட்டுள்ளனர்:

மேற்கண்டவர்கள் நம்முன்னிலையில் கையொப்பமிட்டனர்.

சாட்சி – (1)

பெயர் மற்றும் விலாசம்

கையொப்பம்

சாட்சி – (2)

பெயர் மற்றும் விலாசம்

கையொப்பம்

---

(8) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1971.

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் (Licence) பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து 1.4.90 தேதியில் அனுபவித்து வரும் விவசாயி (or) விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

<u>சட்டப்பிரிவு மற்றும் விளக்கங்கள்</u>

2 (1) விவசாயத் தொழிலாளர்:-

விவசாய நிலத்தில் தனது உடல் உழைப்பின் மூலம் கூலி பெற்று வாழ்பவர்

2 (2) விவசாய நிலம் என்பது கீழ்கண்டகாரியத்திற்காக பயன்படுவது

(a) தோட்டப்பயிர் (b) பயிர், புல் அல்லது தோட்ட உற்பத்தி

c) மேயச்சல்நிலம் d) உரப்பயிர் e) பால் பண்ணை

f) கோழிப்பண்ணை g) கால்நடைவளர்ப்பு

h) மரம் வளர்ப்பு

2(4) அனுமதி பெற்ற அலுவலர் (**Authorised Officer**)

தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்)

2 (8) குடியிருப்பு என்பது விவசாயி (or) விவசாயக் கூலி குத்தகைதாரராகவோ லைசன்ஸ் பெற்றவராகவோ 01-04-1990 ற்கு முன்பு வசித்து வரும் வீடு (or) குடிசை

2 (9 A) தோட்ட நிலம்:

காபி, ரப்பர், டீ, ஏலக்காய், கொய்னா மருந்து தயாரிக்க உதவும் பட்டையைத்தரும் மரம். (சின்கோனா)

2 (ii) குத்தகைதாரர்:-

குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாரம் (rent) கொடுத்து நிலத்தை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டவர்

3. குடியிருப்புதாரர் உரிமையாளராதல்:-

01-04-1990 ல் குத்தகைப்படியோ, லைசன்ஸ் படியோ குடியிருப்பில் வசிக்கும் (உடமையில் உள்ள) விவசாயி (or) விவசாயக் கூலி, எவ்வித வில்லங்கமும் இன்றி குடியிருப்பு உரிமையாளர் ஆகிறார். குடியிருப்பில் உள்ள மேன் கோப்பும் (Super structure) அவரது உரிமையில் எவ்வித வில்லங்கமும் இன்றி அடங்கும். குடியிருப்பிலிருந்து 1 கி.மீ எல்கையில் இவருக்கு ஏற்கனவே வீடோ மனையிடமோ 3 செண்ட் பரப்பிற்குமேல் இருந்தால் குடியிருப்பு உரிமை கிட்டாது. அவருக்கு Authorised Officer ஆல் வழங்கப்படும் பட்டா, ஒரு உரிமைச் சாசனம் ஆகும்.

பிரிவு **3-A** சில இனங்களில் மாற்று இடம் வழங்கல்:-

வழங்கப்படும் இடம், நில உரிமையாளரின் வசதிக்கு இடையூறாக இருந்தால், Authorised Officer, அனுமதி ஆணையின் பேரில் அதே நிலப்பகுதியில் மாற்று இடம் வழங்கலாம்.

ஆனால், மாற்று இடம் குடியிருப்பிற்கு லாயக்கானதாக மற்றும் குறைந்தது 3 செண்ட் அளவிலாவது இருத்தல் வேண்டும்.

மாற்று இடத்திற்காக மற்றும் மேன் கோப்பு கட்டும் செலவை நில உரிமையாளர் மாற்று இடத்திற்காக மற்றும் மேன் கோப்பு A.O. ஆணைப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**4. A.O.** வின் முடிவு

எது குடியிருப்பு என்பதையும் அது குறித்த பிரச்சனை சம்பந்தமாகவும் தீர்மானிக்கும் முடிவு A.O. வைச் சார்ந்ததாகும்.

5. மேல் முறையீடு

சட்டப்பிரிவுகள் 3-A, 3- b, 4 அல்லது 15- A னால் குறையுற்றவர் மாவட்ட ஆட்சியரிடம், ஆணைபிறப்பிக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

7. **இழப்பீடு:--** நிலத்திற்கான இழப்பீடாக A.O. விசாரணை அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிலத்திற்கான நிலவரியைப் போல 100 மடங்குத் தொகை குடியிருப்பு நில உரிமையாளருக்கு வழங்கப்படும், அதனில் உள்ள மேன் கோப்பிற்கு (Supertstructure) சந்தை மதிப்புத் தொகை வழங்கப்படும். இதன் விவரம் மாவட்ட அரசிதழிலும் பிரசுரம் செய்யப்படும்.

8. **இழப்பீடு (ஆட்சேபணை) மேல்முறையீடு**

இழப்பீடு நிர்ணயம் குறித்து ஆட்சேபணை ஏதும் வரப்பெற்றால் 90 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொள்ளலாம்.

10. **உயர் நீதி மன்றத்தில் முறையீடு**

இரண்டாவது மேல்முறையீட்டை (A.S) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

14. **இழப்பீட்டை வசூல் செய்தல்**

நிர்ணயிக்கப்பட்ட தவணைகளில் இழப்பீட்டை குடியிருப்புதாரர் 15 வருடதவணைகளில் ஆண்டுக்கு 6% வட்டியுடன் அரசுக்குச் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் ஜப்தி நடவடிக்கைகள் மூலம் வசூலிக்கப்படும்.

15- A குடியிருப்பை விற்றலுக்குத்தடை

A.O. முன் அனுமதியின்றி, சட்டம் துவங்கிய நாளிலிருந்து 10 வருடங்களுக்கு குடியிருப்பு பட்டா பெற்றவர் வேறு நபருக்கு விற்கவோ, அடமானம் (or) குத்தகைக்கு விடவோ கூடாது.

அவ்வாறு விற்றதாக தகவல் கிடைத்தால், குடியிருப்பு பகுதி (கட்டிடத்துடன்) அரசுடமை ஆக்கப்படும்.

R-III

(9) (91) 9

# தமிழ் நாடு கிராமப்புறகைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் 1976

# Tamil Nadu Rural Artisans (Conferment of Ownership of kudiyiruppu) Act1976

01-07-1975-ல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனையில்லாத கிராமப்புற கைவினைஞர்களுக்கு குடியிருப்பு அனுபோக உரிமை வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டள்ளது. இச்சட்டம் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு 1-04-1990 ல் குடியிருந்து வருபவர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது.

<u>சட்டப் பிரிவு</u>

1. இச்சட்டம் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகள் நீங்கலாக மற்ற இடங்களில் விரிவு படுத்தப்பட்டது.

3. இச்சட்டம் அரசு மற்றும் உள்ளாட்சி நிலங்களுக்குப் பொருந்தாது.

<u>பொருள் வரையறை **(Definition)**</u>

4 (i) Authorised Officer (A.O.) அதிகாரம் பெற்ற அதிகாரி:- தனித்துணை ஆட்சியர்( வருவாய் நீதிமன்றம்)

4 (4) குடியிருப்பு:- கிராமப்புற கைவினைஞரால் வாடகைக்கோ குத்தகை அடிப்படையிலோ குடியிருக்கும் வீடு (or) குடிசை

4-(8) கிராமப்புற **கைவினைஞர்:-** கிராமப்புற தச்சர், கருமார் (கொல்லர்), நாவிதர் (முடிதிருத்துபவர்), சலவைத் தொழிலாளி, குயவர் மற்றும் அரசினரால் அவ்வப்பொழுது அறிவிக்கை செய்யப்படும் கைவினைஞர் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 2400/- ற்குள்ளும் குடியிருப்பைத் தவிர, வேறு நில மில்லாதவராக இருப்பவர்கள்,

**5. குடியிருப்பில் வசிக்கும கைவினைஞர் அதன் உரிமையாளர் ஆதல்**

01-04-1975ல் வாடகை (or) குத்தகை அடிப்படையில் குடியிருப்பில் வசிக்கும் கைவினைஞர். எந்தவித வில்லங்கமும் இன்றி அக்குடியிருப்பின் உரிமையாளராக ஆகின்றார். குடியிருப்பில் உள்ள மேன்கோப்பு (Super Structure) உட்பட கைவினைஞருக்கு உரிமை ஆகின்றது.

**சட்டப்பிரிவு:** கைவினைஞருக்கு குடியிருப்புப்பகுதியிலிருந்து 1. கி.மீ. தொலைவில் வேறு குடியிருப்பு வீடு (or) குடிசை (1.214 ஏக்கர் பரப்பிற்கு மேல்) இருந்தால், இச்சட்டத்தின்படியான குடியிருப்பு உரிமை அவருக்கு சித்திக்காது.

**6. மாற்று இடம் வழங்கல்:-** <u>தற்போதுள்ள குடியிருப்பிடம், நில உரிமையாள ரின்</u> வசிப்பிட, புழக்கத்திற்கு இடையூறாக இருப்பின். A.O. அவர்களிடம் நில உரிமையாளர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாற்று தகுதியான குறைந்தது 1.214 ஏக்கர் பரப்பிலான இடம் கைவினைஞருக்கு வழங்க வழிவகை செய்யப்படும்.

அவ்வாறு, குடியிருப்பு மாற்றத்திற்கான செலவு மற்றும் வீடு கட்டும் செலவினை, நில உரிமையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். நில உரிமையாளர் அவ்வாறு செலவுத் தொகையை ஒப்புக்கொள்ளத் தவறினால், ஏற்கனவே உள்ள குடியிருப்பிடத்திற்கு கைவினைஞர் உரிமையாளர் ஆகிறார்.

மாற்று இடத்திற்கு கைவினைஞர் செல்லத் தவறினால் (or) மறுத்தால், ஏற்கனவே உள்ள குடியிருப்பிடத்திற்கான உரிமையை அவர் இழக்கிறார்; மேலும் தற்போதுள்ள குடியிருப்பிடத்திலிருந்து அகற்றப்படவும் செய்வார்.

**7. குடியிருப்புப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டவரை மீண்டும் குடி அமர்த்துதல்:-**

குடியிருப்புப் பகுதியில் 01-07-1975 ல் வசித்து வந்த கைவினைஞர் அதன்பின் அகற்றபப்பட்டிருந்தால் (Evicted ) சட்டம் துவங்கிய நாளிலிருந்து 6 மாதத்திற்குள்

அவர் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் A.O. அவர்களால் மீண்டும் குடி அமர்த்தப்படலாம்.

8. ஒருவர் கிராம கைவினைஞர் என்பதை A.O. முடிவு செய்தல்

1-07-1975 ற்கு முன்பு கைவினைஞர் குடியிருப்பு பகுதியில் வசித்து வந்தாரா என்பதையும், அது குடியிருப்புப் பகுதியா என்பதையும், கைவினைஞருக்கு ஏற்கனவே சொந்தமாக குடியிருப்பு உள்ளதா என்பதையும் இதுபோன்ற கைவினை ஞருக்குள்ள தகுதிகள் பற்றி A.O. வால் முடிவு செய்யப்படவேண்டும்.

9. மேல் முறையீடு

11. குடியிருப்பு மற்றும் அதன் மேன் கோப்பிற்குரிய மதிப்புத் தொகையை நிர்ணயம் செய்தல்:-

இணைப்பில் (Schedule) கண்ட தொகைப்படி மதிப்புத் தொகை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

## இணைப்பு (Schedule)

குடியிருப்பு உள்ள புல எண்ணில் கண்ட நில வரியைப்போல 100 மடங்குத் தொகை குடியிருப்புக்கான நில மதிப்பாகக் கணக்கிடப்பிட்டு வழங்கப்படவேண்டும்.

மேன் கோப்பிற்கு (Super structure) சந்தை மதிப்பு கணக்கிடப்பட்டு வழங்கப்படவேண்டும்

A.O. அதனை விசாரித்து, வழங்கக்கூடிய தொகை குறித்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் வெளியிடுவார். குடியிருப்பு உரிமையாளர் மற்றும் கட்டிட உரிமையாளர் வேறுவேறாக இருப்பின், அவரவற்கு உரிய பங்கு வீதத்தினை AO.ஒதுக்கீடு செய்வார்.

12. தொகை பங்கீட்டில் மேல்முறையீடு

பிரிவு 11 ன்படியான தொகை பங்கீட்டில் அதிருப்தியுற்றவர் சிவில் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யலாம்.

14. பணம் வழங்குதல்

நிர்ணயம் செய்யப்படதொகை அரசினரால் அங்கீகரித்து வழங்கப்படும். பணத்தை பெற மறுப்பரின் தொகை நீதிமன்றத்தில் டிபாசிட் செய்யப்படும்

15. உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு

நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக, உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்துகொள்ளலாம்.

17. பணம் வழங்கும்முறை

இழப்பீடு தொகை பணமாகவோ பாண்டாகவோ (bond) வழங்கப்படும்.

18. குடியிருப்பு விற்பனைக்குத்தடை

குடியிருப்பு அனுமதி பெற்றதிலிருந்து 10 வருடங்களுக்கிடையில் A.O. அனுமதியின்றி விற்கவோ அடமானம் வைக்கவோ கூடாது. அவ்வாறு செய்தால் செல்லாது.

பிரிவு:-

20 பொது உபயோகங்களுக்கு நிலம் கையகம் செய்தல்

கைவினைஞரின் குடியிருப்புக்குத் தேவையான சாலை, பாதை களம், கால்நடைப்பட்டி போன்ற பொதுத் தேவைகளுக்காக பட்டா நிலத்தை நில உரிமையாளர்களுக்கு, முன்னதாக ஒரு அறிவிப்பு அனுப்பி, தமிழ் மாநில அரசிதழில் விளம்பரம் செய்து, கையகம் செய்யலாம்

## 11 1948- ம் ஆண்டைய குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம் Minimum Wages Act,1948

மாவட்டங்களில் உள்ள வேளாண்மை பிரிவு தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு தனியான விவசாயத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69) இயற்றப்பட்டுள்ளது.

வேளாண்மை பிரிவுத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் பின்வருமாறு:-

அரசாணை 2டி எண்.3 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜே1) துறை நாள் 23-01-2015 ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி, குறைந்தபட்ச ஊதியம் ஆண் பெண் இருபாலருக்கும் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | தங்கள் சொந்த ஏர் உழவு மாடுகளுடன் உழுவோர் | நாள் ஒன்றுககு ரூ.325/- |
| 2 | தங்கள் சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகள் இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றுக்கு ரூ. 146/- |
| 3 | நெல் அறுவடை, கதிர் அறுப்பு களத்திற்கு எடுத்துச்சென்று கதிர் அடித்தல், அவைகளை அளந்து மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் | நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரூ. 146/- அல்லது மொத்த விளைச்சலில் 8-ல் ஒரு பங்கு அளித்தல் அதில் எது அதிகமோ, அக்கூலி |
| 4 | நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்கள் | நாள் ஒன்றுக்கு 6 மணிநேரம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரூ. 146/- |
| 5 | விதைத்தல், நாற்று பிடுங்குதல், நடுதல் மற்றும் களை எடுத்தல் | நாள் ஒன்றுக்கு 6 மணிநேரம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரூ. 146/- |
| 6 | இதர விவசாய பணிகளுக்கு | நாள் ஒன்றுக்கு 6 மணிநேரம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரூ.146 /- |

குறைந்தபட்ச கூலி விகிதங்களில் ஊதியங்கள் வழங்கவில்லை என்று கிராம நிர்வாக அலுவலர்கள் கவனத்திற்கு வந்தால் உடன் அவர்கள் அதனை வட்டாட்சியருக்கு தெரிவிக்க வேண்டும். குறைந்தபட்ச கூலியைப் பெற்றுத் தர எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உதவிட வேண்டும்.

(97)



(12)

# VII.பூமிதானம்

## (Bhoodan Lands)

பார்வை : i. தமிழ்நாடு பூமிதான யக்ரு சட்டம், 1958

ii. பூமிதான சட்ட விதிமுறைகள், 1959

**1. அமைப்பு:**

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் 1951–ம் ஆண்டு துவக்கப்பட்டது. நில்ச்சுவான்தார்கள் மனமுவந்து அளித்த நிலதானமே, பூமிதானமாகும். பூமிதான நிலங்கள் யாவும், சென்னை, நிலச்சீர்திருத்தத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டு பூமிதான் வாரியம் (Bhoodan Board) பெயரில் நிர்வகிக்கப்படுகின்றன. அரசாணை நிலை எண் 493 வருவாய் நி.சீ.1(1) துறை நாள் 23.12.2009–ன்படி வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்:

1. கதர்துறை அமைச்சர் – தலைவர்
2. நிலச்சீர்திருத்த ஆணையர் – உறுப்பினர் – செயலர்
3. செயலாளர், வருவாய்த்துறை – உறுப்பினர்
4. ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் – உறுப்பினர்
5. வேளாண்மைத்துறை இயக்குநர் – உறுப்பினர்
6. அலுவலக சார்பற்ற இயக்குநர் – 10 உறுப்பினர்

அலுவலக சார்பற்ற இயக்குநராக நியமனம் செய்யப்பட தேவையான தகுதிகள்

(i) சர்வோதய சங்கங்களில் சிறப்பாக சமூகத் தொண்டாற்றி வருபவர் (அல்லது)

(ii) பூமிதான இயக்கத்திற்கு அதிக அளவில் நிலங்களை தானமாக அளித்தவர்கள் அல்லது அவரது வாரிசுகள்

சட்டப்பிரிவு 5–ன்படி, வாரியத்தின் உறுப்பினர் பதவிக்காலம் 4 ஆண்டுகள்.

**நிலம் பெறுதல்:**

**நடைமுறை**

நிலச்சுவான்தார் தானமாக முன்வந்து தரும் நிலங்கள் தான ஆவணம் (Donation Deed) வடிவத்தில் வட்டாட்சியரிடம் வழங்கப்பட

101

# பூமிதானம்

தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958 மற்றும் விதிகள் 1959

## I.தோற்றுவாய்:-

வினோபா பாவே அவர்களால் 1951-ம் ஆண்டு துவங்கப்பட்டது. தமிழகத்தில் 28,053 ஏக்கர் பூமிதான நிலங்கள் உள்ளன.

பூமிதான நிலத்தை சட்டப்பிரிவு 16ன் கீழ் தானமாக தருபவர் நிலத்தின் மீதான உரிமையை விட்டுக் கொடுப்பதாக பிரகடனப்படுத்தி படிவம் 1-ல் (Declaration Form 1) கையொப்பமிட்டு பூமிதான வாரியத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும்.

## II. பூமிதானமாக உறுதியாக்கம் செய்வதற்கான வழிமுறைகள்:-

பூமிதானம் பெறப்பட்ட விவரம் படிவம் 7ல் அரசிதழ்களில் விளம்பரம் செய்யப்படவேண்டும்.

விளம்பரம் செய்யப்பட்ட 2 மாதத்திற்குள் ஆட்சேபணை ஏதும் வரப்பெற வில்லையாயின் வட்டாட்சியர் அந்த நிலத்தை, சட்டப்பிரிவு 17(4) ன் கீழ் நடவடிக்கை எடுத்து பூமிதானமாக உறுதி செய்து உரிய படிவத்தில் ஆணை பிறப்பிக்க வேண்டும். மேலும் மாநில மற்றும் மாவட்ட அரசிதழ்களில் பிரசுரம் செய்யவேண்டும்.

## III.பூமிதான நிலத்தை சார்பதிவாகத்தில் பதிவு செய்தல்:-

பூமிதானமாக உறுதி செய்யப்பட்ட ஆணை நகல் சார்பதிவகத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்வதற்கு முத்திரைத்தாள் கட்டணமும், நேரில் ஆஜராவதிலிருந்தும் விலக்கு

## IV. பட்டா மாற்றம் செய்தல்:-

(i) "தமிழ்நாடு பூமிதான வாரியம், சென்னை -5" என்ற பெயரில் பதிவு செய்ய வேண்டும்.

(ii) UDR க்கு முன்பு பூமிதான வாரியத்தின் பெயரில் இருந்து, UDR க்குப் பின்பு வேறு நபர் பெயரில் இருந்தால், மீண்டும் பூமிதான வாரிய பெயரில் மாற்றம் செய்ய வேண்டும்.

(iii) முழுமையான புலங்களில், ஒருபகுதி மட்டும் தானம் பெறப்பட்டு உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தால், படிவம் 7 மற்றும் உறுதியாக்க ஆணையில் உள்ள நான்கெல்லைகளின் அடிப்படையில் நிலத்தை அளந்து, புலத்தை உட்பிரிவு செய்து கிராமக் கணக்குகளில் உரிய மாறுதல் செய்யலாம்.

(iv) தானம் பெறப்பட்ட நிலம் ஒரு புல எண்ணாகவும், தற்போதுள்ள புல எண்ணும் வேறாக இருந்தால், படிவம் - 7 மற்றும் உறுதியாக்க ஆணையில் உள்ள புல எண்ணுடன், UDR க்கு முந்தய 'அ' பதிவேட்டையும்,

தற்போதுள்ள 'அ' பதிவேடு மற்றும் புல வரை படத்தையும் சரிபார்த்து ஆவணங்கள் மற்றும் புலத்தணிக்கையின் அடிப்படையில் சரியான புல எண் கணடறியப்பட்டு, பட்டாமாறுதல் செய்யலாம்.

(v) தானம் செய்யப்பட்ட பரப்பை விட குறைவாக இருப்பவை மற்றும் அதிகமாக இருப்பவை போன்ற இனங்களில், தானப்பத்திரம், V.A.O. அறிக்கை, படிவம் -7 மற்றும் உறுதியாக்க ஆணையில் உள்ள புல எண். பரப்பு ஆகியவற்றுடன், UDR-க்கு முந்தய 'அ' பதிவேட்டையும் அதற்குப் பிந்தய 'அ' பதிவேட்டையும் F.M.B ஆகியவற்றையும் ஆய்வு செய்து, நிலத்தை அளந்து சரியான பரப்பளவு கண்டறியப்பட வேண்டும்.

(vi) கிராமக் கணக்குகளில் வேறு தனிநபர் பெயரில் இருப்பவை போன்ற இனங்களில், படிவம் -7, உறுதியாக்க ஆணை, பத்திரப்பதிவு நகல், UDR க்கு முந்தய 'அ' பதிவேடு, பிந்தய 'அ' பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்து பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்ற வேண்டும்.

(viii) பூமிதான நிலங்கள், புராதனப் புறம்போக்கு, ஓடை, வாய்க்கால், மற்றும் இதர வகைபாடுகளில் இருப்பவை படிவம் - 7, உறுதியாக்க ஆணை, பத்திரப்பதிவு நகல், U.D.R க்கு முந்தய 'அ' பதிவேடு, பிந்தய 'அ' பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்து, நிலத்தை அளவீடு செய்து, பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்ற வேண்டும். இதுதொடர்பான கருத்துருவினை D.R.O. வுக்கு அனுப்பி, உரிய மாற்றங்கள் 'அ' பதிவேட்டில் மேற்கொள்ளப்படவேண்டும். பூமிதான நிலத்தை புறம்போக்கு நிலமாக மாற்றம் செய்வது குறித்து கருத்துருவினை D.R.O. பூமிதான வாரியத்திற்கு அனுப்பவேண்டும்.

(viii) பூமிதான நிலங்களை விற்பனை செய்வதைத் தடுக்க 'O' மதிப்பாக வழிகாட்டிப் பதிவேட்டில் பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

<u>V ஆக்கிரமிப்புதாரரை வெளியேற்றுதல்:-</u>

வேறுநபர் அனுபவத்தில் இருந்தால், ஆக்கிரமிப்பு தாரர்களாகக் கருதி உரிய படிவத்தில் அறிவிப்பு அளிக்க வேண்டும்.

அறிவிப்பு காலத்திற்குள் வெளியேறவில்லையெனில் தமிழ்நாடு பொது இடங்கள் (ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுதல்) சட்டம் 1/1975 ன் கீழ் அகற்ற வேண்டும்.

**<u>VI.நிலவிநியோகம்</u>**

நிலமற்ற ஏழைகளுக்கு (1 ஏக்கர் நஞ்சை (or) 2 ஏக்கர் புஞ்சை வரை நிலம் இருக்கலாம்) அதிக பட்சமாக 2 ஏக்கர் வழங்கலாம். இவரது ஆண்டு வருமானம் ரூ. 25,000/- ற்குள் இருக்கவேண்டும் நிலமற்ற வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கலாம்.

பொதுகாரியத்திற்காக அரசுக்கோ, உள்ளாட்சி அமைப்புகளுக்கோ, கூட்டுறவு அமைப்பிற்கோ நிலம் வழங்கலாம் (சட்டப்பிரிவு 19)

பொதுக் காரியங்களுக்கு தனிநபர் (Or) தொண்டு நிறுவனம் கோரினால் தேவையான நிபந்தனைகளுடன், 2 பங்கு சந்தை மதிப்பினை பெற்றுக்கொண்டு நிலத்தை வழங்கலாம். (சட்டப்பிரிவு 4-3) நிலமெடுப்புச்சட்டத்தின் கீழ் நில மெடுப்பு செய்யப்படும் நிலங்களுக்கு இழப்பீட்டுத்தொகை பூமிதான வாரியத்திற்கு வழங்கப்படும்.

நிலவிநியோகம் பெற்றவர், விவசாய நிமித்தம் மின் இணைப்பு அவரது பெயரில் பெற்றுக்கொள்ளலாம், அதற்கு வாரியத்தின் 'தடையின்மைச் சான்று' வழங்கப்படும்.

கூட்டுறவு சங்கம் (or) தேசிய வங்கியில் கடன் பெறலாம் (விதி 15-3) நில விநியோகம் பெற்றவருக்கு, அதனை அனுபவம் செய்ய மட்டும் உரிமை வழங்கி பூமிதான வாரியத்தால் விநியோகப் பத்திரம் வழங்கப்படுகிறது.

பட்டா தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் பெயரிலேயே வருவாய்த்துறை கணக்குகளில் இருந்து வரும்.

## VII. நிலவிநியோக நிபந்தனைகள்:-

பயனாளி நிலத்தை தொடர்ந்து 3 ஆண்டுகள் அனுபவம் (சாகுபடி) செய்யவில்லை எனில், நிலத்தை வாரியம் திரும்ப எடுத்துக்கொள்ளலாம்.

நில விநியோகம் பெற்றவர், அந்நிலங்களை விற்கவோ, பராதீனம் செய்யவோ குத்தகைக்கு விடவோ கூடாது; கிரயம் செய்ய முடியாது.

பூமிதான நிலங்களிலுள்ள மரங்களையோ, கட்டிடங்களையோ அப்புறப்படுத்த, பூமிதான வாரியம் முன் அனுமதி பெறவேண்டும்.

பூமிதான வாரிய நிபந்தனைகள் மீறப்பட்டால் நில விநியோகம் ரத்து செய்யப்பட்டு, திரும்ப எடுக்கப்பட்டு, மறு விநியோகம் செய்யப்படும்.

விவசாயத்திற்காக வழங்கப்பட்ட நிலத்தை வேறு காரியத்திற்கு பயன்படுத்துதல் கூடாது.

வீட்டுமனை விநியோகம் பெற்றவர் 3 ஆண்டுகளுக்குள் வீடு கட்டவேண்டும், வீட்டுமனையை அடமானம் /ஈடு/வாடகைக்கு விடக்கூடாது. வீடுகட்ட கடன் பெற மின் இணைப்பு பெற தடையில்லை.

## VIII. பதிவேடுகள் பராமரிப்பு

I. பூமிதானப் பதிவேடு
II. தடை ஆணைப் பதிவேடு

## 13 Survey and Boundaries Act 1923
## (1923ம் ஆண்டின் நில அளவு எல்லைச் சட்டம்)

இச்சட்டப்படி, ஒவ்வொரு புல அல்லது உட்பிரிவு எல்லையும் முடிவானதாக்கப்படுகிறது. சட்டத்தின் 4வது ஷரத்தின் கீழ் நில அளவை செய்யும் அதிகாரி அமர்த்தப்படுகிறார். நில அளவைக்கு எடுத்துக் கொள்ளப்படும் முன்பு நிலங்களுக்கும் அரசினர் நிலங்களுக்கும் அரசினரல்லாத நிலங்களுக்கும் இடையிலுள்ள எல்லைகளுக்கும் நில அளவை செய்யப்படும் விவரம் பிரிவு 5ஆவது ஷரத்தின் கீழ் மாநில அரசிதழில் ஒரு விளம்பரம் வெளியிடப்படுகிறது.

நில அளவைக்கு உத்தரவிடப்பட்ட எல்லைகளின் மீதோ நிலத்தின் மீதோ பாத்தியத்தை உள்ள நபர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறித்த காலத்தில் வந்து எல்லைகளைக் காண்பிக்கவும் இதர விவரங்களை தரவும் பிரிவு 6வது ஷரத்தின்கீழ் மாவட்ட அரசிதழில் விளம்பரப்படுத்தப்படுகிறது. மேலும் கிராமச் சாவடியில் விளம்பரம் ஒட்டப்படுகிறது. கிராமத்தில் டாடாம் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. எல்லைக் கற்களுக்கும், அவைகளை நடுவதற்கும் அளவைக்குமான கூலிச் செலவு, பிரிவு 8வது ஷரத்துப்படி நில உடமைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நில உடமைதாரருக்கும் சட்டத்தின் 9(1)ன் ஷரத்தின்கீழ் ஒவ்வொரு உடைமை நிலம் பற்றிய விவரங்கள், கிராமத்திலுள்ள பட்டாதாரர்கள் அனைவருக்கும் வழங்கி சார்பு செய்யப்படும். பிரிவு 10ன்படி, இது குறித்த நிலத்தாவா இருப்பின் நீதிமன்றத்தில் 3 மாதங்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம்.

பிரிவு 11ன்கீழ் உள்ள அதிகாரப்படி மேல்முறையீட்டதிகாரி, வழக்கில் தீர்ப்பு வழங்கி, கட்சிக்காரர்களுக்கு தன் தீர்மானத்தின் நகலை வழங்குவார்.

சட்டத்தின் 13வது ஷரத்தின்படி, நில அளவு வேலை முடிந்ததாக நில அளவை அதிகாரி அறிக்கை வெளியிடுகிறார். இந்த அறிக்கை மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு அதன் நகல் கிராமச் சாவடியில் ஒட்டப்படுகிறது. இம்முடிவான அறிக்கைக்குப் பின்பும், 3 ஆண்டு காலத்திற்குள்ளாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் உரிமையும் பட்டாதாரருக்கு உள்ளது.

# (நில அளவை)

## (I)BOUNDARY DEMARCATION (எல்லை நிர்ணயம்)

கிராமத்தின் எல்லையை நிர்ணயிப்பதற்கு முன், நில அளவர் கிராம அலுவலர்களுக்கு சர்வே எல்லைச் சட்டத்தின் கீழ், படிவம் 9ல் ஒரு எழுத்து மூலமான அறிவிப்பு கொடுப்பார். பின் படிவம் 10ல் ஒரு அறிவிக்கையை கிராமத்தில் விளம்பரப்படுத்துவார். மேலும் நில அளவை செய்யப்படும் முறை, நாள், நேரம், எல்லை முதலியவற்றை கிராம மக்களிடம் விளக்குவார். நில அளவர், தனது அளவைப் பணியை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் இணையும் இடத்திலிருந்து துவங்குவார். கிராம எல்லை வழியாக ஆங்காங்கே தியாடலைட் ஸ்டேஷன்களை வைத்து எல்லை நிர்ணயப் பணியை தொடர்ந்து செய்து கொண்டு செல்வார். கிராம எல்லையில் தியாடலைட் அளவு நிலைகளை ஏற்படுத்தி கோணங்களையும் இடைப்பட்ட தூரங்களையும் அளந்தால் நிலப்படத்திற்கு தேவையான புள்ளிகள் கிடைத்து விடுகின்றன. கிராம எல்லை நிர்ணயப் பணி முடிந்ததும் தியாடலைட் கருவியின் துணை கொண்டு கிராமத்தின் சுற்று வட்டத்தை, வசதியான சிறு சிறு சுற்று வட்ட உட்பிரிவுகளாக பிரித்துக் கொள்ள வேண்டும். இந்தச் சுற்று வட்ட உட்பிரிவை கண்டம் என அழைக்கிறோம்.. ஒரு கண்டம் என்பது 100 ஏக்கர் முதல் 200 ஏக்கர் வரை கொண்ட நஞ்சை நிலங்களாக அல்லது 200 ஏக்கர் முதல் 300 ஏக்கர் கொண்ட புஞ்சை மற்றும் தரிசு நிலங்களாக இருக்கும்/ கிராமத்தின் வடமேற்கு மூலையிலிருந்து ஒவ்வொரு கண்டத்திலும் புல எண்கள் கொடுக்கப்படும்.

அனுபோகப் படியும், பாத்தியப் படியும் பூமியின் வரப்புகளில் பொருத்தமான வளைவுப் புள்ளிகளை தேர்ந்து, அவற்றுடன் ஒன்றுடன் ஒன்றை இணைப்பதன் மூலம் உண்டாகும் நேர் கோடுகளாக எல்லைகள் அமைக்கப்படுகின்றன.

தியேடலைட் என்னும் மிகத் துல்லியமான கோணக்கருவி மூலம் கிராம எல்லை நிர்ணயிக்கப்படுகின்றது. சிறிய நிலப்பரப்பு

எல்லைகளை நிர்ணயிப்பதற்கு சங்கிலியும், நேர்கோணக் கட்டையும் உதவுகின்றன.

மூலைவிட்ட செங்குத்தளவு முறை(Diagonal and Offset System)

நில அளவைப் புலங்களை வசதிக்கேற்ற முக்கோணங்களாகப் பிரித்துக் கொண்டு புலத்தின் வளைவுப் புள்ளிகளை இந்த முக்கோணங்களின் பக்கக் கோடுகளிலிருந்து செங்குத்தளவுகள் மூலம் நிர்ணயிக்கும் சுலபமான முறை.

புல எண் ஏற்படுத்துதல்:

நஞ்சை நிலத்தில் ஒரு புலத்தின் பரப்பு 5 ஏக்கர் (அ) 2 ஹெக்டேர் ஆகவும் புஞ்சை நிலத்தில் 10 ஏக்கர் (அ) 4 ஹெக்டேர் ஆகவும் இருத்தல் வேண்டும். சாலை, பாதை, கால்வாய்கள் போன்றவை 10 சங்கிலி தூரம் (சுமார் 200 மீட்டர்) எனத் தனித்தனி புலங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

ரோடுகள், வாய்க்கால்கள் 4 மீட்டர் (20 links) அகலத்திற்குக் குறைவாக இருந்தால் விளக்கியாக (detail) புலப்படத்தில் காண்பிக்க வேண்டும். 4 மீட்டர் (20 links) முதல் 10 மீட்டர் (50 links) வரை அகலமுடையதாக இருந்தால் அவற்றை சர்வே புலத்தின் உட்பிரிவுகளாக அமைக்க வேண்டும். 10 மீட்டருக்கு மேல் அகலமுடையதாக இருந்தால் தனி சர்வே எண்களாக அமைக்க வேண்டும்.

**சிறு சுற்று வட்டப் புலம்: Minor circuit field**

ஒரு நில அளவைப் புலத்திற்கு வேண்டிய பரப்பை விட அதிகப்பரப்புள்ள தனி உடைமை நிலம் குன்றுகள், ஆறுகள், மேய்ச்சல் நிலங்கள் போன்ற பெரிய புறம்போக்குகள் முதலியவற்றை சங்கிலியும் நேர் கோணக்கட்டையும் கொண்டு அளக்க முடியாது. எனவே தியாடலைட் கருவி, சர்கம்ப்ரெண்டர் போன்ற கோணக்கருவிகளின் உதவியால் அளக்கப்படுகின்றன. இவற்றை சிறு சுற்று வட்டப் புலம் என்கிறோம்.

## நில அளவையில் பிழை வரம்பு அனுமதித்தல்:

காரணம்:

1. அளப்பவர் சங்கிலியை இழுத்துப் பிடிப்பதில் ஒரே மாதிரியான இறுக்கத்தை எப்போதும் கையாளுவதில்லை.
2. ஒவ்வொரு சங்கிலியின் முனையிலும் அம்பை நடும்போது விளையும் சிறு வித்தியாசங்கள்.
3. கரடுமுரடான பூமியில் அளக்கும் போது.

அனுமதி: 5சங்கிலியோ (100மீட்டர்) அதற்குக் குறைவாகவோ உள்ள கோடுகளிலும் 4 லிங்குகள் (80 செ.மீட்டர்) வரை வித்தியாசம் அனுமதிக்கப்படுகிறது. 5 சங்கிலிக்கு மேற்பட்ட தூரங்களில் 1 சங்கிலிக்கு (20 மீட்டருக்கு) 20 செ.மீ வீதம் 10, லிங்குகளுக்கு 2 மீட்டர் மேற்படாத அளவுக்கு வித்தியாசம் அனுமதிக்கப்படுகிறது.

## II) பெரிய கோண அளவை நிலையங்கள்:

## G.T.Station (R.S.O.202)

இது Great Trignometrical Survey station ஆகும். இவை மத்திய அரசால் நிறுவப்படுகின்றன. Map வரைதல், எந்த இடமாவது சர்வே செய்யப்படாமல் விடுபட்டுப் போனால் இதன் மூலம் தெரியவருகிறது. இந்த G.T.Stations மூலம் True north, Latitude, Longitude சரியாக கணக்கிடப்படுகிறன. G.T.Stations பொதுவாக மலை உச்சியில் முக்கியமான இடங்களில் இருக்கும். இவை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.. இவைகளை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் பணி வருவாய்த் துறையைச் சார்ந்தது ஆகும்.

## III) A Stones and B Stones

சர்வே கற்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை "A" கற்கள் மற்றும் "B" கற்கள் ஆகும்.

**A.கற்கள்:**

இவைகளை 1st Class கற்கள் என்றும் தியோடலைட் கற்கள் என்றும் கூறலாம். இவை அளவில் பெரியவை. கல் நடுவில் துளையும் பக்கத்தில் ஒரு அம்புக் குறியும் (↑) போடப்பட்டிருக்கும். கிராம முச்சந்தி ஸ்தானங்கள், அதன் pointer, இரு சந்திப்புகள் சேருமிடம் முதலிய இடங்களில் நடப்படுகின்றன.

**B.கற்கள்:**

இதற்கு புலக்கற்கள் என்று பெயர். இவை அளவில் சிறியவை. கல்லின் ஒருபக்கத்தில் ஒரு அம்புக் குறி (↑ ) மட்டும் போடப்பட்டிருக்கும். கண்டம் ஸ்டேசன்கள், ‘G’ lineகளின் ஆரம்ப, முடிவு ஸ்தானங்கள், எல்லா புல முச்சந்திகள், புறம்போக்குக்கும் பட்டா நிலத்திற்கும் இடையே உள்ள எல்லா வளைவுகளிலும், லோக்கல்பாடிக்கு ஒப்படைக்கப்பட்ட நில உட்பிரிவு எல்லைகளிலும் நடப்படுகின்றன.

## IV) CSM-A and CSM-B

**C.S.M (A) கலெக்டர்ஸ்:-**

வருவாய்த்துறையில் சர்வே பிரிவு மூலமாக கற்கள் பராமரிக்கும் பணி இந்தப் பிரிவில் அடங்குகிறது. நில அளவையில் புலத்தணிக்கையின் போது காணாமல் போன கற்களை கண்டுபிடித்து புதுப்பித்தல், கல்காண்ட்ராக்டர்கள் மூலம் கற்கள் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ளுதல் இதற்கான செலவுத் தொகைக்கு அரசின் ஆணை பெறுதல் பிறகு சம்மந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து கல் கிரயம் வசூலித்தல் முதலிய பணிகள் பார்க்கப்படுகின்றன.

**C.S.M (B) சர்வே அதிகாரிகள்:**

அந்தந்த மாவட்டங்களில் சர்வே செய்யப்படும் பொழுது Initial survey, Resurvey, சப்ளிமெண்டல் சர்வே UDR சர்வே, இவற்றிற்காக கற்கள் நட தேவையான தொகையை அரசிடமிருந்து

பெற்று செலவழித்தல் பின் ரயத்துகளிடமிருந்து அவர்களுக்குச் சொந்தமாக உள்ள நிலத்திற்கு ஏற்ற விகிதாச்சாரமாகப் பிரித்து VAO மூலமாக வசூலிக்கும்பணி முதலியவை இப்பிரிவில் அடங்குகிறது.

## V. புதிய புல எண்களை ஏற்படுத்துதல்

புதிய புலஎண்ணை ஏற்படுத்தும் பொழுது, கிராமத்தின் கடைசி புல எண்ணிற்கு அடுத்த எண்ணைக் கொடுக்கவேண்டும். உதாரணமாக புல எண் 311 புஞ்சைத் தரிசு நிலத்தை உட்பிரிவு செய்து, 3 நபர்களுக்கு நிலப்பட்டா கொடுக்கும் நேர்வில், கிராமத்தின் கடைசி புல எண் 553/3 என்றால், அதற்கு அடுத்த எண்ணான 554, 555, 556 என தொடர்ந்து புல எண் வழங்கவேண்டும். மீதம் உள்ள புஞ்சைத் தரிசு நிலபாகத்தை, பழைய புல எண்ணான 311 என்பதையே வைத்துக் கொள்ள வேண்டும்.

## புல உட்பிரிவு செய்தல் - நடைமுறை

ஒரு புல எண் 132 எனக் கொள்வோம்.

முதலில் 132/1, 132/2 என்றும்

பின்னர் 132/1ஏ, 132/1பி என்றும்

பிறகு 132/1ஏ1, 132/1ஏ2 என்றும் தொடர்ந்து

132/1ஏ1ஏ, 132/1ஏ2ஏ, எனவும்

மாறிமாறி புல பிரிவிற்கு உட்பிரிவு எண் வழங்கவேண்டும்.

உட்பிரிவுகள் ஒப்பளிக்கப்படும் போது அதற்கு '8ஏ' எண் வழங்கப்படும். நில அளவர், 'அ'பதிவேடு, FMB, அடங்கல் சிட்டா முதலிய ஆவணங்களில் வட்டாட்சியரின் '8A' ஆணை எண்/தேதி முதலியவற்றை குறித்து, ஒப்பமிடவேண்டும்.

## (VI) நில அளவைக் கற்களைப் பராமரிக்கும் பணி

### நில உடைமையாளர் கடமைகள்:

தன்னுடைய உடைமை நில எல்லையில் உள்ள நில அளவைக் குறியீடுகளை (கற்களை) புதுப்பிப்பது, பழுதுபார்ப்பது, பராமரிப்பது ஆகிய வேலைகள் ஒவ்வொரு நில உடைமையாளரின் கடமை ஆகிறது. 1923ம் வருட சர்வே எல்லை குறித்த சட்டம் பிரிவு 15ன்படி ஒவ்வொரு நிலச்சுவான்தாரரும் சர்வே கற்களை பராமரிக்க வேண்டும். தவறினால் அரசு செலவில் புதுப்பித்து அதற்கான செலவுத்தொகை நிலச் சுவான்தாரிடம் வசூலிக்கப்படவேண்டும்.

### கிராம நிர்வாக அலுவலரின் கடமைகள்:

சர்வேகற்களை ஆய்வு செய்வதும், முறையாகவும் ஒழுங்காகவும் பராமரிப்பதும் காணாமற்போன கற்களுக்குப் பதில் புதிய கற்களை உடனுக்குடன் நடுவதும் கிராமநிர்வாக அலுவலரின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். புறம் போக்குகளில் நிகழும் ஆக்கிரமிப்புகளைக் கண்டுபிடித்தல் ஆக்கிரமிப்புகள் நிகழா வண்ணம் பாதுகாத்தல் முதலியவை கற்கள் பராமரிப்புப் பணியின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. நடைமுறை வேலையின் தேவைகளுக்கேற்க போதுமான எண்ணிக்கையுள்ள கற்களை V.A.O. கல் டெப்போவில் வைத்திருக்க வேண்டும். காணாமல் போன கற்களை சரியானபடி புதுப்பிப்பதன் மூலம் நிலவியல் அடிப்படை உருவ அமைப்பை பழுதின்றி V.A.O. வைத்திருக்க முடியும்; இதனால் அன்றாட வருவாய்த் துறை நிர்வாகத்தில் எழும் மாறுதல்களை நிறைவேற்றும் பராமரிப்பு வேலையின் முக்கிய நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. 1923-ம் வருட சர்வே எல்லை குறித்த சட்டம் பிரிவு 16ன்படி சர்வே கற்களை V.A.O. சேதாரம் இல்லாமல் பார்த்து வரவேண்டும்.

## VII) ஒரு புல எண்ணில் புதிய உட்பிரிவுகள் ஏற்படும் சூழ்நிலைகள், இதற்குரிய மாற்றங்கள் (போக்குவரத்து) செய்யப்படும் கணக்குகள் விவரம்:-

கிரயம் தானம் பாகப்பிரிவினை, வாரிசு உரிமை முதலிய பல நிலைகளில் அனுபோக பாத்தியதையில் மாறுதல் ஏற்படுகிறது. இதற்கான எல்லையை வரையறுக்க உடைமைகளுக்கு இடையே வரப்புகளை அமைத்துத் தரல் வேண்டும். புஞ்சையிலிருந்து நஞ்சை, தரிசிலிருந்து புறம்போக்கு, புறம்போக்கிலிருந்து தரிசு என்பன போன்ற நிலப்பாகுபாடு மாற்றங்களும் அவ்வப்பொழுது உத்தரவிடப்படுகிறது.

இவ்வகை மாற்றங்களைப் பதிவு செய்வதற்காக வட்டாட்சியர் அலுவலகத்தில் பின்கண்ட பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன.

1. பட்டா மாறுதல் பதிவேடு
2. தர்க்காஸ்து ரிஜிஸ்தர்
3. உரிமை கைவிடல் பதிவேடு
4. உரிமை மாற்றம் பதிவேடு
5. பதிவு மற்றும் வகைமாற்றங்கள் பதிவேடு

இவ்வகை மாற்றங்கள் முடிவாக 'A' பதிவேடு, புல அளவுச் சுவடி, அடங்கல் மற்றும் 10(1) சிட்டா பதிவேடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமக் கணக்குகளில் போக்குவரத்திற்குப் பின் அதனைத் தொடர்ந்து வட்டக் கணக்குகளிலும் தேவையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

## VIII)Survey and Boundaries Act 1923

### (1923ம் ஆண்டின் நில அளவு எல்லைச் சட்டம்)

இச்சட்டப்படி ஒவ்வொரு புல (அ) உட்பிரிவு எல்லையும் முடிவானதாக்கப்படுகிறது. சட்டத்தின் 4வது ஷரத்தின் கீழ் நில

அளவை செய்யும் அதிகாரி அமர்த்தப்படுகிறார். நில அளவைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பு அரசினர் நிலங்களுக்கும், அரசினரல்லாத நிலங்களுக்கும் இடையிலுள்ள எல்லைகளுக்கும் நில அளவை செய்யப்படும் விவரம் பிரிவு 5 ஆவது ஷரத்தின் கீழ், மாநில அரசிதழில் ஒரு விளம்பரம் வெளியிடப்படுகிறது.

நில அளவைக்கு உத்தரவிடப்பட்ட எல்லைகளின் மீதோ நிலத்தின் மீதோ பாத்தியதை உள்ள நபர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறித்த காலத்தில் வந்து எல்லைகளைக் காண்பிக்கவும் இதர விவரங்களைத் தரவும் பிரிவு 6வது ஷரத்தின்கீழ் மாவட்ட அரசிதழில் விளம்பரப் படுத்தப்படுகிறது. மேலும் கிராமச் சாவடியில் விளம்பரம் ஒட்டப்படுகிறது. கிராமத்தில் டாடாம் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. எல்லைக்கற்களுக்கும் அவைகளை நடுவதற்கும் அளவைக்குமான கூலிச் செலவு பிரிவு 8வது ஷரத்துப்படி நில உரிமை தாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நில உடைமைதாரருக்கும் சட்டத்தின் பிரிவு 9(1)ன் ஷரத்தின் கீழ் ஒவ்வொரு உடைமை நிலம் பற்றிய விவரங்கள், கிராமத்திலுள்ள பட்டாதாரர்கள் அனைவருக்கும் வழங்கி சார்வு செய்யப்படும். பிரிவு 10ன்படி இது குறித்த நிலத்தாவா இருப்பின் நீதிமன்றத்தில் 3 மாதங்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம்.

பிரிவு 11-ன் கீழ் உள்ள அதிகாரப்படி மேல்முறையீட்டதிகாரி வழக்கில் தீர்ப்பு வழங்கி, கட்சிக்காரர்களுக்கு தன் தீர்மானத்தின் நகலை வழங்குவார்.

பிரிவு 13ன் கீழ் உள்ள ஷரத்தின்படி நில அளவு வேலை முடிந்ததாக நில அளவை அதிகாரி அறிக்கை வெளியிடுகிறார். இந்த அறிக்கை மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு அதன் நகல் கிராமச் சாவடியில் ஒட்டப்படுகிறது. இம்முடிவான அறிக்கைக்குப்பின்பும் 3 ஆண்டு காலத்திற்குள்ளாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் உரிமையும் பட்டாதாரருக்கு உள்ளது.

## IX) நில அளவைக் கட்டணங்கள்:

**கணிணி மூலம் சிட்டா வழங்கக் கட்டணம்:**

| | |
|---|---|
| தொடுதிரை கணினியில் பார்த்து தகவல் தெரிந்து கொள்ள | ரூ.2.00 |
| மேற்படி தகவல்களை நகலாகப்பெற, நகல் 1க்கு பக்கம் 1க்கு | ரூ.20.00 |

நில அளவைக் கட்டணங்கள்

உட்பிரிவு 1க்கு (உட்பிரிவுக் கட்டணம்)

| | |
|---|---|
| நகரப் பகுதிகள் | ரூ.40.00 |
| கிராமப் பகுதிகள் | ரூ.40.00 |

**புல எல்லை அளந்து காட்டுவதற்கு கட்டணம்('F'line Fees)**

புலத்தின் வரைபடத்தில் உள்ள அளவுகளின் படி அளந்து காட்ட ஒவ்வொரு உட்பிரிவிற்கும் தேவையான ஒவ்வொரு அளவு கோட்டிற்கும் ரூ.80/வீதம்

உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்னர் பத்திரத்தில் உள்ள பரப்பளவிற்கு எல்லை நிர்ணயித்துத் தருவதற்கு ஒவ்வொரு அளவு கோட்டிற்கும்

Spl 'F' Line

| | |
|---|---|
| புஞ்சை நிலத்திற்கு | ரூ.40/வீதம் |
| நஞ்சை நிலத்திற்கு | ரூ.40/வீதம் |

**செலுத்துச் சீட்டு தலைப்பு:**

0029 - Land Revenue - 800
Other Receipts - AA - Receipt -
in Connection with Survey and Settlement operations.
(DP Code No. 002900800AA0009)

## புல எல்லையயை அளந்து காட்டுதல் - மேல் முறையீடு கட்டணம்:

குறுவட்ட அளவர்/நகர சார்ஆய்வாளர் அளந்து
காட்டிய எல்லையை ஆட்சேபித்து புலத்தின் வரைபடத்தில்
உள்ள அளவுகளின்படி அளந்து

காட்டத் தேவையான ஒவ்வொரு அளவு
கோட்டிற்கும் கட்டணம் ரூ.200/-

வரைபட நகல்பெற புலம் ஒன்றுக்கு கட்டணம் (கிராமம்) ரூ.20/-

வரைபடம் ஒரு நம்பருக்கு (நகரம்) ரூ.50/-

நிலத்தின் எல்லைகளை அளந்து காட்டுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

1) ரூ.2/- நீதிமன்றக் கட்டணவில்லை ஒட்டப்பட்ட மனு.
2) பட்டா/சிட்டா நகல்
3) பத்திர நகல்
4) மனைப்பிரிவு வரைபட நகல்
5) அசல் செலுத்துச்சீட்டு (செலான்)

## வரைபட நகல் பெற சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

1) ரூ.2/- நீதிமன்றக் கட்டணவில்லை ஒட்டப்பட்ட மனு.
2) அசல் செலுத்துச்சீட்டு (செலான்)
3) பட்டா/சிட்டா நகல்

## கணினிச் சிட்டா பெற கட்டணம்

ஒரு புல எண்ணுக்கு ரூ.20/- வீதம்

## செலுத்துச்சீட்டு தலைப்பு

"0070 other Administrative Services - 00 other service 800 other receipts - DD collection of user charges on Land Records.
(DP code - 007060800 DD 0001)"

## சர்வே அளவை நடைமுறை

X நகர நில அளவர் கடமைகள் :-

i) சார் பதிவகம் மூலம் வரப்பெறும் கிரய மாற்றங்களை ஆவணங்கள், மனை, கூட்டுக் கிரயங்கள், வாரிசு, தான அடிப்படையில் ஏற்படும் பட்டா மாற்றங்கள், உட்பிரிவு ஆவணங்கள் (நிலத்தை அளவை செய்து) தயாரித்தல்.

ii) ஒப்படை, நில உரிமை மாற்றம், வகைமாற்றம், நிலம் பரிவர்த்தனை போன்ற இனங்களில் எழும் அளவைப் பணிகள், நில அளவை ஆவணங்கள் தயாரித்தல்

iii) நகரில் அரசுப் புறம்போக்குகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட நிலக் கட்டுப்பாட்டுத் துறைக்கு தெரிவித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலரின் ஆக்கிரமிப்புப் பணிகளின்போது உடனிருந்து தேவையான உதவிகள் செய்தல்.

iv) நகர நில அளவைக் கற்களை ஆய்வு செய்தல்; காணாமல் போன கற்களுக்குப் பதில் புதிய கற்களை உடனுக்குடன் நடுதல் பணி.

v) T.S.L.R. போன்ற நகர நில ஆவணங்களை பேணுதல் மற்றும் நாளது தேதி வரை (update) பராமரித்தல்.

(vi) புல எல்லையை அளந்து காட்டுதல்.

### வரைவாளர் கடமைகள்
### Duties of draughtsman.

i) வட்டக் கணக்குகளில் தேவையான மாற்றங்கள் [B.A. Changes] ~~செய்~~ செய்தல் போன்ற பணி

ii) புலங்களில் உட்பிரிவுகள் ஏற்படும் நிகழ்வுகளில், உட்பிரிவு ஆவணங்களை ஆய்வு செய்தல்.

iii.) வண்ணப்படங்களின் அடிப்படையில் புலப்படம் (F.M.B), வரைபடம் நகல் தயாரித்து அளித்தல்.

(iv) நில அளவை தொடர்பான அனைத்து வட்டப் பதிவேடுகளையும் நாளது தேதி வரை நன்முறையில் பராமரித்தல்.

R-3 III
16
(119)

(16) Regulation Act VII of 1817
Charitable Endowment Act

1817ம் வருட ஒழுங்கு முறைச் சட்டம் VII

தரும சிந்தனையுடன் நன்கொடையாக எழுதி வைக்கப்பட்ட சொத்து ஒழுங்கு முறை சட்டம் VII

பாலங்கள், சத்திரங்கள், தங்குமிடங்கள், போன்ற பொதுக்காரியங்கள், பராமரிப்பு, சரிசெய்தலுக்காக, மசூதிகள், இந்துக்கோயில்கள், கல்லூரி போன்ற ஸ்தாபனங்களுக்கு தருமசிந்தனையுடன் தானமாக எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து வரும் வாடகை மற்றும் இதர உற்பத்திப் பொருட்களை தனி நபர் தவறாகப் பயன்படுத்தாத வகையில் ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட ஆணை ஆகும்.

1. அரசினராலும், நற்சிந்தனையாளர்களாலும் மக்கள் நலன் மற்றும் பொதுக்காரியங்களுக்காக வழங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் நிலங்களை தனியார் தங்கள் சுயலாபத்திற்காக பயன்படுத்தாமல் பொது நோக்கப்பயன்பாட்டிற்கு நெறிமுறைப்படுத்தவும் வைசொத்துக்களை பாதுகாக்கவும் அரசினரால் இதற்கென ஒழுங்கு முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. அறநிலையங்கள் மற்றும் தர்மஸ்தாபனங்களுக்கு பக்தி சார்ந்த நன்மை பயக்கக்கூடிய காரியங்களுக்காக நிலங்களிள் வழங்கப்பட்டதின் நோக்கம் பொதுநலன் நிறைவேறவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ஆகும். ஸ்தாபன இப்பணியினை சீரிய முறையில் கண்காணிக்க ஸ்தாபன சொத்துக்களின் நிர்வாகம் வருவாரியத்தின் Board of Revenue பொது மேற்பார்வையில் இந்த ஒழுங்கு முறை ஆணையின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (vested)

3. எந்தந்த நற்காரியங்களுக்காக அரசினராலும் தனி நபர்களாலும் இதுபோன்ற மதஸ்தாபனங்களுக்கும் தருமஸ்தாபனங்களுக்கும் நிலங்கள் மற்றும் சொத்துக்கள் வழங்கப்பட்டதோ, அந்த நோக்கங்கள், கட்டுமானங்கள். மராமத்துப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை கண்காணித்தல், வருவாய் வாரியத்தின் முக்கிய பொறுப்பு ஆகும்.

4. அறஸ்தாபனங்களால் பராமரிக்க இயலாத பழமையான கட்டிடங்கள் இடியக்கூடிய நிலையில் பாழுடைந்து இருந்தாலோ அல்லது சரிசெய்ய முடியாத அளவுக்கு இருந்தாலோ, அக்கட்டிடங்களை சீர்செய்தல் அல்லது எவ்வாறு வேறு வகையில் முடிவு செய்தல் என்பது குறித்து வருவாய் வாரியம் அரசினரின் ஆணை பெற்று முடிவு செய்யலாம்.

5. அறமட்டும் பொது பயன்பாட்டிற்காக உரித்தாக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் நிலங்களை இந்நிலையங்களை நிர்வகிக்கும் மற்றும் மேற்பார்வை செய்யும் தனி நபர்கள் தங்கள் சுயலாபத்திற்கு பயன்படுத்தாமல் இருப்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு வருவாய் வாரியத்திற்கு உண்டு.

# அத்தியாயம் - 1

## முதனிலை

**பிரிவு 1. குறுந்தலைப்பு, பரவெல்லை மற்றும் தொடக்கம்.–**

(1) இந்தச் சட்டம் "**குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009**" என்று அழைக்கப் பெறும்.

(2) ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதற்கும் இந்தச் சட்டம் அளாவி நிற்கும்.

(3) மத்திய அரசு அரசிதழில் அறிவிக்கிற அத்தகைய நாளிலிருந்து இது நடைமுறைக்கு வரும்.

**பிரிவு 2. பொருள் வரையறைகள்.–**

இந்த சட்டத்தில் தருணம் வேறு வகையில் வேண்டினாலன்றி,

(a) "**உரிய அரசாங்கம்**" என்பது–

(i) மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அதற்கு சொந்தமான அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படுகிற பள்ளி அல்லது சட்டமன்றம் இல்லாத ஒன்றியப் பிரதேசத்திற்கு பொறுப்பு அரசாங்கமாக இருக்கும் மத்திய அரசாங்கம் என்று பொருள்படும்.

(ii) உட்கூறு (f) ல் சுட்டியுரைக்கப்பட்ட பள்ளி அல்லாத, பகுதிக்குள் நிறுவப்பட்ட பள்ளி தொடர்பில்–

(A) மாநிலம், அந்த மாநில அரசாங்கம் என்றும்

(B) சட்ட மன்றம் உள்ள ஒரு ஒன்றியப் பிரதேசத்தில் அந்த ஒன்றியப் பிரதேச அரசாங்கம் என்றும் பொருள்படும்.

(b) "**கட்டாய நன்கொடை**" என்பது பள்ளியால் அறிவிக்கப்பட்ட கட்டணம் அல்லாத எந்த விதமான பங்களிப்பு அல்லது நிதி வழங்கல் அல்லது கட்டணம் செலுத்துதல் எனப் பொருள்படும்.

(c) "**குழந்தை**" என்பது 6 முதல் 14 வயது வரை உள்ள ஆண் அல்லது பெண் குழந்தை எனப் பொருள்படும்.

(d) "**வாய்ப்பற்ற பிரிவை சேர்ந்த குழந்தை**" என்பது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சமூக ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது, சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கப்படும் சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம், நிலப்பரப்பு, மொழி, பாலினம் அல்லது இத்தகைய இதர அம்சங்களால் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவை சேர்ந்த குழந்தை என்று பொருள்படும்.

(e) "**நலிந்த பிரிவைச் சேர்ந்த குழந்தை**" என்பது சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச வருடாந்திர வருமானத்திற்கும் குறைவான வருமானம் உள்ள பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் குழந்தை என்று பொருள்படும்.

(f) "**தொடக்கக் கல்வி**" என்பது முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலான கல்வி என்று பொருள்படும்.

(g) குழந்தையை பொறுத்தவரையில் "**காப்பாளர்**" என்பது குழந்தையைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ள, மற்றும் கவனித்துக் கொள்கிற ஒருவர் மற்றும் இதில் இயற்கையான பாதுகாப்பாளர் அல்லது ஒரு நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட அல்லது சட்டப்பூர்வமாக பாதுகாப்பாளர் என்று அறிவிக்கப்பட்டவர் உள்ளடங்குவர்.

(h) "**உள்ளாட்சி அதிகார அமைப்பு**" என்பது மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அல்லது நகர ஊராட்சி அல்லது கிராம ஊராட்சி என எந்த பெயரில் குறிப்பிடப்பட்டாலும் அந்த நிர்வாகத்தை குறிக்கும். மற்றும் அந்த பள்ளியின் மீது அந்த நிர்வாகம் அல்லது அமைப்பிற்கு நிர்வாக அதிகாரம் இருப்பதும் இதில் உள்ளடங்கும் அல்லது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தின்படியும் ஒரு நகரம் அல்லது ஊர் அல்லது கிராமத்தில் உள்ளாட்சி நிர்வாகமாக செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பையும் குறிக்கும்.

(i) "**தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**" என்பது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005 பிரிவு 3ன் கீழ் அமைக்கப்பட்ட தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் எனப் பொருள்படும்.

(j) "**அறிவிக்கை**" என்பது அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை என்று பொருள்படும்.

(k) "**பெற்றோர்**" என்பது ஒரு குழந்தையின் இயற்கையான அல்லது வளர்ப்பு அல்லது தத்தெடுத்துக் கொண்ட தந்தை அல்லது தாய் என்று பொருள்படும்.

(l) "**வகுத்துரைக்கப்பட்ட**" என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளின்படி வகுத்துரைக்கப்படுவது என்று பொருள்படும்.

(m) "**அட்டவணை**" என்பது இந்தச் சட்டத்தில் இணைக்கப்பட்ட அட்டவணையைக் குறிக்கும்.

(n) "**பள்ளி**" என்பது தொடக்கக் கல்வியை வழங்குகிற எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியும் என்று பொருள்படும். அது பின்வரும் பள்ளிகளை உள்ளடக்கியதாகும்.

(i) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்பட்டு, அதற்கு சொந்தமாக உள்ள அதனால் கட்டுப்படுத்தப்படுகிற ஒரு பள்ளி;

(ii) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்திடமிருந்து தனது முழு செலவுகளுக்கு அல்லது பகுதிச் செலவுகளுக்கு உதவி அல்லது மான்யம் பெறுகிற ஒரு அரசு உதவி பெறும் பள்ளி;

(iii) குறித்துரைக்கப்பட்ட பிரிவை சேர்ந்த ஒரு பள்ளி; மற்றும்

(iv) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்திடமிருந்து தனது செலவுகளுக்காக எந்தவகையான உதவி அல்லது மான்யம் பெறாத அரசு உதவி பெறாத பள்ளி என்று பொருள்படும்.

(o) "**திறன் தணிக்கை நடைமுறை**" என்பது ஒரு குழந்தையைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காகத் தொடர்பற்ற முறையில் அல்லாமல் ஒன்றுக்கு முந்திய இன்னொன்று என்ற முறையில் மேற்கொள்ளப்படும் தேர்வு முறை என்று பொருள்படும்.

(p) "**குறித்துரைக்கப்பட்ட பிரிவு**" என்பது ஒரு பள்ளியைப் பொறுத்தவரையில், கேந்திரிய வித்யாலயா, நவோதயா வித்யாலயா, சைனிக் பள்ளி அல்லது உரிய அரசாங்கத்தால் அறிவிக்கை மூலம் குறிப்பிடப்படுகிற ஒரு தனித்தன்மையுள்ள எந்தவொரு பள்ளியையும் குறிககும்.

(q) "**மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**" என்பது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005ன் கீழ் அமைக்கப்படுகிற மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்ப ஆணையத்தை குறிக்கும்.

* * * * * *

# அத்தியாயம் - 2

## இலவச மற்றும் கட்டாய கல்விக்கான உரிமை

**பிரிவு 3. குழந்தையின் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை.—**

(1) 6 முதல் 14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழநதைக்கும் ஒரு அண்டைப் பகுதி பள்ளியில் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச மற்றும் கட்டாய கல்வி பெறுவதற்கு உரிமை உண்டு.

(2) உட்பிரிவு (1)ன் நோக்கத்திற்காக, எந்தவொரு குழந்தையும் தொடக்கக் கல்வியை தொடர்ந்து படித்து முடிப்பதை தடுக்கக் கூடிய வகையில் எந்தவிதமான கட்டணமோ, கட்டணங்களோ செலுத்த வேண்டியதில்லை அல்லது செலவுகளைச் செய்ய வேண்டியதில்லை.

வரம்புரையாக, ஊனமுற்றோர் சட்டம் 1996 (சம வாய்ப்புகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) பிரிவு 2ன் துணை பிரிவு 1ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒரு குழந்தை ஊனமுற்றிருக்குமானால் அக்குழந்தைக்கு குறிப்பிட்ட சட்டத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் உள்ள வகையங்களுக்கிணங்க இலவச கட்டாய தொடக்கக் கல்வி பெறுகிற உரிமை உண்டு.

**பிரிவு 4. பள்ளியில் சேர்க்கப்படாத குழந்தைகள் அல்லது தொடக்கக் கல்வியை முடிக்காத குழந்தைகளுக்கான சிறப்பு வகையங்கள்.—**

6 வயதுக்கு மேற்பட்ட ஒரு குழந்தை எந்தவொரு பள்ளியிலும் சேர்க்கப்பட்டிருக்காதவிடத்து அல்லது சேர்க்கப்பட்டிருந்தாலும் தனது தொடக்கக் கல்வியை முடிக்க இயலவில்லையென்றால் அவன் அல்லது அவள் அதன் வயதுக்குப் பொருத்தமான ஒரு வகுப்பில் சேர்க்கப்படும்.

வரம்புரையாக, அவன் அல்லது அவள் வயதுக்கு பொருத்தமான வகுப்பில் நேரடியாக சேர்த்துக் கொள்ளப்படும் ஒரு குழந்தைக்கு, மற்றவர்களுக்கும் இணையாக இருப்பதற்காக, குறிப்பிட்ட கால அளவுகளில், குறிப்பிட்ட வகையில் வகுத்துரைக்கப்படுகிற சிறப்புப் பயிற்சியைப் பெறுகிற உரிமை உண்டு.

மேலும் வரம்புரையாக, அவ்வாறு தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்படும் ஒரு குழந்தைக்கு 14 வயதுக்குப் பிறகும் கூட தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் இலவசமாக கல்வி பெறும் உரிமை உண்டு.

**பிரிவு 5. வேறுபள்ளிக்கு மாறுவதற்கான உரிமை.—**

(1) தொடக்கக் கல்வியை முடிப்பதற்கு வழியில்லாத, ஒரு பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக பிரிவு 2 உட்பிரிவு (n) துணை பிரிவு (iii) மற்றும் (iv) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகள் தவிர்த்து வேறு பள்ளிக்கு மாற்றக்கோரும் உரிமை உண்டு.

(2) தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக ஒரு மாநிலத்திற்கு உள்ளே அல்லது வெளியே ஒரு பள்ளியில் இருந்து வேறொரு பள்ளிக்கு மாறவேண்டிய அவசியம் உள்ள ஒரு குழந்தைக்கு பிரிவு 2 உட்பிரிவு (n) துணை பிரிவு (iii) மற்றும் (iv) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகள் தவிர்த்து எந்த ஒரு பள்ளிக்கும் தன்னை மாற்றுமாறு கோர உரிமை உண்டு.

(3) அத்தகைய வேறொரு பள்ளியில் சேர்த்துக் கொள்ளக் கோருவதற்காக, கடைசியாக அந்தக் குழந்தை படித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் உடனடியாக மாற்றுச் சான்றிதழ் வழங்க வேண்டும்.

வரம்புரையாக, மாற்றுச் சான்றிதழ் வழங்குவதற்கும் தாமதமாகும் நிலையில் அது அந்தக் குழந்தையை அத்தகைய வேறொரு பள்ளியில் சேர்ப்பதற்கு தாமதப்படுத்துவதற்கான அல்லது மறுப்பதற்கான காரணம் ஆகாது.

மேலும் வரம்புரையாக, மாற்றுச் சான்றிதழ் வழங்குவதை தாமதப்படுத்தும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் அவருக்கு பொருந்தும் பணி விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

* * * * * *

# அத்தியாயம் - 3

## உரிய அரசாங்கம், உள்ளாட்சி அதிகார அமைப்பு மற்றும் பெற்றோர் கடமைகள்

**பிரிவு 6. பள்ளியை நிறுவுவதில் உரிய அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பின் கடமை.–**

இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்காக உரிய அரசாங்கமும் உள்ளாட்சி அதிகார அமைப்பும், அண்டை வட்டாரத்திற்குள் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி பள்ளி தொடங்குதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பள்ளி நிறுவப்படாதிருக்கிறவிடத்து, இந்த சட்டம் நடைமுறைக்கு வரத் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவிட வேண்டும்.

**பிரிவு 7. நிதி மற்றும் இதர பொறுப்புகள் பங்கீடு.–**

(1) இந்தச் சட்டத்தின் வகையங்களை செயல்படுத்த மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் நிதி வழங்குவதற்கான ஒருங்கிணைந்த பொறுப்பு உண்டு.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்படும் முதலீடு மற்றும் தொடர் செலவுகள் குறித்த மதிப்பீட்டை மத்திய அரசாங்கம் தயாரிக்க வேண்டும்.

(3) மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு மேற்படி துணை பிரிவு (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளுக்கான விகிதாச்சாரத்தை வருவாய் உதவி மான்யங்களாக அதனை மாநில அரசுகளோடு அவ்வப்போது கலந்தாலோசித்து நிர்ணயித்து வழங்குதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் வகையங்களை செயல்படுத்த ஒரு மாநில அரசாங்கம் தனது பங்கு நிதியை வழங்கும் வகையில், உறுப்பு 280 கூறு (3)ன், உட்கூறு (b) ன் கீழ் நிதி ஆணையம் கூடுதல் நிதி ஆதாரங்களை வழங்குவது குறித்து ஆய்வு செய்யுமாறு நிதி ஆணையத்தை பணிக்குமாறு குடியரசு தலைவரை மத்திய அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கலாம்.

(5) உட்பிரிவு (4)ல் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும், பிரிவு (3)ன் கீழ் ஒரு மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியை கணக்கில் கொண்டு இந்த சட்ட வகையங்களைச் செயல்படுத்துவதற்கான நிதிகளை வழங்குவது மாநில அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

(6) மைய அரசானது,

(a) பிரிவு 29ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ கல்வி அமைப்பின் உதவியோடு தேசிய பாடத்திட்டத்திற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கும்.

(b) ஆசிரியர்கள் பயிற்சிக்கான தர நிர்ணயங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

(c) புதிய அணுகுமுறைகள், ஆய்வுகள், திட்டமிடுதல் மற்றும் திறன் மேம்பாட்டை வளர்ப்பதற்காக மாநில அரசாங்கத்து தொழில் நுட்ப ஆதரவையும் ஆதாரங்களையும் வழங்கும்.

**பிரிவு 8. உரிய அரசாங்கத்தின் கடமைகள்.–**

உரிய அரசாங்கம் பின்வருமாறு செயல்பட வேண்டும்.

(a) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கதல்.

வரம்புரையாக, உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்படாத, அதற்குச் சொந்தமல்லாத அதனால் கட்டுப்படுத்தப்படாத அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டவட்டமாக நிதி வழங்கப்படாத வேறு பள்ளிகளில் ஒரு குழந்தை சேர்க்கப்பட்டிருக்கிறவிடத்து அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளருக்கு அத்தகைய வேறு பள்ளியில் குழந்தைக்கு தொடக்க கல்வி அளிப்பதில் ஏற்படும் செலவை ஈட்டளிப்பு கோருவதற்கு உரிமை இல்லை.

**விளக்கம்** : "கட்டாயக் கல்வி" எனும் சொற்றொடர் பின்வருவனவற்றிற்கு உரிய அரசின் கடப்பாடு ஆகும்.

(i) உரிய அரசாங்கம் 6 முதல் 14 வயது வரை ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசமான தொடக்கக்கல்வி வழங்குவது; மற்றும்

(ii) 6 முதல் 14 வயது வரையுள்ள ஒவ்வொரு குழந்தையும் கட்டாயமாக பள்ளியில் சேர்க்கப்படுவது, பள்ளிக்கு வருகை மற்றும் தொடக்கக் கல்வியை முடிப்பது என்பதை உறுதிப்படுத்துவது.

(b) பிரிவு 6ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அண்டை வட்டாரத்தில் பள்ளி கிடைப்பதை உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்;

(c) நலிந்த பிரிவையும் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவையும் சேர்ந்த குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும், அவர்கள் எந்த காரணத்திற்காகவும் தங்கள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதிலிருந்து தடுக்கப்படாமல் இருப்பதையும் உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்;

(d) பள்ளிக் கட்டடம், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சாதனங்கள் உள்ளிட்ட உள் கட்டுமானங்களை வழங்க வேண்டும்;

(e) பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்;

(f) ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்;

(g) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் தரங்களின்படி நல்ல, தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்;

(h) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் உரிய காலத்தில் வகுக்கப்படுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும். மற்றும்

(i) ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்.

**பிரிவு 9. உள்ளாட்சி அதிகார அமைப்பின் கடமைகள்.–**

ஒவ்வொரு உள்ளாட்சி அதிகார அமைப்பும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(a) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கதல்.

வரம்புரையாக, உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்படாத, அதற்குச் சொந்தமல்லாத அதனால் கட்டுப்படுத்தப்படாத அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டவட்டமாக நிதி வழங்கப்படாத வேறு பள்ளிகளில் ஒரு குழந்தை சேர்க்கப்பட்டிருக்கிறவிடத்து அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளருக்கு அத்தகைய வேறு பள்ளியில் குழந்தைக்கு தொடக்க கல்வி அளிப்பதில் ஏற்படும் செலவை ஈட்டளிப்பு கோருவதற்கு உரிமை இல்லை.

(b) பிரிவு 6ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அண்டை வட்டாரத்தில் பள்ளி கிடைப்பதை உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்;

(c) நலிந்த பிரிவையும் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவையும் சேர்ந்த குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும், அவர்கள் எந்த காரணத்திற்காகவும் தங்கள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதிலிருந்து தடுக்கப்படாமல் இருப்பதையும் உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்;

(d) தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில், வகுத்துரைக்கப்படும் அத்தகைய வழிவகையில் அப்பகுதியில் வசிக்கும் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பற்றிய ஆவணங்களைப் பராமரிக்க வேண்டும்;

(e) தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்;

(f) பள்ளி கட்டிடம், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பொருள்கள் உள்ளிட்ட உள் கட்டுமானங்களை வழங்க வேண்டும்;

(g) பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்;

(h) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நெறிமுறைகளின்படி நல்ல, தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(i) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் உரிய காலத்தில் வகுக்கப்படுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(j) ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்.

(k) புலம் பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

(l) தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பள்ளிகளின் செயல்பாட்டை கண்காணிக்க வேண்டும்.

(m) கல்வி ஆண்டைத் தீர்மானிக்க வேண்டும்.

**பிரிவு 10. பெற்றோர் மற்றும் காப்பாளர் கடமை.–** தங்கள் குழந்தை அல்லது தங்கள் பொறுப்பில் உள்ள குழந்தை, நேர்விற்கேற்ப, அண்டை பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வி பெறுவதற்காக பள்ளியில் சேர்ப்பது அல்லது சேர்க்க வைப்பது என்பது ஒவ்வொரு பெற்றோர் அல்லது காப்பாளரின் கடமையாகும்.

**பிரிவு 11. உரிய அரசாங்கம் பள்ளிக்கு முந்தைய கல்வியை வழங்குதல்.–** 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை தொடக்க கல்வி பெற தயார்ப்படுத்துவதற்காகவும் 6 வயது நிறைவடையும் வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்க நிலை குழந்தைப் பருவ கவனிப்பு மற்றும் கல்வி கிடைக்கச் செய்வதற்காகவும் உரிய அரசாங்கம் அத்தகைய குழந்தைகளுக்கு இலவசமாக பள்ளிக்கு முந்தைய கல்வி வழங்குவதற்கு அவசியமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

* * * * * *

129

# அத்தியாயம் - 4

## பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள்

**பிரிவு 12. இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்குவதில் பள்ளியில் பொறுப்பு வரம்பு.–** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு பள்ளி,

(a) சேர்க்கப்படும் அனைத்து குழந்தைகளுக்கும் பிரிவு 2 கூறு (n) உட்கூறு (i) ல் குறித்துரைத்துள்ளபடி இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி வழங்க வேண்டும்.

(b) பிரிவு 2 கூறு (n) உட்கூறு (ii) ல் குறித்துரைத்துள்ளபடி, தனது வருடாந்திர தொடர் செலவு ஆகியவற்றுக்கு உட்பட்டு பெறப்படும் வருடாந்திர தொடர் உதவி அல்லது மான்யத்தில் குறைந்தது 25 விழுக்காடு வரை சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய தொடக்கக்கல்வி வழங்க வேண்டும்.

(c) பிரிவு 2 கூறு (n) உட்கூறு (iii) (iv) ல் குறித்துரைத்துள்ளபடி முதல் வகுப்பில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அண்டை பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த குழந்தைகளாக சேர்த்து அவர்களுக்கு தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும்.

மேலும் பிரிவு 2 கூறு (n) ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்விக்கு வகை செய்திடும் போது குழந்தைகளை சேர்த்துக் கொள்வது என்பதற்கு கூறுகள் (a) முதல் (c) பொருந்துவனவாகும்.

(2) பிரிவு 2 கூறு (n) உட்கூறு (iv) ல் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி பிரிவு (1) கூறு (c) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி வழங்குகிற பள்ளி, அரசாங்கத்தால் ஒரு குழந்தைக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவுத் தொகையை அல்லது குழந்தையிடமிருந்து வசூலிக்கப்பட்ட உண்மைத் தொகையை, இவற்றில் எது குறைவோ அந்தத் தொகையை, வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிவகைகளின்படி ஈட்டளிப்பு செய்யப்படும்.

வரம்புரையாக, அத்தகைய ஈட்டளிப்பானது, பிரிவு 2 கூறு (n) உட்கூறு (i) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு குழந்தைக்கு என நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் இருக்கக் கூடாது.

மேலும் வரம்புரையாக, இலவசமாகவோ அல்லது சலுகை விலையிலோ நிலம், கட்டடம், கல்விச் சாதனங்கள் அல்லது இதர வசதிகளை பெற்றுக் கொண்டதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்கியாக வேண்டிய கடப்பாடு கொண்ட ஒரு பள்ளி இருக்கிறவிடத்து, அந்தப் பள்ளி, அவ்வாறு இலவசக் கல்வி வழங்கியாக வேண்டிய அளவு வரையிலான தொகையை ஈட்டளிப்பு கோர முடியாது.

(3) ஒவ்வொரு பள்ளியும் உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு நேர்விற்கேற்ப, கோருகிற அத்தகைய தகவல்களை அளித்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு 2ன் கீழ் கூறப்பட்டுள்ள காலத்திற்குள் அளவுகோல்கள் மற்றும் தரங்களை நிறைவு செய்ய ஒரு பள்ளி தவறுகிறவிடத்து, பிரிவு 18 உட்பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள அதிகார அமைப்பு அந்த பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை உட்பிரிவு 3ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படி திரும்பப் பெற்றுக் கொள்ளும்.

(4) உட்பிரிவு 3ன் கீழ் அங்கீகாரம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து எந்தவொரு பள்ளியும் தொடர்ந்து செயல்படக் கூடாது.

(5) அங்கீகாரச் சான்று பெறாமல் ஒரு பள்ளியை நிறுவுகிற அல்லது நடத்துகிற எந்தவொரு நபரும், அல்லது அங்கீகாரம் திரும்ப கொள்ளப்பட்ட பிறகு தொடர்ந்த பள்ளியை நடத்துகிற எந்தவொரு நபரும், ஒரு லட்சம் ரூபாய் வரையில் தண்டனைத் தொகை விதிக்கப்படுவார் மற்றும் இந்த மீறல் தொடரும் நேர்வில் தொடரும் நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு 20. அட்டவணையை திருத்துவதற்கான அதிகாரம்.–**

மைய அரசாங்கம், அறிவிக்கை மூலமாக, எந்தவொரு அளவுகோல்கள் அல்லது தரங்களை சேர்த்தல் அல்லது நீக்குதல் மூலமாக அட்டவணையில் திருத்தம் செய்யலாம்.

**பிரிவு 21. பள்ளி நிர்வாகக் குழு.–**

(1) பிரிவு 2 கூறு (n) உட்கூறு (iv) ல் குறித்துரைக்கப்பட்டுள்ள பள்ளிகள் அல்லாத ஒரு பள்ளி, உள்ளாட்சி அதிகார அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அத்தகைய பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

வரம்புரையாக, அத்தகைய குழுவின் உறுப்பினர்களில் ¾ பங்கினர் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களாகவே இருக்க வேண்டும்.

மேலும் வரம்புரையாக, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகங்களையும் மற்றும் நலிந்த பிரிவுகளையும் சேர்ந்த பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்கு அக்குழுவில் விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

மென்மேலும் வரம்புரையாக, குழுவின் உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டினர் பெண்களாக இருக்க வேண்டும்.

(2) பள்ளி நிர்வாகக் குழு பின்வரும் செய்கடமைகளை மேற்கொள்ளும், அவையாவன:–

(a) பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்

(b) பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் பரிந்துரைத்தல்.

(c) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது வேறு ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் மான்யங்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும்

(d) வகுத்துரைக்கப்படும் அத்தகைய பிற செயற்பணிகளைச் செய்தல்

**பிரிவு 22. பள்ளி மேம்பாட்டுத் திட்டம்.–**

(1) பிரிவு 21 உட்பிரிவு (1)ன் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய வழிமுறையில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

(2) அவ்வாறு தயாரிக்கப்படும் பள்ளி மேம்பாட்டுத்திட்டமே சம்பந்தப்பட்ட உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் மானியம் ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையாக இருக்கும்.

**பிரிவு 23. ஆசிரியர்கள் நியமனத்திற்கான தகுதிகள் மற்றும் பணிவரையறைகளும் வரைக்கட்டுகளும்.—**

(1) மத்திய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு கல்வி அதிகார அமைப்பு விதித்துள்ள குறைந்தபட்ச தகுதிகள் உள்ள எந்த ஒரு நபரும் ஆசிரியராக நியமிக்கப்படத் தகுதி உள்ளவராவார்.

(2) ஒரு மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்குப் போதுமான நிறுவனங்கள் இல்லாதிருக்கிறவிடத்து அல்லது உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தகுதிகள் கொண்ட ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாத நிலையில், மத்திய அரசாங்கம் அவசியமெனக் கருதுமாயின் ஆசிரியர் நியமனத்திற்கான குறைந்தபட்சத் தகுதிகளை அதிகாரப்பூர்வ அறிவிக்கை மூலம் தளர்த்தி, அத்தகைய ஐந்தாண்டுகளுக்கு மிகாத காலத்தினை அறிக்கையில் குறித்துரைக்கலாம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகிறபோது உட்பிரிவு (1)ல் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகுதிகள் ஒரு ஆசிரியர் பெற்றிருக்காதபோது, அவர் ஐந்தாண்டுகளுக்கு மிகாத காலத்திற்குள் அத்தகைய குறைந்தபட்சத் தகுதிகளைப் பெற வேண்டும்.

(3) ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், படிகள் மற்றும் பணி வரையறைகளும், வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

**பிரிவு 24. ஆசிரியர்களின் கடமைகளும் குறை தீர்ப்பும்.—**

(1) பிரிவு 23 உட்பிரிவு (1) ன் கீழ் நியமிக்கப்படும் ஒரு ஆசிரியர் பின்வரும் கடமைகளைச் செய்திடல் வேண்டும்.

(a) பள்ளிக்குத் தொடர்ச்சியாகவும் உரிய நேரப்படியும் வருதல்.

(b) பிரிவு 29 உட்பிரிவு (2)ல் வகையங்களுக்கிணங்க பாடத்திட்டத்தை நடத்தி முடித்தல்.

(c) முழு பாடத்திட்டத்தையும் குறித்துரைக்கப்பட்ட கால அளவுக்குள் முடித்தல்.

(d) ஒவ்வொரு குழந்தையின் கற்றல் திறனையும் மதிப்பிடுதல் மற்றும் தேவைப்படுமானால் கூடுதல் பயிற்சி வழங்கி ஈடுசெய்தல்;

(e) பெற்றோர் மற்றும் காப்பாளர்களுடன் சந்திப்புக் கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி, குழந்தையின் தொடர்ச்சியான வருகை, கற்றல் திறன், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இதர பொருத்தமான தகவல்களை விளக்கியுரைத்தல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற பணிகளைச் செய்தல்.

(2) உட்பிரிவு (1) ல் குறித்துரைக்கப்பட்ட கடமைகளை ஒரு ஆசிரியர் செய்யத் தவறிடும்போது அவர்/அவளுக்கு பொருந்தக்கூடிய பணிவிதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

வரம்புரையாக, அத்தகைய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாக அத்தகைய ஆசிரியருக்கு கேட்கை நல்கிட வாய்ப்பு அளிக்கப்படும்.

(3) ஆசிரியருக்கு ஏதேனும் குறை இருக்குமானால் அது வகுத்துரைக்கப்படும் அத்தகைய வழிமுறையில் களையப்படும்.

**பிரிவு 25. மாணவர் ஆசிரியர் விகிதம்.—**

(1) இந்த சட்டம் நடைமுறைக்கு வர தொடங்கிய 6 மாதங்களுக்குள் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்—ஆசிரியர் விகிதம் பேணி வரப்படுதலை உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாணவர்—ஆசிரியர் விகிதத்தை பராமரிக்கும் நோக்கத்திற்காக ஒரு பள்ளியில் நியமிக்கப்படும் எந்தவொரு ஆசிரியரும் வேறு பள்ளியிலோ அல்லது அலுவலகத்திலோ பணியாற்றும்படி செய்யக்கூடாது, அல்லது பிரிவு 27ல் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிகள் அல்லாத கல்வி சாராத வேறு பணிகளுக்கு அனுப்புதல் கூடாது.

**பிரிவு 26. ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்புதல்.—**

உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பினால் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறுவப்பட்டு, உடமையாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிற அல்லது மான்யம் வழங்கப்படுகிற ஒரு பள்ளி தொடர்பான நியமன அதிகாரம் கொண்ட அமைப்பு, அந்த பள்ளியில் காலியாகும் ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட மொத்த ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கையில் 10 விழுக்காட்டிற்கு மேற்படாது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**பிரிவு 27. கல்விசாரா நோக்கங்களுக்கு ஆசிரியர்களை அனுப்ப தடை.—**

மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரண பணிகள் அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ மாநில சட்டமன்றத்துக்கோ நாடாளுமன்றத்துக்கோ நடைபெறும் தேர்தல்கள் நேர்விற்கேற்ப தொடர்பான பணிகள் அல்லா வேறு கல்வி சாராத எந்த நோக்கத்திற்காகவும் எந்த ஒரு ஆசிரியரும் அனுப்பப்பட கூடாது.

**பிரிவு 28. ஆசிரியர்கள் தனிப்பட்ட தனி போதனை செய்ய தடை.—**

எந்தவொரு ஆசிரியரும் தனிப்பட்ட தனி போதனை அல்லது தனிப்பட்ட பயிற்றுவிப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.

* * * * * *

# அத்தியாயம் - 5

## பாடத்திட்டமும் தொடக்கக்கல்வியை முடித்தலும்

**பிரிவு 29. பாடத்திட்டம் மற்றும் மதிப்பீடு நடைமுறை.–**

(1) உரிய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி குறித்துரைக்கப்படுகிற, ஒரு கல்வி அதிகார அமைப்பினால் தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டத்தையும் மதிப்பீடு நடைமுறையையும் விதிக்கப்படும்.

(2) உட்பிரிவு (1)ன் கீழ் பாடத்திட்டத்தையும் மதிப்பீடு நடைமுறையையும் வகுக்கிற கல்வித்துறை அதிகார அமைப்பு பின்வரும் அம்சங்களை கருத்தில் கொள்ளும்; அவையாவன:–

(a) அரசமைப்பு சாசனத்தில் கூறப்பட்டுள்ள மாண்புகளுக்கு ஒத்திசைந்ததாக இருத்தல்.

(b) குழந்தையின் ஒட்டுமொத்த மேம்பாடு.

(c) குழந்தையின் அறிவு ஆற்றல் மற்றும் திறனை வளர்த்தல்.

(d) குழந்தைக்கு இணக்கமான முறையிலும், குழந்தையை மையப்படுத்திய முறையிலும் செயல்வழி கற்றல், கண்டறிதல் மற்றும் ஆராய்ந்தறிதல் ஆகியவற்றை வளர்த்தல்.

(e) பயிற்று மொழி என்பது இயன்ற வரையில் குழந்தையின் தாய்மொழியிலேயே இருத்தல்.

(f) குழந்தை அச்சமின்றியும் மன உளைச்சல் இன்றியும் பதட்டமின்றியும் பயில செய்தல், குழந்தை தன் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த உதவுதல் மற்றும்

(g) குழந்தையின் புரிந்து கொள்ளும் மற்றும் அதனை செயல்படுத்தும் திறன் ஆகியவற்றை விரிவாகவும் தொடர்ச்சியாகவும் மதிப்பிடுதல்.

**பிரிவு 30. தேர்வு மற்றும் படிப்பை முடிப்பதற்கான சான்றிதழ்.–**

(1) தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் எந்தவொரு குழந்தையும் எந்தவொரு வாரிய (போர்டு) தேர்வையும் எழுதி தேர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை.

(2) தொடக்கக் கல்வியை முடிக்கிற எந்தவொரு குழந்தைக்கும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய வடிவத்திலும் மற்றும் அத்தகைய முறையிலும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

* * * * * *

# அத்தியாயம் - 6

## குழந்தை உரிமை பாதுகாப்பு

**பிரிவு 31. குழந்தையின் கல்விக்கான உரிமை கண்காணித்தல்.—**

(1) குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005ன் பிரிவு (3)ன் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அல்லது பிரிவு 17ன்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அவைகளுக்கு அந்தச் சட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட செய்கடமைகளுடன் கூடுதலாக பின்வரும் செயற்பணிகளைச் செய்திடுவர், அவையாவன:—

(a) இந்த சட்டத்தால் அல்லது இந்த சட்டத்தின் கீழ் உரிமைகளை பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பரிசீலித்தல், மறு ஆய்வு செய்தல், அவற்றை பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

(b) குழந்தையின் இலவச கட்டாயக் கல்வி தொடர்பான புகார்கள் குறித்து விசாரித்தல் மற்றும்

(c) குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டத்தின் 15 மற்றும் 24 வது பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு உரிய அவசியமான நடவடிக்கைகள் எடுத்தல்.

(2) சொல்லப்பட்ட ஆணையங்கள் உட்பிரிவு (1)ன் கூறு (c) ன் கீழ் குழந்தையின் இலவச கட்டாயக் கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சனையையும் விசாரிக்கிற போது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 24ன் கீழ் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களை கொண்டிருக்கும்.

(3) ஒரு மாநிலத்தில் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்படாதிருக்கிறவிடத்து, உரிய மாநில அரசாங்கமானது உட்பிரிவு (1) கூறுகள் (a) முதல் (c) குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வகுத்துரைக்கப்படும் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்குட்பட்டு அத்தகைய அதிகார ஆயத்தை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

**பிரிவு 32. குறை தீர்வு.—**

(1) பிரிவு 31ல் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குழந்தையின் உரிமை தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் குறை இருக்குமானால் அவர் அதனை ஆள்வரை கொண்ட உள்ளாட்சி அதிகார அமைப்புக்கு எழுத்துருவில் புகாராக அளிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)ன் கீழ் புகாரை பெற்றுக்கொண்டபின், உள்ளாட்சி அதிகார அமைப்பு நிர்வாகமானது, சம்பந்தப்பட்டவர் தரப்பினர் வாதத்தை கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு வழங்கிய பின்பு முன்பு மூன்று மாத காலங்களுக்குள் இது குறித்து முடிவு செய்யும்.

(3) உள்ளாட்சி அதிகார அமைப்பின் முடிவால் பாதிப்புற்ற எந்தவொரு நபரும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு அல்லது பிரிவு 31 உட்பிரிவு (3)ன் கீழ் வகுத்துரைக்கும் அதிகார அமைப்பிற்கு நேர்விற்கேற்ப மேல்முறையீடு செய்யலாம்.

(4) உட்பிரிவு (3)ன் கீழ் செய்யப்படுகிற மேல்முறையீடு தொடர்பாக மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அல்லது பிரிவு 31 உட்பிரிவு (3)ல் வகுத்துரைக்கப்படும் அதிகார அமைப்பு நேர்விற்கேற்ப பிரிவு 3 உட்பிரிவு (1) கூறு (C) ன் கீழ் முடிவு செய்யும்.

## பிரிவு 33. தேசிய ஆலோசனைக் குழு அமைத்தல்.–

(1) மத்திய அரசாங்கம் அதிகாரப்பூர்வ அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம், தொடக்கக் கல்வி துறையிலும் குழந்தை மேம்பாட்டிலும் அறிவும் நடைமுறை அனுபவமும் உள்ள நபர்களில் இருந்து மைய அரசு பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையில் 15 பேர்களுக்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேசிய ஆலோசனைக் குழுவை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) தேசிய ஆலோசனைக் குழுவின் செயற்பணி சட்டத்தின் காப்புரைகளை திறம்பட பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவதாகும்.

(3) தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், படிகள் மற்றும் நியமனத்திற்கான வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

## பிரிவு 34. மாநில ஆலோசனைக் குழு அமைத்தல்.–

(1) மாநில அரசாங்கம் அதிகாரப்பூர்வ அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம், தொடக்கக் கல்வி துறையிலும் குழந்தை மேம்பாட்டிலும் அறிவும் நடைமுறை அனுபவமும் உள்ள நபர்களில் இருந்து மாநில அரசு பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையில் 15 பேர்களுக்கு மிகாத உறுப்பினர்களை கொண்ட ஒரு மாநிலக் குழுவை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) மாநில ஆலோசனைக் குழுவின் செயற்பணி சட்டத்தின் காப்புரைகளை திறம்பட பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை மாநில அரசாங்கத்திற்கு வழங்குவதாகும்.

(3) மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், படிகள் மற்றும் நியமனத்திற்கான வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படும் அத்தகையவாறு முடிவு இருத்தல் வேண்டும்.

* * * * * *

## 3. கல்வி உரிமை

# அத்தியாயம் - 7

## பல்வகை

**பிரிவு 35. பணிப்புரைகளை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.—**

(1) இந்தச் சட்டத்தின் வகையங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக உரிய அரசாங்கத்திற்கு அல்லது உள்ளாட்சி நிர்வாகத்திற்கு நேர்விற்கேற்ப தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய வழிகாட்டுதல்களை மத்திய அரசாங்கம் பிறப்பிக்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உள்ளாட்சி ஆதிகார அமைப்பிற்கு அல்லது பள்ளி நிர்வாக குழுவிற்கு நேர்விற்கேற்ப தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய வழிகாட்டுதல்களையும் ஆணைகளையும் உரிய அரசாங்கம் பிறப்பிக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின் வகையங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பள்ளி நிர்வாக குழுவிற்கு உரிய வழிகாட்டல்களையும் ஆணைகளையும் உள்ளாட்சி அதிகார அமைப்பு பிறப்பிக்கலாம்.

**பிரிவு 36. வழக்கு தொடுப்பதற்கான முன் ஒப்பளிப்பு.—**

உரிய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு அதிகாரியின் முன் ஒப்பளிப்பு இன்றி பிரிவு—13, உட்பிரிவு (2), பிரிவு 18 உட்பிரிவு (5) மற்றும் பிரிவு 19 உட்பிரிவு (5) கீழ் தண்டிக்கத்தக்க எந்தவொரு குற்றத்திற்காகவும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படுதல் கூடாது.

**பிரிவு 37. நல்ல எண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.—**

இந்தச் சட்டத்தினை ஒட்டி அல்லது அதன்படி செய்யப்பட்ட, அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்பாணையினை ஒட்டி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், மைய அரசு, மாநில அரசு, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு தேசிய ஆணையம், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மாநில ஆணையம், உள்ளாட்சி நிர்வாக அமைப்பு, பள்ளி நிர்வாகக் குழு அல்லது நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

**பிரிவு 38. விதிகளைச் செய்வதற்கு உரிய அரசாங்கத்தின் அதிகாரம்.—**

(1) இந்தச் சட்டத்தின் வகையங்களை செயல்படுத்துவதற்காக உரிய அரசாங்கமானது அதிகாரப்பூர்வ அறிவிக்கையின் மூலம் விதிகளை இயற்றலாம்.

(2) குறிப்பாகவும் மற்றும் முன் சென்ற அதிகாரங்களுக்கு குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் கீழ்க்கண்ட பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் ஒன்றிற்கும் வகை செய்திடும், அவையாவன:—

(a) பிரிவு 4க்கான முதல் காப்புரையின் கீழ் சிறப்பு பயிற்சி அளிப்பதற்கான நடைமுறை மற்றும் கால அளவு;

(b) பிரிவு 6ன் கீழ் அண்டைப் பகுதியில் பள்ளி அமைப்பதற்கான வட்டார மற்றும் எல்லைகள்;

(c) பிரிவு 9 கூறு (d) ன் கீழ், 14 வயது வரையுள்ள குழந்தைகளின் ஆவணங்களை பராமரிக்கும் நடைமுறை;

(d) பிரிவு 12 உட்பிரிவு (2)ன் கீழ் செலவு தொகை ஈட்டளிப்பிற்கான நடைமுறையின் அளவு;

(e) பிரிவு 14 உட்பிரிவு (1)ன் கீழ் குழந்தையின் வயதை தீர்மானிப்பதற்கான வேறு எந்த ஆவணமும்.

(f) பள்ளியில் சேர்ப்பதற்கான கால நீட்டிப்பும் பிரிவு 15ன் கீழ், நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு பின் குழந்தை சேர்க்கப்பட்டிருக்குமானால் படிப்பை முடிப்பதற்கான நடைமுறை.

(g) பிரிவு 18 உட்பிரிவு (2)ன் கீழ் அங்கீகார சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வேண்டிய அதிகார அமைப்பு, படிவம் மற்றும் நடைமுறை.

(h) பிரிவு 18 உட்பிரிவு (2)ன் கீழ் அங்கீகாரச் சான்றிதழ் வழங்குவதற்கு படிவம், கால அளவு, நடைமுறை மற்றும் நிபந்தனைகள்.

(i) பிரிவு 18 உட்பிரிவு (3)ன் 2வது கூர்ப்புரையின் கீழ் விசாரணையில் சம்பந்தப்பட்ட தரப்பின் வாதத்தை கேட்க வாய்ப்பளிக்கப்படுவதற்கான நடைமுறை.

(j) பிரிவு 21 உட்பிரிவு (2) கூறு (d) ன் கீழ் பள்ளி நிர்வாக குழு மேற்கொள்ள வேண்டிய இதர செயற்பணிகள்.

(k) பிரிவு 22 உட்பிரிவு (1)ன் கீழ் பள்ளி மேம்பாட்டு திட்டம் தயாரிப்பதற்கான நடைமுறைகள்.

(l) பிரிவு 23 உட்பிரிவு (3)ன் கீழ் ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் மற்றும் அவரது பணி வரையறைகளும் வரைக்கட்டுகளும்.

(m) பிரிவு 14 உட்பிரிவு (1) கூறு (f) ன் கீழ் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள்.

(n) பிரிவு 24 உட்பிரிவு (3)ன் கீழ் ஆசிரியர்களின் குறை தீர்வு நடைமுறைகள்.

(o) பிரிவு 30 உட்பிரிவு (2)ன் கீழ் தொடக்கக் கல்வி நிறைவடையும் போது வழங்கப்பட வேண்டிய சான்றிதழுக்கான வடிவமும் நடைமுறையும்.

(p) பிரிவு 31 உட்பிரிவு (3)ன் கீழ் அதிகார அமைப்பு நிறுவுதல் மற்றும் வரம்புகளும் நிபந்தனைகளும்.

(q) பிரிவு 33 உட்பிரிவு (3)ன் கீழ் தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கான படிகள் மற்றும் நியமனத்திற்கான வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் மற்றும்

(r) பிரிவு 34 உட்பிரிவு (3)ன் கீழ் மாநில ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கான படிகள் மற்றும் நியமனத்திற்கான வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் நியமன நிபந்தனைகள்.

(3) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும் மற்றும் மைய அரசினால் பிரிவுகள் 20 மற்றும் 23ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் எதுவும் இல்லாது போகும். எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அதற்கு முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் மாநில அரசினால் செய்யப்பட்ட விதி மற்றும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது இயற்றப்பட்டவுடன் பின்னர் மாநில சட்டப் பேரவை முன் வைக்கப்பட்ட வேண்டும்.

******

# (18) ~~34.~~ சுரங்கங்களும், கனிமங்களும்

பார்வை :-

1. சுரங்கங்கள்-கனிமங்கள்((முறைப்படுத்துதல் மேம்பாடு) சட்டம் 1957.
2. தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள், 1959
3. தமிழ்நாடு கனிமங்கள் சலுகை விதிகள், 1960

I **பெருங்கனிமங்கள்** :- (Major Minerals)

(தமிழ்நாடு கனிமங்கள் சலுகை விதிகள், 1960) (i) சுண்ணாம்புக்கல் (ii) குவார்ட்ஸ் (iii)feld spar (white yellow) (iv) ஜிப்சம் (v) fire clay (vi) soap stonc (vii) கார்னட் மணல் (viii) marl (ix) Biotite (Black flaky)(x) ortho clase (light pink flash red) (xi) micro cline (green) (xii) Ilmenite (xiii) Rvtile (xiv) Zircon முதலியவை ஆகும். இவைகள் பொதுவாக சிமெண்ட் போன்ற தொழிற் நோக்கங்களுக்கு பயன்படும் கனிமங்கள் ஆகும்.

**விண்ணப்பிக்கும் முறை**

குத்தகை விண்ணப்பத்தை 3 பிரதிகளில் கீழ்கண்ட ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

i. விண்ணப்பக்கட்டணம் ரூ.2500.(செலான்மூலம்)
ii. ஆரம்ப செலவுகள் கட்டணம் ரூ.1000/- (செலான் மூலம்)
iii. குவாரி செய்யவுள்ள ஸ்தல விவர அறிக்கை
iv. முன் குவாரி குத்தகை நிலுவை பாக்கி இல்லை என்பதற்கான சான்றுருதி
v. ஏற்கனவே குத்தகை உரிமங்கள் உள்ளதற்கான சான்றுருதி
vi. வருமான வரி பாக்கி இல்லை என்பதற்கான சான்றுருதி
vii. கிராம வரைபடம், புலப்படம், 'அ' பதிவேடு மற்றும் கிராம அடங்கல்- முதலியவற்றின் நகல்கள்
viii. கனிமத்தின் Chemical Analysis report
ix. (வங்கி) சால்வன்சி சான்று
x. கனிமத் திட்ட வரைவு விவர அறிக்கை

விசாரணை

வட்டாட்சியர் புலத் தணிக்கை மற்றும் விசாரணை மேற்கொண்டு நில இருப்பு அறிக்கையை (land availability report) மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைப்பார். பொ.ப.துறை /ஊரக வளர்ச்சித்துறை/ வனத்துறை

அலுவலர் தங்கள் துறை சம்பந்தப்பட்ட நிலங்களைப் பொருத்து, குத்தகைக்கான N.O.C. – ஐ வழங்குவர். மேலும் I.B.M. (Indian Beareu of Mines) மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய முன் ஒப்புதலும் பெறப்பட வேண்டும்.

## குத்தகை உரிமம் வழங்கும் அலுவலர்

பெருங்கனிம குத்தகைக்கான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சியரால், சென்னை,புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையருக்கு பரிந்துரை செய்யப்படும். அதன்பேரில் விதி 22(4)ன்படி) கனிமத்திட்ட வரைவினை (mining plan) ஆணையரால் குத்தகை தாரரிடம் கேட்டு பெறப்பட்டு ஒப்புதல் செய்யப்படும். பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களில் உரிமம் மற்றும் குத்தகை வழங்கும் அதிகாரம் அரசிற்கு (தொழிற்துறை) உண்டு.

## குத்தகை நிபந்தனைகள்

1. நீர் நிலைகளின் கரைகள் பாதிக்காத வகையில் கனிமம் வெட்டிக் கொள்ளப்படவேண்டும்.
2. உரிம நிபந்தனையில் குறிப்பிட்ட ஆழம் வரை கனிமம் வெட்டிக் கொள்ளலாம்

குவாரி ஸ்தலத்திற்கும், கீழ்கண்ட இடங்களுக்கும் இடையே அதனெதிரில் குறிப்பிட்ட பாதுகாப்பு தூரம்(Safety Distance) அனுசரிக்கப்படவேண்டும்.

| | பாதுகாப்பு தூரம் | (மீட்டரில்) |
|---|---|---|
| 1. | கால்பாதை .......... | 10 |
| 2. | கிராம சாலை...... | 10 |
| 3. | மின்பாதை......... (Powerlines) | 50 |
| 4. | நீர்நிலை கரை......... | 50 |
| 5. | பண்ணை வீடுகள்........ | 50 |
| 6. | பட்டா நிலங்கள்........ | 7.5 |
| 7. | இருப்புப்பாதை ... (விதி 27(H)) | 50 |
| 8. | புராதனச் சின்னங்கள்... | 300 |
| 9. | ஆற்றுப் பாலம் ............ | 500 |
| 10. | நீர் வழங்கும் நிலையம்..... | 500 |

11. நீர் உந்து நிலையம் ..... 500
12. TWAD – மேல் நிலை நீர் தேக்கத்தொட்டிகள் .. 500
13. குடியிருப்புப் பகுதி ...... 300 (விதி .36-1-A)

iv மாசு கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகள் கடைபிடித்தல் (விதி 36-1A)

v. வரைபடத்தில் குறிப்பிட்டபடி குவாரிஸ்தலத்தைச் சுற்றி எல்லைக் கற்கள் நிறுவப்படவேண்டும் (விதி-36-4)

vi வெட்டி எடுக்கப்படும் கனிமத்திற்கு குத்தகைதாரர் சரியான கணக்குகள் பராமரிக்கவேண்டும். (விதி-27(i))

vii Commerical mining strictly Prohibited within 10kms of Eco - Sensitive Areas such as natural falls, wild life sanctuary, western ghats etc., W.P. (MD) 10097/13 dt : 28.04.2014 [2014 (2)CWC 216)

குத்தகை விடப்படும் பரப்பு மற்றும் குத்தகைக் காலம் :-

| | | |
|---|---|---|
| | | ஹெக்டேர் |
| பரப்பு : | அதிகபட்சம் ........ | 50.00.0 |
| | குறைந்தபட்சம் | 1.00.0 |
| குத்தகைக் | காலம் | வருடங்கள் |
| | அதிகபட்சம் | 30 |
| | குறைந்தபட்சம் | 20 |

**மேல்முறையீடு**

அரசு/ ஆணையர் ஆணையை எதிர்த்து 3 மாதங்களுக்குள் மத்திய அரசுக்கு (படிவம்-N-ல்) மேல்முறையீடு செய்யலாம்.

**குத்தகை புதுப்பித்தல்**

குத்தகை உரிமகாலம், முடிவதற்கு 12 மாதங்களுக்கு முன்பாக புதுப்பித்தல் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (விதி -26)

**குத்தகை காலம் காலாவதி ஆதல்**

குத்தகை ஒப்பந்தம் (Lease deed) செய்து கொண்ட பிறகு, 2 வருடங்களுக்குள் கனிமம் வெட்டும் பணி தொடங்கப்படாவிடில், குத்தகை காலாவதி ஆனதாக அரசினரால் முடிவு செய்யப்படும் (Rule-28-(1)).

## II சிறுகனிமங்கள் (Minor Minerels)

(தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள், 1959)

1.அரளை 2. கிராவல் (செம்மண்) 3. மண் 4. கலர் கிரானைட் 5. Black granite 6. கங்கர் 7. மணல் 8. கூழாங்கற்கள் முதலியவை சிறு கனிமங்கள் ஆகும். சிறுகனிமங்கள் பொதுவாக கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் போன்றவைகள் அமைக்க பயன்படுகின்றன.

**விண்ணப்பிக்கத் தேவையானவை:-**

1. விண்ணப்பக்கட்டணம் ரூ. 1500.00
2. Pan card
3. வருமான வரித்துறைக்கு செலுத்த வேண்டிய பாக்கி எதுவும் இல்லை என்பதற்கான சான்றுருதி
4. கிராமக்கணக்குகள்
5. பட்டா நிலங்களைப் பொருத்து, பட்டாதாரர், V.A.O மற்றும் பொதுமக்கள் சம்மதம்.
6. கனிமக்குத்தகை செலுத்தவேண்டிய நிலுவை இல்லை என்பதற்கான சான்று (விதி-3B)
7. Earnest money Deposit ஆக ரூ. 25000/- ற்கான டிமாண்ட் டிராப்ட்

**பட்டாதாரர் சொந்தநிலத்தில் கனிமம் வெட்டி எடுத்துக் கொள்ளுதல்:-**

தன்சொந்த நல்லெண்ண வீட்டு (or) விவசாய நோக்கத்திற்கு பட்டாதாரர், சிறிய அளவில் வெட்டி எடுத்துக்கொள்ளலாம் (விதி:17) அதிக அளவில் வெட்டி எடுத்துக்கொள்ள விதி 18ன் படி இணைப்பு-II-ல் கண்ட சீனியரேஜ் கட்டணம் (or) Dead Rent – ஐ செலுத்த வேண்டும்.

**பட்டா நிலங்களில் கனிம உரிமக்குத்தகை பெறும் நடைமுறை:-**

1. விண்ணப்பக்கட்டணம் ரூ.1500.00
2. பட்டாதாரரின் சம்மதம்.
3. கனிம குத்தகை பாக்கிஇல்லை என்பதற்கான சான்று
4. கனிமப்பகுதியைக் காட்டும் வரைபடம்

**செங்கற் சூளைகள் (விதி 19(2)(a))**

செங்கற்சூளைக்குத் தேவையான மண்எடுக்க, மாவட்ட ஆட்சியரிடம், குவாரி குத்தகை உரிமம் பெறப்படவேண்டும்.

## செங்கற் சூளைக்கு செங்கல் மண் தோண்டி எடுப்பதற்காக நடைமுறை

பார்வை : -

1) 1959 -ம் வருட தமிழ்நாடு சிறுகனிமங்கள் சலுகை விதிகள் விதி 19-2

2) அரசு ஆணை 106 தொழில் (MMC 2) துறை நாள் 24.12.2002

3) அரசு ஆணை (பலவகை) 79 தொழில் (MMC 2) துறை நாள் 04.04.2017

**விண்ணப்பம் :-**

செங்கல் தயாரிப்பவர், செம்மண் தோண்டி எடுப்பதற்கான விண்ணப்பத்தை படிவம் 1ல் (Appendix IV - A) சேம்பற் சூளையாக இருந்தால் பதிவுக்கட்டணமாக ரூ.3000/- ஐயும். நாட்டு செங்கற் சூளையாக இருந்தால். பதிவுக்கட்டணமாக ரூ.300/- செலுத்தி கருவூல செலுத்து செலானுடன் தாக்கல் செய்தால் (படிவம் V ல் Appendix IV - A) மாவட்ட ஆட்சியரால் பதிவுச்சான்றிதழ் (Certificate of Registration) வழங்கப்படும். அந்த பதிவுச் சான்றிதழ் 3 வருடத்திற்கு ஒரு முறை 50% பதிவுக்கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.

செங்கல் தயாரிக்கும் அலகு ஒவ்வொன்றும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட மேற்கண்ட பதிவுச் சான்றிதழ் நகலுடன் நிலத்தின் பட்டதாரரின் இசைவுக் கடிதம், திரும்ப செலுத்தத் தகாத விண்ணப்பக் கட்டணம் ரூ. 1500/- மற்றும் கீழ் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் செங்கல் கனிம வருடக் கட்டணம் கருவூலத்தில் செலுத்து சீட்டு மூலம் செலுத்தி விண்ணப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| i | 16 உள்ளறைகள் கொண்ட சேம்பர் செங்கற் சூளைக்கு | ரூ. 60,000/- ஒரு சூளைக்கு ஒரு வருடம் |
| ii | 17 உள்ளறைகள் ஆனால் 26 உள்ளறைகளுக்கு மேற்படாமல் | ரூ. 75,000/- ஒரு சூளைக்கு ஒரு வருடம் |
| iii | 27 உள்ளறைகள் மற்றும் அதற்கு மேற்பட்டு | ரூ. 90,000/- ஒரு சூளைக்கு ஒரு வருடம் |
| iv | 15 சுடு அடுப்புகள் கொண்ட நாட்டு செங்கற் சூளைக்கு | ரூ. 10,000/- ஒரு சூளைக்கு ஒரு வருடம் |
| v | 15 சுடு அடுப்புகளுக்கு மேற்பட்ட நாட்டு செங்கற் சூளைக்கு | ரூ. 12,000/- ஒரு சூளைக்கு ஒரு வருடம் |

மேற்கண்டபடி மண் தோண்ட எடுப்பதற்கான விண்ணப்பம் வரப்பெற்றவுடன், ஆட்சேபணை ஏதும் இல்லையெனில் மாவட்ட ஆட்சியர் விண்ணப்பதாரருக்கு தோண்டியடுக்க அனுமதி வழங்கலாம். அனுமதியானது கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இருக்கும்.

**செங்கற் சூளை நிபந்தனைகள் : -**

i மண் தோண்டியெடுத்தல் தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அனுமதி வைத்திருப்பவர், செங்கல் தயாரிக்க மண் தோண்டியெடுக்கப்படவுள்ள பட்டா நிலங்களின் விவரங்களை, புல எண், வாரியாக, மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க வேண்டும்.

ii தோண்டியெடுப்பதானது மாவட்ட ஆட்சியரால் குறித்துரைக்கப்படும் அனுகூலமான ஆழம் வரையில் மேற்கொள்ளப்படும். ஆதனால், நிலமானது சாகுபடிக்கு ஏற்ற வகையில் கொண்டுவரப்படும். கைவிடப்பட்ட பள்ளங்களில் வேலியோ அல்லது மண் நிரப்பியோ வைக்கவேண்டும்.

iii அண்டை நில உரிமையாளர்களின் நலன் பாதிக்காத வகையில் தோண்டியெடுத்தல் மேற்கொள்ளப்படும்.

iv கிராமசாலை, வண்டிப்பாதை, மற்றும் நீர் வழிப் பாதையிலிருந்து 10 மீட்டருக்கு பாதுகாப்பான தூர இடைவெளி பேணி வரப்படுதல் வேண்டும். நெடுஞ்சாலை மற்றும் புகை வண்டி இருப்புப் பாதையிலிருந்து 50 மீட்டருக்கு பாதுகாப்பான தூர இடைவெளி இருத்தல் வேண்டும்.

v மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி கிடைத்த 15 நாட்களுக்குள் ஒப்பந்தம் ஒன்று, நீதிசாரா முத்திரைத்தாளில், நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

vi ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடம் வரை அனுமதி செல்லத்தக்கதாகும்.

vii தோண்டி எடுக்கப்பட்ட மண், செங்கல் சூளைக்கு செல்வழி அனுமதிச் சீட்டுடன் (Way Permit) கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

viii அனுமதி வைத்திருப்பவர் செங்கல் மண் எடுக்கப்பட்டது மற்றும் கொண்டு செல்லப்பட்டது பற்றி சரியான கணக்கு விவரங்களை வைத்து வருதல் வேண்டும். வேஸ்ட் மண்ணை, பட்டா நிலத்திற்குள் கொட்டி வைக்கவேண்டும். சம்பந்தப்பட்ட நிலங்களில் விபத்து சம்பவம் ஏற்பட்டாலோ அல்லது வேறு புதிய கனிமம் கண்டெடுத்தாலோ அதைப்பற்றி மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க வேண்டும்.

ix மேற்கண்ட நிபந்தனைகள் எதனையும் அனுமதி வைத்திருப்பவர் மீறுகிற நேர்வில், விதிகளில் சொல்லப்பட்ட தண்டனை வகையகங்கள் பொருந்தும், (Penal Provisions in the Said Rules Shall apply).

**குத்தகை/பர்மிட் வழங்கும் அலுவலர்கள்**

மாவட்ட ஆட்சியர் குத்தகை உரிமம் வழங்கும் அலுவலர் ஆவார் (விதி-8 மற்றும் 19). கிரேனைட் குத்தகை உரிமம் பெற மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்யும் அலுவலர். அரசினரால் குத்தகை உரிமம் வழங்கப்படும். (விதி19(A)). ஒதுக்கக் காட்டில் D.F.O குத்தகை உரிமம் வழங்கும் அலுவலர். அரசு ஆணை 110 தொழிற்துறை நாள் : 6.7.2005-படி மணல்குவாரி உரிமம் P.W.D.க்கு வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு உண்டு.

**நல்லெண்ண வீட்டு மற்றும் விவசாய நோக்கத்திற்கு பொதுமக்கள் குவாரி செய்து கொள்ளுதல் :-** (விதி 6 மற்றும் 12)

ஒரே கிராமத்தில் (or) பக்கத்து கிராமத்தில், குவாரி ஸ்தலமும், (or) நிலமும் இருந்தால், பொதுமக்கள் நல்லெண்ண உள்ளவர் பயன்பாட்டிற்கு மற்றும் விவசாய காரியத்திற்கு கட்டணம் ஏதுமின்றி சிறிய அளவில் இலவசமாக குவாரி செய்து கொள்ளலாம். 800 மாட்டு வண்டிகளுக்கு மேல், குவாரி செய்து கொள்வதென்றால், சீனியரேஜ் கட்டணம் செலுத்த வேண்டும்.

**அரசு காரியத்திற்கு குவாரி செய்து கொள்ளுதல் (விதி-7)**

குறிப்பிட்ட அரசு காரியத்திற்கு குவாரி செய்து கொள்ளலாம். ஆனால் அந்த வேலையின் எஸ்டிமேட்டில், குவாரி பொருள் மதிப்பு சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஒப்பந்தக்காரர் ஆதாய நோக்கில் கனிமம் எடுத்தால், அதற்கான சீனியரேஜ் கட்டணம் செலுத்தவேண்டும்.

**அரசு புறம்போக்குகளில் கனிமம் பொதுஏலம் மற்றும் டெண்டரில் எடுத்தல்.**

விதி-8ன்படி, அறிவிக்கை செய்யப்பட்ட குவாரிகளில், பொது ஏலம் விடப்பட்டு, அதிகத்தொகைக்கு ஏலம் கேட்பவர் பெயரில் மாவட்ட ஆட்சியரால் ஏலம் உறுதிசெய்யப்படும்.

**சுயஉதவிக் குழுக்களுக்கு கனிமக்குத்தகை வழங்குதல் (விதி-8(10)A)**

பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு,முன்னுரிமை அடிப்படையில், அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக குத்தகை உரிமம் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது அதற்கான விண்ணப்பக்கட்டணம் ரூ.500,; குத்தகைக் காலம் 5 வருடங்கள் மற்றும் சொசைட்டி பெயரில் குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு கல்குவாரி உரிமம் மட்டும் வழங்கப்படுகிறது. அவர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள்

மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக்கொண்ட கீழ்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய சிறப்புக் கமிட்டியின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

1. மாவட்ட ஊராட்சித்தலைவர்
2. ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர்
3. திட்ட அலுவலர் D.R.D.A.
4. உதவி இயக்குநர் (கனிமங்கள்)

**பட்டா நிலங்களில் கனிமம் எடுத்துக் கொள்ளும் குத்தகை உரிமம் வழங்கல் (விதி-19)**

பொதுமக்கள் ஆட்சேபணை இல்லையெனில் 5 வருடங்கள் வரை, பட்டா நிலங்களில் கனிமம் எடுத்துக்கொள்ள மாவட்ட ஆட்சியரால், குத்தகை அனுமதி வழங்கலாம்.

**தனியார்களுக்கு கிரானைட் கனிமக் குத்தகை வழங்குதல் : (விதி 8A) நடைமுறை**

1. கிரானைட் குத்தகை உரிமம் அரசினரால் வழங்கப் படுகிறது.
2. அதிகபட்சம் 30 வருடங்களுக்கும், குறைந்தபட்சம் 20 வருடங்களுக்கும் குத்தகைக்கு வழங்கப்படுகிறது.
3. குறைந்தது 1.00.0 ஹெக்டேர் பரப்பிற்கும் அதிகபட்சம் 50.00.0 ஹெக்டேர் பரப்பிற்கும் அனுமதிக்கப்படுகிறது.
4. விண்ணப்பக் கட்டணம் ரூ.5000/-
5. D.D. for Rs.1,00,000/- as earnest money deposit.
6. விண்ணப்பதாரர் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள்
   i. ஏற்கனவே விண்ணப்பதாரருக்கு குவாரிகள் உள்ள தற்கான சான்றாவணம்
   ii. குத்தகை பாக்கித் தொகை இல்லை என்பதற்கான சான்று
   iii. வருமான வரிபாக்கி இல்லை என்பதற்கான சான்று
   iv. சொத்து மதிப்பு சான்று
   v. கிராமக் கணக்கு நகல்கள் மற்றும் புலப்படம்
7. அரசிடமிருந்து ஏற்புக் கடிதம் வந்ததிலிருந்து 2 வருடங்களுக்குள் granite cutting மற்றும் Polishing Industry- நிறுவ வேண்டும்.
8. புவியியல் சுரங்கத்துறை ஆணையரின் ஒப்புதலுடன் கூடிய Mining plan- ஐ அரசின் ஆணைபெற தாக்கல் செய்ய வேண்டும்.
9. சுற்றுச் சூழல் துறை அங்கீகாரம் (Environmental Clearance) பெற்று அரசின் ஒப்புதலுக்கு அனுப்பவேண்டும்

10. அரசின் ஆணைக்குப்பின், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் (Pollution Control Board) இசைவு பெறவேண்டும்.

11. சுற்றுச்சூழல் துறை அங்கீகாரம், அரசு ஆணை மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவு அடிப்படையில், மாவட்ட ஆட்சியரால் குத்தகை ஒப்பந்தமுறி (Lease Deed) பதிவு செய்து தரப்படும். அதன்பின் குவாரி பணிதுவங்கலாம்.

**மேல்முறையீடுகள்**

| வ. எண | விதி | குத்தகை உத்தரவிடும் அலுவலர் | மேல்முறையீட்டு அலுவலர் | முறையீட்டு காலம் (நாள்) | இரண்டாவது முறையீட்டு அலுவலர் | முறையீட்டு காலம் (நாள்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 36C-1 | R.D.O/AD (Mines) | கலெக்டர் | 30 | புவியியல் சுரங்கத் துறை ஆணையர் | 30 |
| 2 | 36C -2 | கலெக்டர் | புவியியல் சுரங்கத்துறை ஆணையர் | 30 | அரசு (தொழிற்துறை) | 30 |
| 3 | 36C-3 | புவியியல் சுரங்கத்துறை ஆணையர் | அரசு (தொழிற்துறை) | 30 | - | - |

**குத்தகை உரிமையை மாற்றுதல் (விதி 36- F):-**

அரசின் முன் அனுமதியின்றி குத்தகை உரிமையை மாற்ற முடியாது.

**கனிமங்கள் வெட்டி எடுத்தல் - நிபந்தனைகள்:-**

I. மாநில அளவிலான சுற்றுச்சூழல் துறையின் முக்கிய நிபந்தனைகள் State level Environment impact Assessment Authority –Environmental Clearance Conditions:-

1. .......மீட்டர் ஆழம் வரை கனிமம் வெட்டி எடுத்துக் கொள்ளலாம்.
2. 500 மீட்டர் சுற்றெல்லைக்குள் குடியிருப்புகள் இருத்தல் கூடாது
3. குத்தகை எல்லையைச்சுற்றிலும் இரும்பு கம்பிவேலி கல்லுக்கால்கள் நடப்பட்டு, சிகப்பு வண்ணக் கொடிகள் ஒவ்வொரு கல்லுக்கலிலும் கட்டப்படவேண்டும்.
4. 500 மீட்டர் சுற்றெல்லையில் பாலங்கள், அணைகள், வடிகால், மேல்நிலைநீர்த்தொட்டிகள் போன்ற நீர் ஆதாரம் தொடர்புடைய அமைப்புகள் இருத்தல் கூடாது.
5. குவாரிஸ்தலத்தில் முதலுதவிப்பெட்டி வைக்கப்பட வேண்டும்.

மேற்கொண்டு செய்து கொள்ளலாம்.
~~[ஆனா~~ [1971-ம் வருட வேலைவாய்ப்புச் சட்டப் பிரிவுகள் 7 மற்றும் 8]

7. வருவாய் அலுவலர்கள் முகாமிடும் போது பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளை ஆய்வு செய்யும் போது அனுசரிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் யாவை?

கிராம உதவியாளர் மற்றும் உடன் அங்கிருக்கும் பொதுமக்களிடம் பிறப்பு இறப்பு நிகழ்வுகளை கேட்டறிந்து ~~அச் அருண்டு பக~~ பதிவேடுகளில் உள்ள உண்மைத் தன்மையை கண்டறிவார்கள் மற்றும், இப் பதிவேடுகள் நாளது தேதிவரை முறையாக எழுதப்பட்டு மற்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வார்கள். [R.S.O.101]

8. பகுதி வேலைக்குரிய குறைந்த நேர வாரிய கூலி – விவரம்.

நாள் ஒன்றுக்கு ரூ146/-
[குறைந்தபட்ச கூலி சட்டம் 1948]

9. ஒரு குழந்தைக்கு வேறு பள்ளிக்கு மாறுவதற்கான உரிமை என்ன?

எந்தவிதமான கட்டணமோ, செலவுகளோ செய்ய வேண்டியதில்லை.
(2009 வருட, குழந்தைகளின் கட்டாய கல்வி உரிமைச் சட்டப் பிரிவு 3 மற்றும் 5)

10. ரெயில்வே நிர்வாகத்தினால் மணல் வெட்டி எடுக்கப் படுதல் குறித்து விவரிக்க.

[கனிமங்கள் (பிரிவு 18 ஐ) பார்க்கவும்]

சரியான விடை அளிக்கவும் (Marks 3×5=15)

1. மாவட்ட கருவூலம் தொடர்பாக கலெக்டருக்குரிய அதிகாரங்கள் யாவை?

மாவட்ட கருவூலம் தொடர்பாக கலெக்டருக்குரிய அதிகாரங்கள் குறித்து R.S.O. 115-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலக திண்டிக்கணக்கும், கருவூல நிலுவைகளை கலெக்டரால் மேற்கொள்ளப்பட வேண்டும். கருவூல இருப்பறை (Strong Room) திடீர் ஆய்வு அவ்வப்பொழுது அவரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நில அளவைக் குறிகளை பராமரித்தலில் கைப்பற்று தாரர்களுக்கும் மற்றும் V.A.O-க்களுக்கும் உள்ள பொறுப்புகள் யாவை?

[Chain Survey Manual (வாசக எண் 14) ஐ பார்க்கவும்]

3. வேளாண்மைக் கூலித் தொழிலாளருக்கு அறுவடைக்கான நியாயமான கூலி வழங்குவது தொடர்பான நடைமுறை யாவை விளக்குக.

[1956ம் வருட சட்டப் பாரா.3]

[உள்ளடக்கம் - வ.எண்: 5-ஐப் பார்க்கவும்]

4. ஒரு பொது டிரஸ்ட் எந்தக் காரணங்களினால் குத்தகை தாரரை வெளியேற்றலாம்?

[உள்ளடக்கம் - வ.எண் 6 ஐப் பார்க்கவும்]

5. அரசிதழ் பதிவு பெறா அலுவலர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்குதல் - விளக்குக.

அரசிதழ் பதிவு பெறா அலுவலர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்குதல் குறித்து R.S.O 131-ல் விவரிக்கப் படுகின்றது. தற்செயல் விடுப்பு, அலுவலர்களின் அடிப்படை உரிமை அல்ல. தற்செயல் விடுப்பினை ஞாயிறு மற்றும் இதர அரசு விடுமுறை தினங்களுடன் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் தற்செயல் விடுப்பு 10 தினங்களுக்கு மிகுதல் கூடாது. அரசுப் பணிக்கு எவ்வித குந்தகமுமின்றி தற்செயல் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம்.

விரிவான விடை அளிக்க (3 × 7 = 21 Marks)

1. பொது நோக்கங்களுக்காக கனிமம் குவாரி செய்திட அனுமதிப்பது தொடர்பான நடைமுறைகளை விவரிக்க.

[உள்ளடக்கம் - வ.எண்: 18-ஐப் பார்க்கவும்]

2. அரசால் கையகப் படுத்தப்பட்ட சர்க்கரை ஆலையின் உபரி நிலம் தொடர்பான விதிகள் யாவை?

[உள்ளடக்கம் - வ.எண் :- 2-ஐப் பார்க்கவும்]

3. சான்றொப்பமிடப்பட்ட நகல்களை வழங்குவதில் வட்டாட்சியர்கள், துணைவட்டாட்சியர்கள், கோட்ட அலுவலர்கள் மற்றும் கலெக்டர் ஆகியோருக்கு உள்ள அதிகாரங்கள் எவை?

[உள்ளடக்கம் வ.எண் 1 ஐ காண்க]

164

4. உரிய கைவிடுநர்களின் குடியமர்ப்பாற்குரிய தொகையினை நிர்ணயித்தல், ஒப்படைத்தல், வழங்குதல் மற்றும் வழங்கிடும் முறை குறித்து வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் யாவை?

[உள்ளடக்கம் - வ.எண் 9-ஐக் காண்க]

5. சர்வோதய பஞ்சாயத்தின் அதிகாரங்கள் யாவை?

சர்வோதய பஞ்சாயத்து என்பது பூதானச் சட்டம் 1958-ன் பிரிவு 2(ந)-ன்படி கிராமதான் கிராமத்திற்காக உருவாக்கப்பட்டதாகும். ஒரு வகையை கிராமத்தில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு கைப்பற்றுதாரர்கள் தங்கள் சொந்த கைப்பற்று நிலங்களை சட்டப்பிரிவு 2(உ)-படி தானமாகக் கொடுத்து, 'கிராமதான்' கிராமத்தை உருவாக்கி சர்வோதய பஞ்சாயத்து அதிகார எல்லைக்குள் வருதல். அரசு ஒரு அறிக்கை மூலம் 'கிராமதான்' கிராமம் என பிரகடனம் செய்து, சர்வோதய பஞ்சாயத்து, அதனுடைய கூட்டுறவு வேளாண்மை (co-operative farming) அதிகார வரம்புக்குள் கொண்டு வருதல் ஆகும்.

10. அரசின் ஆணைக்குப்பின், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் (Pollution Control Board) இசைவு பெறவேண்டும்.

11. சுற்றுச்சூழல் துறை அங்கீகாரம், அரசு ஆணை மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவு அடிப்படையில், மாவட்ட ஆட்சியரால் குத்தகை ஒப்பந்தமுறி (Lease Deed) பதிவு செய்து தரப்படும். அதன்பின் குவாரி பணிதுவங்கலாம்.

**மேல்முறையீடுகள்**

| வ. எண | விதி | குத்தகை உத்தரவிடும் அலுவலர் | மேல்முறையீட்டு அலுவலர் | முறையீட்டு காலம் (நாள்) | இரண்டாவது முறையீட்டு அலுவலர் | முறையீட்டு காலம் (நாள்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 36C-1 | R.D.O/AD (Mines) | கலெக்டர் | 30 | புவியியல் சுரங்கத் துறை ஆணையர் | 30 |
| 2 | 36C -2 | கலெக்டர் | புவியியல் சுரங்கத்துறை ஆணையர் | 30 | அரசு (தொழிற்துறை) | 30 |
| 3 | 36C-3 | புவியியல் சுரங்கத்துறை ஆணையர் | அரசு (தொழிற்துறை) | 30 | - | - |

குத்தகை உரிமையை மாற்றுதல் (விதி 36- F):-

அரசின் முன் அனுமதியின்றி குத்தகை உரிமையை மாற்ற முடியாது.

**கனிமங்கள் வெட்டி எடுத்தல் - நிபந்தனைகள்:-**

I. மாநில அளவிலான சுற்றுச்சூழல் துறையின் முக்கிய நிபந்தனைகள் State level Environment impact Assessment Authority –Environmental Clearance Conditions:-

1. .......மீட்டர் ஆழம் வரை கனிமம் வெட்டி எடுத்துக் கொள்ளலாம்.
2. 500 மீட்டர் சுற்றெல்லைக்குள் குடியிருப்புகள் இருத்தல் கூடாது
3. குத்தகை எல்லையைச்சுற்றிலும் இரும்பு கம்பிவேலி கல்லுக்கால்கள் நடப்பட்டு, சிகப்பு வண்ணக் கொடிகள் ஒவ்வொரு கல்லுக்கலிலும் கட்டப்படவேண்டும்.
4. 500 மீட்டர் சுற்றெல்லையில் பாலங்கள், அணைகள், வடிகால், மேல்நிலைநீர்த்தொட்டிகள் போன்ற நீர் ஆதாரம் தொடர்புடைய அமைப்புகள் இருத்தல் கூடாது.
5. குவாரிஸ்தலத்தில் முதலுதவிப்பெட்டி வைக்கப்பட வேண்டும்.

6. திறன் கொண்ட தூசி கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.
7. பூமியின் நீரோட்ட அளவுப்பகுதியைத்தாண்டி ஆழமாக கனிமம் வெட்டுதல் கூடாது.
8. உரிமம் பெற்ற வெடிமருந்து வெடிப்பாளரை (licenced blaster) மட்டும் கொண்டு குவாரியில் வெடிமருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்
9. குவாரியில் வெடித்தல் பணி துவங்குமுன் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தேவையான முன்னெச்சரிக்கை செய்தல் வேண்டும்.
10. பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் காதொலிப்பாதுகாப்புக்கருவிகள் (earmuffs) வழங்கப்பட வேண்டும்.
11. தேவையற்ற கழிவு உடைகற்குவியல்களைச் சுற்றி பாதுகாப்பான சிறிய கைப்பிடி, சுவர்கள் அமைத்தல் வேண்டும்.
12. சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டப்படி, பாறைச் சரிவுப் பகுதிகளில் புல் தரைகள் மற்றும் சிறுசெடிகள் பராமரிக்கவேண்டும்.
13. வேலையாட்களுக்கு, தேவையான இடைவெளிகளில் மருத்துவ ஆய்வு (Medical Check) செய்து, அவற்றிற்கான பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கவேண்டும். மற்றும் அவர்களுக்கு கையுறைகள், காலணிகள் மற்றும் முகமூடி உறைகள் வழங்கப்படவேண்டும்.
14. கிரானைட் மற்றும் பெருங்கனிமங்களைப் பொருத்து குவாரி செலவின ஆண்டறிக்கை, பெங்களூரில் உள்ள அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும்.
15. சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளில் குறிப்பிட்ட, சுற்றுச் சூழல் ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் படிவம் V-ல் மார்ச்சு 31-ம் தேதிக்குள் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அனுப்பவேண்டும்.
16. குவாரியில் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை மட்டுமே கல் உடைக்கும் பணி நடைபெற வேண்டும். மற்றும் இரவு நேரங்களில் வாகனங்களில் சரக்குகளை ஏற்றக்கூடாது.

II. அரசு, மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்படும் இதர நிபந்தனைகள்

1. அருகிலுள்ள பட்டாதாரர்கள்/பொதுமக்களுக்கு இடையூறின்றி குவாரிப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. குவாரிசெய்ய அனுமதிக்கப்பட்ட பரப்பில் மட்டும் குத்தகைதாரர் குவாரி செய்ய உரிமைஉண்டு.
3. ஆய்வு அலுவலர்கள் தணிக்கைக்கு வரும் பொழுது, தடைசெய்தல் ஆகாது.

4. குத்தகைதாரர் குவாரியில், புல எண், பரப்பு, குத்தகைதாரர்பெயர், குத்தகை ஆணை எண், குத்தகைத் தொகை, குத்தகைக்காலம் போன்ற விவரங்கள் அடங்கிய தகவல் பலகையைப் பராமரிக்க வேண்டும்.
5. குழந்தைத்தொழிலாளர்களை குவாரிப் பணியில் ஈடுபடுத்தக்கூடாது.
6. குத்தகைதாரர் குவாரியை வேறுயாருக்கும் மாற்றவோ உள்குத்தகைக்கு விடவோ கூடாது.
7. அனுமதிச் சீட்டை குவாரியில் இருந்துதான் வாகனங்களுக்கு கொடுத்து அனுப்பவேண்டும்.
8. கல்குவாரியில் தேவையற்ற உடைகல் மற்றும் இதர கழிவு பொருட்களை குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் மட்டும் குவித்து வைக்கவேண்டும்.

**தண்டனைக்குறிய (குற்ற) நடவடிக்கைகள் :**

1957-ம் வருட சட்டம் மற்றும் 1959-ம் வருட சிறு கனிமங்கள் சலுகை விதிகளின் படி சிறுகனிமங்களைப்பொருத்து செய்யப்படும் குற்றச்செயல்கள், சட்டப்பிரிவு 23 A-ன் படி R.D.O-ஆல் ராசி செய்து கொள்ளப்படலாம். 1960-ம் வருட கனிமங்களின் சலுகை விதிகளின்படி பெருங்கனிமங்களைப்பொருத்து செய்யப்படும் குற்றச்செயல்கள் மாவட்ட ஆட்சியரால் ராசி செய்து கொள்ளப்படலாம்.

சட்ட விரோதமாக குவாரிகளில் கல் உடைத்தல், மற்றும் அனுமதியின்றி திருட்டுத்தனமாக கனிமங்களைக் கடத்துதலுக்கு 1957ம் வருட சட்டப்பிரிவு-4-(1),(1A)-ன்படி குற்றம் செய்தவர் மீது நடவடிக்கை எடுக்க R.D.O. தகுதிபெற்ற அலுவலர்.

கனிம குத்தகைதாரர் கீழ்கண்ட நிபந்தனைகளை மீறும் செயல்களுக்கு அவரது கனிம குத்தகை உரிமத்தை ரத்து செய்யவோ அல்லது அபராதமோ விதிக்கலாம்.

1. கனிமச்சட்டம் மற்றும் விதிகளில் கண்ட நிபந்தனைகள்.
2. சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அத்தாரிட்டியால் Environment Impact Assessment Authority) விதிக்கப்படும் நிபந்தனைகள்.
3. மாசுகட்டுப்பாட்டு வாரியத்தால் விதிக்கப்படும் நிபந்தனைகள்.
4. மாவட்ட ஆட்சியரால்(குத்தகை ஒப்பந்தத்தில் (Lease Deed) விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.

அரசால் வழங்கப்படும் முறையான அனுமதிச்சீட்டின்றி/ நடைச்சீட்டின்றி மாட்டுவண்டி/டிராக்டர்/லாரி/டிப்பர் போன்ற வாகனங்களில் கனிமங்கள் கொண்டு செல்வது 1957-ம் வருட கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (அபிவிருத்தி மற்றும் மேம்பாடு) சட்டம் பிரிவு 4-1(A) மற்றும் 1959 –ம் வருட தமிழ்நாடு சிறுகனிம விதிகள் விதி 36-A-ன் படி அபராதம் விதிக்கக்கூடிய குற்றமாகும். மேலும் கனிமம், தளவாடங்களுடன் வாகனமும் சட்டப்பிரிவு 21-4-ன் படி பறிமுதல் செய்யலாம். அனைத்து வாகனங்களுக்கும் அபராதத் தொகை+ கனிமத் தொகை+ சீனியரேஜ் கட்டணம் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்படும். அதன் விவரம் பின் வருமாறு:-

| வ. எண் | கனிமம் | அபராதம் | கனிமத் தொகை (1யூனிட்டுக்கு) | அளவு (கனஅடி) | சீனியரேஜ் தொகை (2யூனிட்டுக்கு) |
|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் | Rs | Rs | | Rs |
| 1 | அரளை, தகடு கடக்கால் கம்பிக்கால் | 25,000/- | 380/- | - | 354 |
| 2 | ஜல்லி கற்கள், கனிமசக்கை (¾,1½ ஜல்லி) | 25,000/- | 380/- | - | 354 |
| 3 | மணல் | 25,000/- | - | - | - |
| 4 | கிராவல் மண் கரம்பை மண் சவுடு மண் | 25,000/- | 160/- 100/- | - | 198 |
| 5 | கூழாங்கற்கள் | 25,000/- | 160/- | - | 1170 |
| 6 | செம்மண், செங்கல்மண் | 25,000/- | 160/- | - | 156 |
| 7 | மாட்டுவண்டி | 25,00/- | - | - | - |

G.O.D.No. 107, தொழில் துறை நாள் : 6.7.2017 படி கனிமத் தொகையும் G.O. Ms.183 தொழிற்துறை நாள் : 28.12.2017 படி சீனியரேஜ் தொகையும் மேற்கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டது.

**வாகனங்களில் சாதாரணமாக லோடு ஏற்றும் அளவு :-**
**(Standard Load Capacity of vehicles)**

| | | | |
|---|---|---|---|
| 1. லாரி | : 2 யூனிட் | 2. டாரஸ் | : 4 யூனிட் |
| 3. ட்ராக்டர் | : 1 யூனிட் | 4. டிப்பர் | : 1½ யூனிட் |
| 5. மாட்டு வண்டி | : ¼ யூனிட் | 6. மினிலோடு வேன் | : 1 யூனிட் |

அபராதம் கட்ட வேண்டிய கணக்குத் தலைப்பு :-
0853-00-Non ferrous Mining and Metalurgical Industries
800 Mis . Receipts AC . Misc Receipts
0853-00-800-AC.0001

வாகனச் சோதனையின் போது தணிக்கை செய்ய வேண்டிய ஆவணங்கள் :-

| | | |
|---|---|---|
| 1 | அனுமதிச்சீட்டு /நடைச்சீட்டு | அனைத்து விவரங்களும், தேதி வழித்தடம் உட்பட சரியாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டும். |
| 2 | Goods/Carriage permit (G.C.P) | நாளது தேதி வரை புதுப்பிக்கப் பட்டுள்ளதா என்பது சரிபார்க்க வேண்டும். |
| 3 | Goods/ Vehicle Registration Certificate Form :23 | -do- |
| 4 | Driver's License | -do- |
| 5 | Public Carrier Insurance policy | -do- |

வாகனங்களில் கனிமம் ஏற்றிச் செல்லும் போது அனுப்புகைச்சீட்டு ஓட்டுநரிடம் இருக்க வேண்டும். அனுப்புகைச் சீட்டு முறையாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால், வாகனம் மற்றும் கனிமம் பறிமுதலுக்கு உள்ளாகும். அனுப்புகைச் சீட்டு

மாதிரிப் படிவம் :-

**இணைப்பு : 13 அ** (விதி 36 ஐக் காண்க)

**அனுப்புகைச் சீட்டு**

(சாதாரண உபயோக சிறுவகை அதாவது கட்டிடம், சாலை போடுதல், கற்கள், கிராவல், சாதாரண மணல், மண், களிமண் எடுத்துச் செல்வதற்காக வழங்கப்படுகிறது)

**வரிசை எண் :-**

1. அ) குவாரி குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி :

ஆ) குத்தகை வழங்கப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணை எண் மற்றும் நாள் :

இ) குத்தகைக் காலம் :

ஈ) இசைவாணைச் சீட்டின் எண் :

உ) செல்லுபடியாகும் காலம் :

2. குவாரி அமைந்துள்ள இடம் பற்றிய விபரம் :-

| மாவட்டம் | தாலுகா | குவாரி அமைந்துள்ள கிராமப் பஞ்சாயத்து | குவாரி அமைந்துள்ள வருவாய் கிராமத்தின் பெயர் | புல எண் | விஸ் தீரணம் | வகைபாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

3. எடுத்துச் செல்லப்படும் கனிமத்தின் பெயர் :

4. எடுத்துச் செல்லப்படும் கனிமத்தின் அளவு :

உதவி இயக்குநர்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை.

5. அ) சென்றடையும் இடம்

ஆ) எடுத்துச் செல்லப்படும் முறை
லாரி, டிரக், வேன் எண் :

இ) வாகனம் புறப்படும் நாள் :
நேரம் :

ஈ) சென்றடையும் இடத்தை சேர்வதற்கான
தேவையான கால அளவு (சுமாராக) :

6. வாகன ஒட்டுநரின் கையொப்பம் :

7. குவாரி உரிமைதாரர் அல்லது அவரின்
அதிகாரம் பெற்ற நபரின் கையொப்பம் :

குவாரியிலிருந்து நடைச்சீட்டு வழங்கும்
அதிகாரம் பெற்றவரின் ஒப்பம்

வாகனம் மற்றும் கனிமம் கைப்பற்றப்படும் பொழுது, வாகனஓட்டுநர் வாக்குமூலம் மற்றும் சம்பவ இடத்தில் இருந்தவர், குறைந்தது இருவரின் மகஜர் சாட்சி கையொப்பம் பெறப்பட வேண்டும். மகஜர் மாதிரிப் படிவம் :

**மகஜர்**

1. கைப்பற்றப்பட்ட நாள் :
நேரம் :

2. கைப்பற்றப்பட்ட இடம் :

3. யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது? :

4. யார் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது? :

5. யாரால் கைப்பற்றப்பட்டது? :

6. கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரம் :

மகஜர் சாட்சிகளின் (1)

கையொப்பம் (2)

கைப்பற்றிய அலுவலர் கையொப்பம்

குற்ற நடவடிக்கை:-

சட்டப்பிரிவு 4(1) மற்றும் 1(A)-ல் கண்ட விதிமுறை மீறல்களுக்கு 2 வருடம் வரை சிறை தண்டனை உண்டு. பிரிவு 21(2) –ல் கண்ட படியான விதி மீறல்களுக்கு 1 வருடம் வரை சிறை தண்டனை விதிக்கலாகும்.

**வீட்டு உபயோக மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கு மண் எடுக்க அனுமதி வழங்கல்**

உண்மையான விவசாயம், மண்பாண்டம் செய்தல் மற்றும் வீட்டு உபயோக பயன்பாட்டிற்காக, குடியிருப்பு அல்லது விவசாய நிலம் ஆகியவை அந்த வருவாய் கிராமம் (அ) அருகிலுள்ள வருவாய் கிராமத்தின் எல்லை வரம்பிற்குள் உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் கலெக்டர் / R.D.O விடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் / சம்பந்தப்பட்ட P.W.D / ஊரக வளர்ச்சித் துறையின் மேற்பார்வையில் எவ்வித கட்டணமுமின்றி விவசாயப் பயன்களுக்கு களிமண், சவுடு மண், கிராவல், வண்டல் மண்ணை குள உள்வாய், வாய்க்கால் மற்றும் நீர் தேக்கங்களில் எடுத்துக் கொள்ளலாம்.

எடுத்துக்கொள்ளக்கூடிய அளவு

1. நஞ்சை நிலம் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டரும் (1 ஹெக்டேருக்கு 185 கன மீட்டர்)

2. புஞ்சை நிலம் ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டரும், மண் பாண்ட தொழிலாளர்களுக்கு 60 கனமீட்டர் மண்ணும் கட்டணமில்லாமல் வழங்கப்படும்.

விவசாயிக்கு நிலம் சொந்தமாக உள்ளது என்பதற்கான V.A.O சான்று பெற்று தாக்கல் செய்ய வேண்டும். P.W.D. / ஊரக வளர்ச்சித் துறையால் புல வரைபடத்தில் வரையறுக்கப்பட்டு மண் எடுக்க நிர்ணயிக்கப்பட்ட புல எண்களின் பகுதிகள் அரசிதழில் விளம்பரம் செய்யப்படும். அவ்விடங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட அளவிற்கு மண் எடுத்துக் கொள்ள கலெக்டர் அங்கீகாரத்தின் பேரில் R.D.O – வால் அனுமதி வழங்கப்படும். கனிமத்தை எடுத்துக் கொள்ள அதிகபட்சம் 20 நாட்கள் வரை அனுமதி வழங்கப்படும்.

(அரசு ஆணை 50 தொழிற்துறை (எம்.எம்.சி : 2) நாள் : 27.04.2017)

Subject: ... May / Dec

Revenue Test Part III

without BOOKS



| Sl No | Question | Answer |
|---|---|---|
| 1. | கிராம ஊராட்சியின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் | V.A.O |
| 2. | சரகத்தில் R.I பயணம் செய்யப்பட வேண்டிய குறைந்த பட்ச நாட்கள் | 25 |
| 3. | நடப்பு பசலி அடங்கல் கணக்கினை பார்வையிட ரயத்திற்கு அனுமதி உண்டு | கட்டணமில்லாமல். |
| 4. | கால்நடைப் பட்டியில் அடைக்கப் பட்டுள்ள உரிமை கோரப்படா கால்நடைகள், வைத்திருக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச நாட்கள் | 14 |
| 5. | ஒரு பொது அறக் கட்டளைக்கு சுயவேளாண்மை செய்திட அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பு | 20 ஸ்டேண்டர்டு ஏக்கர் |
| 6. | நில உச்சவரம்பு சட்டப்பிரிவு 37(அ)-யின் படி உச்சவரம்பிற்கு மேல் நிலம் வாங்கிட அனுமதி கோர விண்ணப்பிக்க வேண்டிய அதிகார அமைப்பு. | அரசு |
| 7 | பயிரிடும் குத்தகைதாரர்கள் (பாதுகாப்பு) சட்டப்படி 1 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு சமமான தோட்ட ஏக்கர் நிலம் | 1½ |
| 8. | பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்றிட நில உரிமையாளர், விண்ணப்பித்துக் கொள்ள வேண்டிய அலுவலர் | R.D.O. |
| 9. | குத்தகைதாரர் (நியாய குத்தகை வழங்குதல்) சட்டப்படி மொத்த உற்பத்தியில் வழங்கப்பட வேண்டிய நியாயமான குத்தகை வீதம் | 25% |
| 10 | குத்தகைதாரர் (நியாயக் குத்தகை வழங்குதல்) சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய குத்தகை அமுலில் உள்ள கால அளவு. | 5 ஆண்டுகள். |

| Sl No | Question | Answer |
|---|---|---|
| 31 | ஆற்றுப் படுகையில் உள்ளடையான உள்ளூர் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்காக பொதுமக்கள் மண் எடுத்திட உரிமை | அனுமதி பெறாமல் இலவசமாக எடுத்திடலாம். |
| 32 | இரு கனிமங்கள் சலுகை எந்த விதியின் கீழ் ஆறுபுறம்போக்கில் கள்ளத்தனமாக மண் எடுத்துக்கு அபராதம் விதித்திட R.D.O. விற்கு அதிகாரம் உள்ளது? | விதி 36 A. |
| 33 | பசலி ஆண்டு என்பது | ஜூலை 1 முதல் ஜூன் 30 வரை |
| 34 | புலப்படச் அளவையின் (F.M.B) நகலினை விவசாயிக்கு வழங்குவது தொடர்பான நடைமுறை. | நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தியவுடன் மேல் |
| 35 | பொது அறக்கட்டளைக்கும் அதனுடைய பங்குதாரர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சனையை தீர்த்து வைப்பது. | வக்பு நீதிமன்றம் |
| 36 | நில சீர்திருத்த அதிகாரம் பெற்ற அலுவலருக்கு தகவல் அளித்திட மறுத்தாலோ (OR) தவறான தகவலை தந்தாலோ விதிக்கப்படும் அபராதத் தொகை | ரூ 2000/- வரை |
| 37 | இந்திய புதையல் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு. | 1878 |
| 38 | உச்ச வரம்பிற்கு மேல் நிலமுள்ளவர் அதற்கான அறிக்கையினைத்தனை நாட்களுக்குள் அளிக்க வேண்டும் | 30 நாட்கள் |
| 39 | வழக்குகளில் அரசு சார்பில் வாதுரை செய்ய அனுமதி [Sanction of defence] வழங்கும் அதிகாரம் பெற்றவர் | கலெக்டர் |
| 40 | பிறப்பு அல்லது இறப்பினை பதிவு செய்திட நிர்ணயிக்கப்பட்ட கால அளவு. | 21 நாட்கள். |

விரிவான விடையளித்தல்
Descriptive Type

[Marks 8 x 3 = 24]

**குறு வினாக்கள்**

1. குத்தகைதாரர் - விளக்குக
பயிரிடும் குத்தகைதாரரின் குத்தகையை உறுதி செய்து, நில உரிமையாளரால், முறையின்றி வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாக்கப்படுபவர் குத்தகைதாரர். [சட்டப்பிரிவு 3-1]

2. 1956-ஆம் ஆண்டின் குத்தகை சாகுபடி சட்டத்தின் கீழ் வாரப் பட்டியல் தயார் செய்து அறிவிப்பு செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது?
மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் உள்ளது.
[விதி 15(1)(i)]

3. எஸ்சீட்ஸ் (Escheats) விளக்கவும்:-
வாரிசு அற்று அரசிடம் சேரும் நிலம் மற்றும் சொத்துகளுக்கு பெவாரிசு (Escheats) என்று பெயர்
[R.S.O. 197]

4. அரசிற்கு வருவாய் காப்பீடாக (Security) பணத்தை (OR) நிலத்தை அளித்திடும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை என்ன?
ரூ100/- மதிப்பிற்குக் குறையாத முத்திரைத் தாளில் குறைந்தது இரு சாட்சிகளின் முன்னிலையில் உறுதிமொழி மற்றும் கையொப்பம் இடல் வேண்டும்.

5. பூதானம் (~~[illegible]~~ Gramdan) நிலங்கள் விளக்குக.
சர்வோதய பஞ்சாயத்து உருவாக ~~[illegible]~~ தானமாக வழங்கப்படும் நிலங்களுக்கு இப்பெயர்
[பூதானச் சட்டம், 1958 பிரிவு 2(d)]

6. குடியிருப்பிற்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெறத் தகுதியுடையவர் யார்? நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ஏற்புடையது இல்லை எனில், அதற்குரிய பரிகாரம் என்ன?
நில உரிமையாளர் பெறத் தகுதியுடையவர். இழப்பீட்டு தொகை ஏற்புடையது இல்லையெனில் நீதிமன்றத்தில் 90 நாட்களுக்குள்

மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.
~~[illegible]~~ [1971-ம் வருட குடியிருப்புச் சட்டப் பிரிவுகள் 7 மற்றும் 8]

7. வருவாய் அலுவலர்கள் கிராமப் பொது பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளை ஆய்வு செய்யும் போது அனுசரிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் யாவை?

கிராம உதவியாளர் மற்றும் உடன் அங்கிருக்கும் பொதுமக்களிடம் பிறப்பு இறப்பு நிகழ்வுகளை கேட்டறிந்து ~~[illegible]~~ பதிவேடுகளில் உள்ள உண்மைத் தன்மையை கண்டறிவார்கள் மற்றும், இப்பதிவேடுகள் நாளது தேதிவரை முறையாக எழுதப்பட்டு மற்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வார்கள். [R.S.O.101]

8. பகுதி வேலைக்குரிய குறைந்த நேர வாரிய கூலி – வரையறு.

நாள் ஒன்றுக்கு ரூ 146/-
[குறைந்தபட்ச கூலி சட்டம் 1948]

9. ஒரு குழந்தைக்கு பள்ளிக்கு மாணவராவதற்கான உரிமை என்ன?

எந்தவிதமான கட்டணமோ, செலவுகளோ செய்ய வேண்டியதில்லை.
(2009 வருட, குழந்தைகளின் கட்டாய கல்வி உரிமைச் சட்டப் பிரிவு 3 மற்றும் 5)

10. தனியார் வேளாண் வாகனத்தினால் மணல் வெட்டி எடுக்கப்படுதல் குறித்து விவரிக்க.

[கனிமங்கள் (பிரிவு 18 ஐ) பார்க்கவும்]

விரிவான விடை அளிக்கவும் (Marks 3×5=15)

1. மாவட்ட கருவூலம் தொடர்பாக கலெக்டருக்குரிய அதிகாரங்கள் யாவை?

மாவட்ட கருவூலம் தொடர்பாக கலெக்டருக்குரிய அதிகாரங்கள் குறித்து R.S.O. 115-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலக திடீர்ச் சோதனைகளும், கருவூல தணிக்கை கலெக்டரால் ~~[illegible]~~ மேற்கொள்ளப்பட வேண்டும். கருவூல இருப்பறை (Strong Room) திடீர் ஆய்வு அவ்வப்பொழுது கலெக்டரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நில அளவைக் குறிகளை பராமரித்தலில் கைப்பற்று தாரர்களுக்கும் மற்றும் V.A.O-க்களுக்கும் உள்ள பொறுப்புகள் யாவை?

[Chain Survey Manual (பாரா எண் 14) ஐ பார்க்கவும்]

3. வேளாண்மைக் கூலித் தொழிலாளருக்கு அறுவடைக்கான நியாயமான கூலி வழங்குவது தொடர்பான நடைமுறை யாவை விளக்குக.

[1956ம் வருட சட்டப் பாரா 3]

[உள்ளடக்கம் - வ.எண்: 5-ஐப் பார்க்கவும்]

4. ஒரு பொது டிரஸ்ட் எந்தக் காரணங்களினால் குத்தகை தாரரை வெளியேற்றலாம்?

[உள்ளடக்கம் - வ.எண் 6 ஐப் பார்க்கவும்]

5. அரசிதழ் பதிவு பெறா அலுவலர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்குதல் - விளக்குக.

அரசிதழ் பதிவு பெறா அலுவலர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்குதல் குறித்து R.S.O 131-ல் விவரிக்கப் படுகின்றது. தற்செயல் விடுப்பு, அலுவலர்களின் அடிப்படை உரிமை அல்ல. தற்செயல் விடுப்பினை ஞாயிறு மற்றும் இதர அரசு விடுமுறை தினங்களுடன் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் தற்செயல் விடுப்பு 10 தினங்களுக்கு மிகுதல் கூடாது. அரசுப் பணிக்கு எவ்வித குந்தகமுமின்றி தற்செயல் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம்.

விரிவான விடை அளிக்க (3×7 = 21 Marks)

1. பொது நோக்கங்களுக்காக கனிமம் குவாரி செய்திட அனுமதிப்பது தொடர்பான நடைமுறைகளை விவரிக்க.

[உள்ளடக்கம் - வ.எண்: 18-ஐப் பார்க்கவும்]

2. அரசால் கையகப் படுத்தப்பட்ட சர்க்கரை ஆலையின் உபரி நிலம் தொடர்பான விதிகள் யாவை?

[உள்ளடக்கம் - வ.எண் :- 2-ஐப் பார்க்கவும்]

3. சான்றொப்பமிடப்பட்ட நகல்களை வழங்குவதில் வட்டாட்சியர்கள், துணைவட்டாட்சியர்கள், கோட்ட அலுவலர்கள் மற்றும் கலெக்டர் ஆகியோருக்கு உள்ள அதிகாரங்கள் எவை?

[உள்ளடக்கம் வ.எண் 1 ஐ காண்க]

4. ஊரக கைவினைஞர்களின் குடியிருப்புக்குரிய தொகையினை நிர்ணயித்தல், ஒப்படைத்தல், வழங்குதல் மற்றும் வழங்கும் முறை குறித்து வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் யாவை?

[உள்ளடக்கம் - வ.எண் 9-ஐக் காண்க]

5. சர்வோதய பஞ்சாயத்தின் அதிகாரங்கள் யாவை?

சர்வோதய பஞ்சாயத்து என்பது பூதானச் சட்டம் 1958-ன் பிரிவு 2(ஈ)-ன்படி கிராமதான் கிராமத்திற்காக உருவாக்கப்பட்டதாகும். ஒரு கிராமத்தில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு கைபற்றுதாரர்கள் தங்கள் சொந்த கைப்பற்று நிலங்களை சட்டப்பிரிவு 2(உ)-படி தானமாகக் கொடுத்து, 'கிராமதான்' கிராமத்தை உருவாக்கி சர்வோதய பஞ்சாயத்து அதிகார எல்லைகளை வகுத்தல். அரசு ஒரு அறிவிக்கை மூலம் 'கிராமதான்' கிராமம் என பிரகடனம் செய்து, சர்வோதய பஞ்சாயத்து, அதனுடைய கூட்டுறவு விவசாய (Co-operative Farming) அதிகார வரம்புகளை கொண்டு வருதல் ஆகும்.